செப்டம்பர் 2015
Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/142/News/2015

# சோதிடகேசரி

ISSN 2012-5143
விலை ரூபா 75 /-
மலர்: 8 இதழ்: 6
புரட்டாதி மாத இதழ்





விஷ்கா
ஆர்ட்ஸ் & கிராப்ட்ஸ்
முருகா
கோயிலுக்கு தேவையான
மணி விற்பனைக்குண்டு
திருவாச்சி, கலசம், கொடிஸ்தம்பம், வெண்கல, கருங்கல் சிலைகள், சுவாமி சிலைகள் இன்னும் கோயிலுக்கு தேவையான உபகரணங்கள் பாரம்பரிய தொழில் நிபுணர்களால் செய்து தரப்படும். கோயிலிலுள்ள பழைய பித்தளை செம்பாலான பொருட்கள் நல்ல விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும். சுத்தமான வெண்கல மணி 10 கிலோவில் இருந்து 100 கிலோ வரை நல்ல ஓசை ஏற்படக்கூடிய விதமாக கோயிலுக்குள்ளேயே வைத்து செய்து தரப்படும். இலங்கையில் எல்லா பகுதிகளிலும் வேலை செய்து கொடுத்துள்ளோம். கலசம், கொடிஸ்தம்பம், பொலிஷ் செய்து தரப்படும். இந்தியாவிலிருந்து கும்பகோணம் மகாவலிபுரத்திலிருந்து கருங்கல்லினாலும் பஞ்சலோகத்தினாலும் ஆக்கப்பட்ட முருகன், லக்ஷ்மி, சரஸ்வதி, பிள்ளையார், சிவன் போன்ற சிலைகள் குறைந்த விலையில் தரப்படும், செம்பு, கொடிக்கம்பம் 23 அடி 19 அடி நல்லகனமான உலோகத்திலானவை 125 kg யை விட அதிக நிறை கொண்டவை. மிக அழகான முறையில் அலங்காரம் செய்யப்பட்டவை விற்பனைக்கு உண்டு.
இல. 166, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொ.பே. : 2336192, 2445776 | Hotline: 0772 774776 (Rayen)
E-mail : visgha.rayan@yahoo.com | www.visgha.net
எமக்கு வேறு கிளைகள் கிடையாது

சோதிடகேசரி
SOTHIDA KESARI
Astrological Magazine - Tamil
மலர்: 8 | இதழ்: 6



# மனித வாழ்வை முழுமையாக்குவது தெய்வபக்தியே!



உலகின் பிறவிகளில் எல்லாம் தலைசிறந்த பிறவியாய் கருதப்படுவது ஆறாம் அறிவு கொண்ட மனித பிறவி மட்டுமே. இறைவன் நம்மை மனித ராய் படைப்பத்திருப்பதே ஒரு பாக்கியம். இந்த பாக்கியத்தை பெற்றதன் நோக்கமே வாழ்வு தந்த இறைவனை எப்பொழுதும் நினைந்து வணங்கி கொண்டிருப்பது தான். இன்னும் சொல்லப் போனால், மெய்யன்பர்கள் சொல்வது போல் இறைச் சிந்தனை இல்லாத ஒவ்வொரு நாளும் நாம் பிறவாத நாளாகவே கருதப்படுதல் வேண்டும். தெய்வ பக்தி கொண்டாடுவது என்பது மனிதன் பின்பற்ற வேண்டிய மிகச் சிறந்த அறங்களிலேயேமுதன்மையானதாக விளங்குவதாகும்.

மனித ஜீவிதத்திற்கு அத்தியாவசிய தேவைகள் என்பன உணவு, உடை, உறைவிடம், மெய்யறிவு ஆகியவைகளேயாகும். அதைப்போலவே மனிதனுக்கு அடுத்த உடனடி தேவையாக இருப்பது தெய்வ வழிபாடு தான். ஏனெனில் அலைபாய்ந்து திரியும் மனித மனத்தை சீரிய சிந்தனைகளுடன் நெறிப்படுத்துவது தெய்வபக்தி தான். தெய்வ பக்தியில் திளைத்திருப்பவர்கள் நல்ல பண்புகளை பெற்றிருப்பார்கள். அதில் முக்கியமாக இடம் பெறுவது நல்லலொழுக்கமாகும். ஆகவே தான் தெய்வ பக்தியும் நல்லொழுக்கமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக போற்றப்படுகின்றன. இதைத் தான் பக்த பிரகலாதன், தெய்வ பக்தி வாய்க்க பெறாதவன் இரண்டு கால்களுடைய மிருக ஜென்மமே என்கின்றான். இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது, மனித வாழ்வை நெறிப்படுத்தி மனிதனை நற்பண்புகள் நிறைந்த மனிதனாய் வாழ வைப்பது தெய்வ பக்தி ஒன்று மட்டும் தான்.எனவே நாம் தவறாது தெய்வ பக்தி கொண்டவர்களாக வாழ்வதென்பது மெத்த அவசியமாகும்.

இம்மாத இதழில் புரட்டாதி மாதச் சிறப்புக்கள், சிறுவன் ஏன் சிரித்தான், ஏழுமலையான் தரிசனமும் திருவருளும் பெறுவோம், நெருப்பை அணைக்க மந்திரம், வியாசரின் காசி யாத்திரை, மேல்மருவத்தூரில் நவராத்திரி விழா, சிவலிங்கத் திருமேனியில் இஷ்ட தெய்வம், ஆஞ்சநேயர் தியானம், வேங்கடவன் திருவுருவம் போன்ற கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளும், புரட்டாதி மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்குமான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்குக் காணிக்கை ஆகின்றன.

- ஆசிரியர்

## மன்மத வருடம் புரட்டாதி மாதம் 18.9.2015 முதல் 17.10.2015 வரை

| | | | |
|---|---|---|---|
| கேது | | ல | |
| | ராசி 28.9.2015 சிம்ம சுக்கிரன் 4.10.2015 கன்னி புதன் | | சுக்கிரன் |
| | | | செவ்வாய் குரு (வ) புதன் |
| | சனி | சந்திரன் | சூரியன் ராகு |

| | | | |
|---|---|---|---|
| | செவ்வாய் | ல | சந்திரன் |
| சூரியன் சுக்கிரன் ராகு | 22.9.2015 கன்னி குரு 9.10.2015 துலாம் குரு | | சனி |
| | | | குரு (வ) கேது |
| புதன் | | | |

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 115 322700 (30 Lines) Fax: +94 112 439987
Website: www.virakesari.lk

# விமர்சன சிற்பிகள்




நான் சோதிட கேசரியை வழமையாக வாசித்து வரும் வாசகி. இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்கான படக்கதையும் மற்றவையும் அற்புதமாக உள்ளன. நன்றி.

ஆர்.சந்திரபிரபை,
பொகவந்தலாவ.

சோதிட கேசரியில் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வரும் மாதச் சிறப்புக்கள், கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. தொடரட்டும் உங்கள் சேவை.

க.கனகரட்ணம்,
முகத்துவாரம்.

சோதிட கேசரியில் வந்து கொண்டிருக்கும் ரிஷி வரலாறு பற்றியதான கட்டுரைகள் நல்ல புராணச் செய்திகளைத் தரத்தக்கனவாக உள்ளன. வாசிப்பதற்கும் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.

அமிர்தகடேஷ்வரன்,
கொழும்பு.

சோதிட கேசரியில் கடந்த சில மாதங்களாகப் பிரசுரமாகி வரும் போதி தர்மர் போதனைகள் குறித்தான கட்டுரைகள் கருத்தாழம் மிக்கனவாக இருப்பதோடு சிந்தனையை தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன.

ம.சமுத்திரராஜன்,
யாழ்ப்பாணம்

சோதிட கேசரி மாதந்தோறும் வழங்கி வரும் பிராணாயாமப் பயிற்சிகள் தொடர்பான கட்டுரைகள் குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் பயனளிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்!

G.வசந்தி
கோபாலகிருஷ்ணன்,
நீர்கொழும்பு

ஆலயங்களில் காணப்பெறும் சிற்பக்கலை நுணுக்கங்களும், அவற்றின் சிறப்புக்களும் சோதிடகேசரியில் படங்களுடன் சொல்லப்படுவது பாராட்டும்படியாக இருக்கின்றன.

ஆர்.அன்புச்செல்வி,
திருகோணமலை

## ஆத்மாவை தமக்குள்ளேயே காண்பார்கள்


# ஞானிகள்

கண்ணன்: சம்சாரம் என்ற அசுவத்த மரம், மேலே வேரும் கீழே கிளைகளும் கொண்டது. அது அழிவில்லாதது. வேதங்களே அதன் இலைகள், கண்டு. கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் நலன்களின் செயல்களே அதன் தளிர்கள், சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்கணங்களால் செழித்து வளர்த்த அதன் கிளைகள் கீழ்நோக்கிப் பரவியுள்ளன. மனித உலகில் பரவலாய்க் காணும் மொழிதலின் தொகுப்புகள் தான் பல்கிப் பெருகும் அதன் வேர்கள். இவ்வாறு வேதங்களே கூறுகின்றன. இதை அறிந்தவனே வேதத்தை அறிந்தவன்.

ஆதியும் அந்தமும் இல்லாத இந்த அசுவத்த மரம் கண்ணுக்குத் தெரிவதில்லை. இதற்கு அடியுமில்லை, முடிவுமில்லை, இருப்புமில்லை, வேரூன்றிய இந்த அசுவத்த மரத்தைக் கூரூன்றிய பற்றிலாமை எனும் உறுதி யான வாளால் வெட்டித் துணிந்திட வேண்டும். பிறகு அடைந்தவர் திரும்பாத இனிய உலகைத் தேடத் துணித்திட வேண்டும். முடிவில் அந்த மரத்தையே உண்டு பண்ணிய ஆதிபுருஷனை அடைந்து பணிந்திட வேண்டும். பற்றுதல் என்னும் குற்றத்தைப் பொசுக்கிட இன்ப துன்ப இரட்டை களை நீக்கிட கர்வம், மோகம், காமம் இவற்றை விலக்கிட ஆத்மஞானத்தைத் துலக்கி ஆத்மாவின் உண்மை வடிவத்தை அறிந்தவர்கள் அந்த அழிலிலா இடத்தை அடைகின்றனர். அந்த அற்புத இடத்தைச் சூரியனோ சந்திரனோ அல்லது பெரு நெருப்போ பிரகாசிக்கச் செய்வதில்லை. அது தானா கவே பிரகாசிக்கிறது. அதுவே எனது பரமபதம்.

அநாதியான என்னுடைய அம்சங்களில் ஒன்றான ஆத்மாதான் உலகெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. அதுவே உடம்பிலுள்ள மனம் முதலான ஆறு புலன்களுக்கும் தலைமை தாங்கி இங்குமங்கும் இழுத்துச் செல்லுகிறது. மலர்களின் மணத்தைக் காற்று எடுத்துச் செல்லுவதைப் போல், அந்த ஆத்மா உடல் எடுக்கும் போதும் அதை விடுக்கும் போதும் புலன்களைத் தன்னுடனே எடுத்துச் செல்லுகிறது. அது உடம்பிலுள்ள கண்ணால் பார்க்கிறது. காதால் கேட்கிறது, நாவால் சுவைக்கிறது, நாசியால் நுகர்கிறது, சதையால் உணர்கிறது, மனத்தால் நினைக்கிறது. அந்த ஆத்மா உடலை விடுவதையும் உடலில் படுவதையும், புலன்கள் மூலம் அனுபவிப்பதையும், குணங்களுடன் கூடி மிளிர்வதையும் மூடர்கள் அறிய மாட்டார்கள். ஞானக்கண் கொண்டவர்களே அறிவார்கள். அந்த ஞானிகள் ஆத்மா வைத் தங்களுக்குள்ளாகவே காண்பார்கள். மூடர்கள் எவ்வளவு தான் முயன்றாலும் அந்த ஆத்மாவை காண மாட் டார்கள்.

— சா.மெய்யப்பன்



# மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்

## 18.09.2015 முதல் 17.10.2015 வரை



## மேஷம்

கடவுள் மீது நம்பிக்கை வைத்து செயல்படும் மேச ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும் சந்திரனின் பார்வையும் பலமாக இருப்பதால் பண புழக்கம் வாழ்க்கையில் மேன்மை அமைய செய்யும்.

### பணியாளர்களுக்கு

பணி புரியும் இடத்தில் மேல் அதிகாரிகளின் நெருக்கடிகள் இருந்தாலும் பாதிப்பை தராது. தொழிற்சங்க பணிகளில் சிறப்பாக செயல்பட்டு தொழிலாளர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். பொருளாதாரத்தை தேவைக்கு தேடிக் கொள்வீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் மக்களிடம் நெருக்கமான தொடர்புகளை வைத்துக் கொள்வீர்கள். அதிகாரத்தில் இருப்பவர்களின் தொடர்புகள் கிட்டும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி அம்சத்தில் ராசியை பார்ப்பதால் சிரமங்களைஅடைய வேண்டி வந்தாலும் தொழிலில் கவனமாக செயல்பட்டு பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைதுறையினருக்கு ரசிகர்களின் ஆதரவுகள் நன்றாக இருக்கும். வெளியூர்களிலும் திவிழாக்களிலும் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் சிறப்பாக அமையும். பொருளாதார நிலை உயரும்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு திருமண வாய்ப்புகளும் குல தெய்வ வழிபாடு தீர்த்த யாத்திரை சென்று வரும் வாய்ப்புகளும் உண்டாகும். சுயதொழிலில் சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் ஏற்றம் பெற்று திகழ்வீர்கள். உயர்கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவால் நன்மையை பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

18.09.2015 வெள்ளி இரவு 07.28 முதல் 21.09.2015 திங்கள் அதிகாலை 03.46 மணி வரை

15.10.2015 வியாழக்கிழமை 02.44 முதல் 18.10.2015 ஞாயிறு பகல் 11.13 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சிறந்த அறிவாளிகளின் தொடர்புகளால் உங்களுக்கு புதிய தகவல்கள் கிடைக்கும் தொழிலில் கவனமாக இருந்து வருமானத்தை பெருக்கி கொள்வீர்கள்.

#### பரணி 1, 2,3,4 ஆம் பாதங்கள்

புதிய முயற்சிகள் கை கூடும். வாகன வசதிகளை பெறுவீர்கள். விவசாயம் செழிப்பாக இருக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

#### கார்த்திகை 1ஆம் பாதம்

திறமையான செயல்பாடுகளால் நிறைவாக செயல்களை செய்வீர்கள். அரசாங்க காரியம் அனுகூலமாக அமையும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, மஞ்சள், பச்சை

**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தென்கிழக்கு வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வியாழன், புதன்


**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு நல்லெண்ணெய் தீபம் போடவும். தொழிலில் நற்பலன்கள் பெறுவீர்கள்.

### குருவருள் வேண்டும்!

குரு என்ற சொல்லுக்கு பெரிய என்று பொருள். நிறைய பளு உடையதை குரு என்றும், பளு குறைவானதை லகு என்றும் குறிப்பிடுவர்.

மகான்கள் நமக்குக் குருவாக அமர்ந்து நம்மை வழி நடத்துபவர்கள். இறைவனின் பேரருளை, நமக்கு எளிமையாகப் பெற்றுத்தரும் தெய்வீக சக்தி நிரம்பியவர்கள்.





# தொழிலாளி

நீங்கள் ஓர் இயந்திரத் தொழிலாளியைக் கனவில் கண்டால் நீங்கள் எந்த அளவுக்குச் சுகமான (அதாவது உழைப்பு இல்லாத்) வாழ்க்கை வாழ ஆசைப்படுகிறீர்களோ அந்த அளவுக்கு உங்கள் சிரமங்கள் கூடுதல் ஆகும். நீங்கள் கடினமாக உழைத்தாக வேண்டியது இருக்கும். ஆகையால் முதலிலேயே கடினமான உழைப்புக்கு தயார் ஆகிவிடுங்கள். உங்களுக்குச் சுகமான வாழ்க்கை கிடைக்கும்.

நீங்கள் ஒரு சலவைத் தொழிலாளியைக் கனவில் கண்டால் உங்கள் தகுதிக்கும் மேற்பட்ட ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்கான சில வசதிகள் உங்களுக்கு விரைவில் கிடைக்கப் போகின்றன. ஆனால், அந்த வசதி உங்களுக்கே சொந்தமானவையாய் இரா. அவை பிறருடைய பொருள்களாய் இருக்கும் என்றாலும் அந்தப் பொருள்களை நீங்கள் உங்களுக்கே சொந்தம் ஆக்கிக் கொள்ள ஆசைப்படாதிருக்கும் வரையில் அவற்றை நீங்கள் ஆனந்தமாக அனுபவிப்பதற்கு யாதொரு தடையும் இராது.

நீங்கள் ஒரு நெசவாளரைக் கனவில் கண்டால் ஒரு பெரிய மனிதருடைய இரகசியம் ஒன்றை நீங்கள் கண்டுபிடிக்கப் போகிறீர்கள். அது வெளியே தெரிந்தால் அவருடைய மானமே போய்விடும். ஆகையால் அந்த இரகசியத்தை நீங்கள் யாரிடமும் வெளியிடாமல் காப்பாற்ற வேண்டும். அப்படி வெளியிட்டு விட்டீர்களானால், அவரால் உங்களுக்குப் பல தாங்கமுடியாத தீங்குகள் ஏற்படும். ஆகையால், எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு பொற்கொல்லரைக் கனவில் கண்டால், சில பெரிய இடத்துப் பெண்களோடு நெருங்கி பழகக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு ஏற்படப் போகிறது. அந்தப் பெண்களும் உங்களிடத்தில் பிரியமாக இருப்பார்கள். அவர்கள் மூலம் நீங்கள் எத்தகைய வசதிகளை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், தவறான ஆசைகளுக்கு மட்டும் உங்கள் உள்ளத்தில் நீங்கள் இடம் கொடுக்கக்கூடாது. அப்படி இடம் கொடுத்தால் இந்த ஆசைகள் நிறைவேறாதது மட்டும் அல்ல. நீங்கள் பல இன்னல்களுக்கும் உள்ளாவீர்கள்.

முடிதிருத்தும் ஒரு தொழிலாளியைக் கனவில் கண்டால் நீங்கள் சில வீணான தொல்லைகளையும் தேவையற்ற பொறுப்புகளையும் உங்கள் தலைமேல் இழுத்துப் போட்டுக் கொண்டு திண்டாடுகிறீர்கள். நீங்கள் அவற்றிலிருந்து விடுபட முயல வேண்டும். அதனால் சில உறவினர்களின் அல்லது நண்பர்களின் மனவருத்தத்துக்கு நீங்கள் ஆளாகலாம். அதைப் பொருட்படுத்தாதீர்கள். உங்கள் கடமைகளை மட்டும் குறைவு இல்லாமல் செய்து முடித்துவிட்டு ஒதுங்கிக்கொள்ளுங்கள். அப்போது தான் நீங்கள் சௌக்கியமாக வாழ முடியும்.

மேலே குறிப்பிட்டவர்களைத் தவிர, பிற தொழிலாளர்களைக் கனவில் கண்டால் இன்னும் சிறிது காலம் வரை, உங்கள் வாழ்க்கையில் வறுமையும் செழிப்பும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும் (ஆனால் எந்தக் காலத்திலும் வேலையில்லாத் திண்டாட்டம் மட்டும் வரவேவராது).


ஆகையால் செழிப்பான காலத்தில் சிக்கனமான வாழ்க்கை நடத்தி, வறுமைக் காலத்தைச் சமாளிப்பதற்கு வகை செய்து கொள்ளுங்கள்.

— தமிழ்வாணன்

## புரட்டாதி மாதத்து

# சுபதினங்கள்

திருமணம், வாசல்கால் வைக்க, கடன் வாங்க, வாகனம் வாங்க, தொழில் துவங்க, மாங்கல்யம் செய்ய, கிரக பிரவேசம்



| திகதி | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | நேரம்/காலை | லக்னம் | பிறை |
|---|---|---|---|---|---|---|---|
| 23.09.2015 | புதன் | தசமி | உத்திராடம் | அமிர்த | 10.00 11.00 | விருச்சிகம் | வளர் |
| 24.09.2015 | வியாழன் | ஏகாதசி | திருவோணம் | சித்த | 10.00 11.00 | விருச்சிகம் | வளர் |
| 25.09.2015 | வெள்ளி | துவாதசி | அவிட்டம் | சித்த | 10.00 10.30 | விருச்சிகம் | வளர் |
| 07.10.2015 | புதன் | தசமி | பூசம் | சித்த | 09.00 10.00 | விருச்சிகம் | தேய் |
| 14.10.2015 | புதன் | துவாதசி | சுவாதி | சித்த | 09.00 10.00 | விருச்சிகம் | வளர் |

திருமணம், வாசல் கல், கிரக பிரவேசம் இம்மாதம் தவிர்க்கவும்

### சாந்தி முகூர்த்தம்

14.10.2015 புதன்
இரவு 10.00 11.00 வளர்

### கடன் தீர்க்க

| | | | |
|---|---|---|---|
| 19.09.2015 | சனி | பகல் | 12.00 01.00 |
| 22.09.2015 | செவ்வாய் | பகல் | 12.00 01.00 |
| 26.09.2015 | சனி | பகல் | 12.00 01.00 |
| 27.09.2015 | ஞாயிறு | பகல் | 11.00 12.00 |
| 29.09.2015 | செவ்வாய் | பகல் | 12.00 01.00 |
| 03.10.2015 | சனி | பகல் | 12.00 01.00 |
| 06.10.2015 | செவ்வாய் | பகல் | 12.00 01.00 |
| 10.10.2015 | சனி | பகல் | 12.00 01.00 |
| 17.10.2015 | சனி | பகல் | 12.00 01.00 |



கணிப்பு: சோதிடர்
வாழப்பட்டி
R.ஆனந்தன்



### சத்திர சிகிச்சை செய்து குழந்தை எடுக்க

| திகதி | கிழமை | நேரம்/பகல் | லக்னம் |
|---|---|---|---|
| 19.09.2015 | சனி | 12.30 01.30 | தனுசு |
| 23.09.2015 | புதன் | 01.30 02.00 | தனுசு |
| 24.09.2015 | வியாழன் | 12.30 01.30 | தனுசு |
| 25.09.2015 | வெள்ளி | 12.00 01.00 | தனுசு |
| 26.09.2015 | சனி | 12.00 01.00 | தனுசு |
| 27.09.2015 | ஞாயிறு | 10.00 11.00 | தனுசு |
| 28.09.2015 | திங்கள் | 12.00 11.00 | தனுசு |
| 29.09.2015 | செவ்வாய் | 12.00 01.00 | தனுசு |
| 03.10.2015 | சனி | 12.00 01.00 | தனுசு |
| 04.10.2015 | ஞாயிறு | 11.30 12.00 | தனுசு |
| 09.10.2015 | வெள்ளி | 09.00 10.30 | விருச்சிகம் |
| 10.10.2015 | சனி | 11.30 12.30 | தனுசு |
| 11.10.2015 | ஞாயிறு | 11.00 12.00 | தனுசு |
| 14.10.2015 | புதன் | 11.00 12.00 | தனுசு |
| 16.10.2015 | வெள்ளி | 09.40 10.10 | விருச்சிகம் |
| 17.10.2015 | சனி | 10.45 11.30 | தனுசு |



# அவன் அருளாலே அவன்தாள் வணங்குவோம்!

அனைத்து பாவங்களும் தீருமா,? தீராதா? என்பது நாம் செய்யும் தர்மத்தைப் பொறுத்தது. நாம் செய்யும் நல்வினைகளை புண்ணியம் என்றும், தீய வினைகளை பாவம் என்றும் அழைக்கிறோம். எப்படி ஒரு வங்கியில் கடன் வாங்கியிருந்தால் நாம் பணத்தைத் திரும்பச் செலுத்தினால் கடன் தீருகிறதோ அதுபோல சில தீய வினைகளினால் விளைந்த பாவங்களை சில தர்ம காரியங்களினால் விலக்கிக் கொள்ளலாம். சிலவற்றை அனுபவித்தே தீர வேண்டும்.

நாம் நமது அழுக்குத் துணியைத் தூய்மைப் படுத்துவதற்காக சலவையாளரிடம் கொடுத்தால், அவர் துணியில் இருக்கும் அழுக்கைப் போக்கலாமே தவிர, துணியிலேயே இருக்கக்கூடிய கறையைப் போக்க முடியாது. துணி இருக்கும் வரை கறையும் இருக்கும் இது போன்று நமது வினைகளுக்கு ஏற்ப பலன்கள் மாறுபடும். எல்லா வினைகளும் ஒரே பலன்களைத் தராது. தவறு செய்பவர்கள் திருந்தினால் நாம் வரவேற்கவேண்டும். தவறு செய்தவர்களும் தங்கள் தவறை உணர்ந்து, இனியும் தவறு செய்யாமல் இருக்க கடவுள் வழிநடத்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நேர்த்திக் கடன்களைச் செலுத்துவாரேயானால், கண்டிப்பாக அவர்களின் பாவ மூட்டைகளின் பாரம் குறையும்.

அவ்வாறு இல்லாமல் தவறு செய்தால் கடவுளுக்கும் சிறிது கொடுத்துவிடலாம் என்று தவறாகக் கடவுளைப் புரிந்து கொண்டார்களேயானால், அவர்களைக் கடவுள் காப்பாற்ற மாட்டார். அவர் அனைத்தும் அறிந்தவர் அவரிடம் நமது ஆதிக்க எண்ணங்கள் செயலிழந்து போய்விடும். எப்படி ஒரு கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, மருத்துவர் சிறப்புக் கவனம் செலுத்துகிறாரோ, அது போன்று தர்மத்துக்குத் தீங்கு விளைவிப்பவர்களை தன்னிடம் வரவழைக்கச் செய்து அவர்களையும் நல்வழிபடுத்த கடவுளே அனுமதிக்கிறார். இதனாலேயே அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்கிறோம். தீயவர்கள் என்று நாம் எண்ணும் சிலரிடமும் சில நன்மைகள் இருக்கும். இல்லையேல் அவர்களால், ஆலயத்தில் நல்ல காரியங்களைச் செய்ய முடியாதே! ஆலயத்தில் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டின் மூலம், எல்லா ஜீவராசிகளுக்கும் செய்யக்கூடிய தொண்டாக அவை மாறி, அதனால் கண்டிப்பாக அவர்களின் எண்ணங்களில் ஒரு தெளிவு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.



# புரட்டாதி மாத சிறப்புக்கள்!

தமிழ் மாதங்களில் புரட்டாதி மாதம் ஆறாவது மாதமாக வருகின்றது. சூரியன் கன்னிராசியில் நுழைந்து அங்கிருந்து வெளியே வருகின்ற நாள் வரையிலான காலம் அல்லது நாட்கள் புரட்டாதி மாதமாகின்றது. இம்மாதம் திருப்பதி ஏழுமலையானுக்கு மிகவும் உகந்த மாதமாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால் இம்மாதமே மகாவிஷ்ணு பூமியில் வெங்கடேசப் பெருமாளாக அவதரித்த மாதமாகும். இதன் காரணமாகவே திருப்பதியிலும் கூட புரட்டாதி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது.

பன்னிரண்டு தமிழ் மாதங்களுக்கும் வெவ்வேறு தனிச் சிறப்புக்களும் பண்டிகைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றின் அடிப்படை நோக்கங்களாக இருப்பது தெய்வ வழிபாடுகளும் அவற்றால் மனிதர்களுக்குக் கிட்டுகின்ற அருள் மிகுந்த ஆத்ம பலமும் அமைதி பொங்கும் மனமகிழ்ச்சியும்தான். புரட்டாதி மாதம் வந்து விட்டாலே கோவிந்தனைப் பற்றிய சிந்தனையும், கோவிந்தா கோவிந்தா என்ற நாம சங்கீர்த்தனமும் எங்கும் ஒலிக்கக் கேட்கலாம். அதிலும் புரட்டாதி மாதச் சனிக்கிழமைகள் பெருமாளுக்கு உகந்த தினமாகவும், வழிபாடு செய்து பயனடையும் நாளாகவும் பக்தர்களால் கருதப்படுகின்றது.

பரம்பொருளாக விளங்குகின்ற எம் பெருமான் வெங்கடேசப் பெரு மாள் புரட்டாதி மாதத்தில் தனது பக்தர்கள் யாவரும் தம்மை நெருங்கி வரவேண்டுமென விரும்புகிறார். ஆயினும் எல்லா பெருமாள் பக்தர்களும் புரட்டாதி, மாதத்தில் திருப்பதிக்குச் சென்று வருவது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும். எனவேதான் திருப்பதி செல்ல இயலாதோர் அருகில் உள்ள பெருமாள் கோயில்களுக்குச் சென்று வழிபடுகின்றனர். மற்றும் சிலர் தமது இல்லங்களிலேயே மாவிளக்கேற்றியும், பூஜைகள் செய்தும் வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். அதோடன்றி, புரட்டாதி மாதம் சனி பகவானுக்கு மிகவும் ஏற்றதாகும் என ஆன்மீகச் சான்றோர்கள் தெரிவிக்கின்றனர். புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனி பகவான் தனது சக்தியை இழந்து விடுவதாகவும் அச்சமயத்தில் சனீஸ்வரரை வழிபட்டால் பக்தர் களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும் என்றும் நம்பப்படுகின்றது. பெரும்பாலான பக்தர்கள் புரட்டாதி மாதம் முழுவதிற்கும் அசைவ உணவை நீக்கி விரதமிருக்கின்றனர். சிலர் குறைந்த பட்சம் புரட்டாதிச் சனிக்கிழமைகளிலாவது சுத்த சைவ உணவை உண்பது, ஒரு பொழுது உண்பது எனத் தங்களால் இயன்றவரை விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

பெருமாளின் அம்சமாய் கருதப்படும் புதனுடைய வீடு கன்னி, இக்கன்னியில் சூரியன் வந்து

அமர்வது புரட்டாதி மாதத்தில் தான் என் பதால் திருமாலுக்குச் செய்ய வேண்டிய பஜனைகள் பிரம்மோற்சவங்கள் என்ற அனைத்தும் நடைபெறுகின்றன. புதனுக்கு நட்புக்கிரகமாக விளங்குவது சனிபகவான். அதனாலேயே புரட்டாதி மாதத்தில் வரக் கூடிய சனிக்கிழமைகள் விஷேடமாகக் கொண்டாடப்படுகிறது.புதனுடைய வீடாகிய கன்னியில் சூரியன் வந்து விழும் காலம் புரட்டாதி மாதமாவதாலும் புதனின் அம்ச மாகப் பெருமாள் இருப்பதாலும் புரட்டாசி மாதத்தை பெருமாளுக்கான மாதமாகப் போற்றுகின்றார்கள்.



நவராத்திரி விழா என்பது புரட்டாதி மாதத் தில் வருகின்ற மற்றுமொரு முக்கியமான விழாவாகும். நவராத்திரி விழா ஒரு பெரும் இந்துப் பண்டிகை யாக உலக முழுவதும் இந்துக்களால் கொண்டாடப்ப டுகின்றது. இவ்விழாவினை தென்னிந்தியாவில் நவ ராத்திரி என்றும் மைசூர் உள்ளிட்ட கர்நாடகாவின் சில பகுதிகளில் தசரா என்றும் வட இந்திய மாநி லங்களில் இவ்விழா துர்க்காபூஜை என்றும் விஜய தசமி என்றும் கொண்டாடப்படுகின்றது. எப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட போதிலும் இவ் விழாவா னது துர்க்கை வழிபாட்டுக்குரியதே ஆகும். துர்க்கா தேவி ஒன்பது நாட்கள் மகிஷா சுரனை எதிர்த்துப் போரிட்டு கடைசி நாளான 10 ஆம் நாளில் வெற்றி கொள்கிறாள். இதனையே நவராத்திரியாகவும், வெற் றிகண்ட நாளை விஜய தசமியாகவும் கொண்டாடுகி றார்கள்.


இது துர்க்கையை வழிபடும் பண்டிகை என் றாலும் வாழ்வியல் வளங்களான செல்வம், அறிவு மற்றும் சக்தி ஆகிய மூன்றையும் பெற்றிட சரஸ்வதி, லட்சுமி பார்வதி ஆகிய முப்பெரும் தேவியரையும் இந்த நவராத்திரித் திருநாளில் வணங்குகின்றோம். முதல் மூன்று நாட்கள் வெற்றியை வேண்டி துர்க்கா தேவி யையும் அடுத்த மூன்று தினங்களும் செல் வத்தை வேண்டி இலக்குமியையம் இறுதி மூன்று தினங்களும் கல்வியும் ஞானமும் வேண்டி சரஸ்வதி யையும் வழிபடுகின்றோம்..

தென்னிந்தியாவிலும் வட இந்தியாவின் சில பகுதிகளிலும் கொலு வைப்பது நவராத்திரிப் பண் டிகையின் ஒரு முக்கிய அம்சமாகும். கொலு வைக் கப்படும் ஒன்பது நாட்களும் ஒன்பது படிகளில் கீழே முதல் மூன்று படிகளில் உயிர்வாழ அடிப்படைத் தேவையான உணவு, காய், கனி, வயல் வரப்புகள், கறவை மாடுகள் மண் போன்றவற்றையும் அடுத்த மூன்று படிகளில் சாதாரண மனிதர்களைக் குறிக்கும் மனித பொம்மைகள் வீடு, வாகனங்கள், ராஜாராணி பொம்மைகள் போன்றவற்றையும், மேல் மூன்று படி களில் தெய்வ உருவங்களையும் அழகாக அடுக்கி வைக்கின்றார்கள். இந்த ஒன்பது நாட்களும் நவ ராத்திரி கொலு வைக்கும் பெண்கள், சுமங்கலிப் பெண்களை வீட்டுக்கு அழைத்து தாம்பூலம் மற்றும் நைவேத்தியங்களை தந்து உபசரிப்பார்கள். கொலு சமயத்தில் வீட்டிற்கு வரும் பெண்கள் அம்மன் பாடல்களைப் பாடி பஜனைகள் செய்து தெய்வீக மணம் கமழச் செய்வார்கள். மேலும் இச்சந்தர்ப் பத்தில் விருந்தோம்பல், நட்பு ஒற்றுமை ஆகிய நல்ல பண்புகளும் பெண்களிடையே ஓங்குகின்றன.



புரட்டாதி மாதம் நவமி திதியில் வரும் சரஸ்வதி பூஜை நினைத்தன்று, அதிகாலை எழுந்து குளித்து ஆசார அனுஷ்டானங்களை முடித்து புதுத்துணி அணிய வேண்டும் கோயிலுக்குச் சென்றோ அல்லது வீட்டில் சரஸ்வதி படத்தை வைத்தோ தேங்காய், பழம், அவல், பொரி கடலை, வெல்லம் முதலியவற்றை நிவேதனப் பொருட்களாக வைத்து தூப தீபம் காட்டி மனமுருகிப் பிரார்த்தனை செய்ய வேண்டும். வெண்தாமரை மலர் கொண்டு அர்ச்சனை செய்து வழிபட்டு போற்ற வேண்டும். சரஸ்வதி தேவியை இவ்வாறு பூஜிப்பதால் கல்வி, அறிவாற்றல், ஞானம் ஆகிய வற்றைக் குறைவின்றிப் பெறலாம்.

# சிறுவன் ஏன் சிரித்தான்?



"சித்திரபுரத்தனி" அரசன் வேட்டையாடுவதில் மிகுந்த பிரியம் உள்ளவன்.

ஒரு நாள் வேட்டைக்காகக் காட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு வேப்பமரத்தின் அடியில் அழகான பெண் ஒருத்தி நின்று கொண்டிருப்பதை அரசன் பார்த்தான். அவள் அருகில் சென்று, "பெண்ணே நீ யார்?" ஏன் இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டான்.

"இந்தக் காட்டில் வாழும் கானக முனிவரின் மகள்" என்று பதில் அளித்தாள் அந்தப் பெண். அரசன் அந்தப் பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள எண்ணி அதற்காக அவளிடம் நெருங்கி, உரையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கே அரக்கன் ஒருவன் வந்து, அவர்கள் இருவரையும் விழுங்க முன்றான். அரக்கனிடம் நயமான வார்த்தைகள் கூறி, தங்களை விட்டு விடுமாறு மன்றாடினான் அரசன்.

அரக்கன் அரசனைப் பார்த்து, "பெற்றோர் உயிரோடு உள்ள ஒரு வாலிபனைக் கொண்டு வந்து, எனக்கு இரையாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டால் உங்கள் இருவரையும் விழுங்காமல் விட்டு விடுகின்றேன்" என்று சொன்னான் அரக்கன். அரசன் அதற்குச் சம்மதித்தான். அதனால் அரக்கன் அவர்களை விட்டு விட்டான். அரசன் தன்னுடைய நகரத்தக்கு வந்து சேர்ந்தான். அரக்கனுக்கு இரையாகக் கொடுப்பதற்காக ஒரு வாலிபனை யாராவது விலைக்குக் கொடுக்கச் சம்மதிக்கிறார்களா? என்று விசாரித்தான் அரசன்.

ஒரு பிராமணன் தன்னுடைய மகனைக் கொடுப்பதாக முன் வந்தான் அரசன் அவனுக்குப் போதுமான பொருளைக் கொடுத்து, அவன் மகனைப் பெற்றுக் கொண்டான். பிறகு பிராமணச் சிறுவனைக் கூட்டி கொண்டு போய் அரக்கனிடம் ஒப்புவித்தான் அரசன். அரக்கன் அந்தச் சிறுவனைத் தின்ன முயன்றான். ஆனால் அவன் அரக்கனைப் பார்த்துச் சிரித்தான். அவன் சிரிப்பதைக் கண்ட அரக்கன் அவனைத் தின்னாமல் விட்டு விட்டான். "அந்த பிராமணச் சிறுவன் சிரித்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டது வேதாளம்.

"ஒருவனுக்கு தீங்கு நேர்ந்தால் பெற்றோர்களிடம் சொல்ல வேண்டும். பெற்றோர்களால் தீங்கு நேரிடுமானால் அரசனிடம் கூற வேண்டும். அரசன் தீங்கு செய்வானானால் தெய்வத்திடம் முறையிட வேண்டும். தெய்வமே தீங்கு செய்யுமானால் பிறகு யாரிடம் போய்க் கூறுவது? என்று எண்ணியே அவன் சிரித்தான்" என்று கதையை விடுவித்தான் விக்கிரமாதித்தன். உடனே, வேதாளம் கட்டு அவிழ்த்துக் கொண்டு ஓடிப்போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. விக்கிரமாதித்தன் அதைத் தொடர்ந்து போய் கட்டித் தூக்கிக் கொண்டு வந்தான். வேதாளம் மறுபடியும் கதை சொல்லத் தொடங்கியது.

— கே.பரமகுரு

## மதுராவில் கிருஷ்ணர் கோவில்!

மதுராவில் தேவகி வசுதேவருக்கு எட்டாவது மகனாக அவதரித்தார் கிருஷ்ணர். அவர் பிறந்த இடம் ஒரு சிறிய சிறைச்சாலை, தற்போது, அந்த இடத்திற்கு மேல் "சுத்ர கேஷப் தேவ்" என்ற கிருஷ்ணர் கோவில் எழுப்பப்பட்டுள்ளது. மதுராவில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரம் பயணித்தால் யசோதையால் கண்ணன் வளர்க்கப்பட்ட கோகுலத்தை சென்றடையலாம். இப்படி, மதுராவில் பிறந்து, கோகுலத்தில் வளர்ந்த கண்ணன் கம்சனைக் கொன்று துவாரகையில் அரசாட்சி செய்தார்.

# மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்
## 18.09.2015 முதல் 17.10.2015 வரை



# ரிஷபம்

எதையும் எளிமையாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் கொண்ட ரிஷப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சாதகமான கிரக அமைப்பு இல்லாவிட்டாலும் எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும்.

### பணியாளர்களுக்கு

தொழில் செய்யுமிடத்தில் சிரமங்கள் இருந்து வந்தாலும் அதிலிருந்து விடுபட முயற்சிகளை எடுப்பீர்கள். தொழிற்சங்க விடயங்களில் ஆர்வமின்றி இருப்பீர்கள். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கமாக இருக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் முழு ஈடுபாடுகளை குறைத்து கொள்வீர்கள். அரசாங்க அதிகாரிகளிடம் ஒரு விடயத்திற்கு பல முறை அலைய வேண்டி வரும். பொருளாதாரத்தில் சுமாரான பலன்களே இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி சனி பார்வை படுவதால் தொழிலில் முயற்சிகளால் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். தொழிலாளர்களின் ஒற்றுமை இன்மையால் சில சிரமம் உண்டாகும். பொருளாதாரத்தில் பற்றாகுறை உண்டாகும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் போட்டிகளை சமாளிக்கும் நிலை உண்டாகும். கலைநிகழ்ச்சிகளில் வாய்ப்புகள் கிட்டும். பொருளாதாரத்தில் பண வரவு செலவு சமமாக இருக்கும்.

### பெண்களுக்கு

குடும்ப பாரம் சில நேரம் உங்களின் மனத்தை பாதிக்கும். விழிப்புடன் செயல்பட்டு எல்லா வற்றையும் சரி செய்வீர்கள். சுயதொழிலில் சுமாரான பலன்களே இருந்து வரும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் ஞாபக மறதியும், மதிப் பெண்களில் குறைவாகவும் எடுப்பீர்கள். உங்களின் கவனம் கேளிக்கைகளில் இருக்கும். இறைவழிபாடு செய்யவும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

21.09.2015 திங்கள் அதிகாலை 03.47 முதல் 23.09.2015 புதன் காலை 09.30 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்

பொது காரியங்களில் நல்ல முன்னேற்றம் பெறுவீர்கள். முதலீடு இல்லாத தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்.

### ரோகிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வெளிநாடு தொடர்புகள் வரும். நல்லவர்களின் நட்பு உங்களுக்கு பல உதவி களை செய்து வரும். பொருளாதார நிலை சிறக்கும்.

### மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

தோட்ட தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். விளையாட்டு பொருட்கள் மூலம் கூடுதல் லாபம் கிட்டும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** நீலம், பலவர்ணம், சந்தன நிறம்

**அதிர்ஷ்ட திசைகள்** தெற்கு, தென்கிழக்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** வெள்ளி, சனி, திங்கள்

### இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்

நவக்கிரகங்களை மூன்று முறை வலம் வந்து சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தூபமிட்டு காக்கைக்கு அன்னமிட நன்மையான பலன் கிடைக்கும்.

## சாஸ்திரங்கள் உயர்ந்தவை!

நம் முன்னோர்கள் புத்திசாலிகள். நாம் மிகவும் எளிமையாக உயர்ந்த பலன்களை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்குடன் பலவற்றை ஆராய்ந்து, சாஸ்திரங்களாக நமக்கு அருளியிருக்கிறார்கள். தாயார் எப்படி நன்றாகச் சமைத்து, பிசைந்து அழகறக் குழந்தைக்கு ஊட்டுகிறாளோ அதுபோல.







# அமெரிக்காவின் லன்ஹாமில்

# சிவ-விஷ்ணு ஆலயம்

வெளிநாடுகளில் வாழும் இந்து சமய மக்களின் ஆன்மீக தேடலுக்கு விடை பகர்வதாக உள்ளவை ஆலயங்கள் தான். கல்வி, தொழில், வியாபார நிமித்தமாக தம்முடைய சொந்த நாடுகளை விட்டு வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்து மக்களுக்கு ஒற்றுமையையும் ஆத்ம திருப்தியையும் கூட்டு வழிபாட்டிற்கான அருமையான சந்தர்ப்பங்களையும் வழங்கக் கூடியதும் ஆலயம் தான். எனவே தான், வெளிநாடு களில் வாழும் இந்து சமயத்தை தழுவிய மக்கள் ஒன்று கூடி தாங்கள் வாழ்கின்ற இடத்திலேயே நல்லதொரு ஆலயத்தை எழுப்ப முயற்சிகள் மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்று விடு கின்றார்கள். இப்படியானதொரு ஆலயம் தான் அமெரிக்காவின் லன்ஹாம் என்ற இடத்தில் அமைந்துள்ள சிவ விஷ்ணு ஆலயம்.

லன்ஹாமில் நல்லதொரு இந்து ஆலயத்தை அமைத்திடல் வேண்டுமென்ற விதையினை 1976 ஆம் ஆண்டில் இங்கு வசித்து வந்த மக்கள் தங்களின் இதயங்களில் விதைத்தார்கள். இவர் களின் பெருமுயற்சியின் காரணமாக 1980ஆம் ஆண்டு ஸ்ரீ சிவவிஷ்ணு ஆலய அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையின் நோக்கமானது, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து லன்ஹாமிற்கு வந்து பல்வேறு வேலைகள் நிமித்தம் குடியேறியிருக்கும் மக்களின் தெய்வ வழிபாட்டு தேவைகளை பூர்த்தி செய்வதே முதன்மையானதாக இருந்தது. இந்த பகுதியில் வாழும் மக்கள் அனைவரையும் ஒன்று படுத்துவதற்காகவும் அவர்கள் வெவ்வேறு பழக்கவழக்கங்களை கொண்டிருந்த போதிலும் தெய்வ வழிபாடு மற்றும் அதன் பெருமைகளை உணரும் பொருட்டும் சிவவிஷ்ணு ஆலயம் அமைக்க வேண்டுமென்பது நோக்கமாக அமைந்திருந்தது. அத்துடன் இங்கிருந்த இந்து மக்களுக்கு இந்து மதத்தின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் குழந்தைகள் உட்பட முழு குடும்பத்திற்கும் பயன்படும் வகையில் இந்த ஆலயம் அமைந்தி

ருக்க வேண்டுமென்பதும் எண்ணமாக இருந்தது. தொடர் முயற்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக 1984ம் ஆண்டு ஸ்ரீ சிவவிஷ்ணு ஆலய அறக்கட்டளை அந்த பகுதியில் நல்லதொரு இடத்தை ஆலயம் அமைத் திட பெற்றது. இங்கு தான் ஸ்ரீ சிவவிஷ்ணு ஆலயத்தின் முதல் நடவடிக்கையாக சில தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

ஆலயத்திற்கென கையகப்படுத்தபட்ட இடத்தில் எல்லா தெய்வங்களுக்குமான சிலைகளை ஆகம விதிகளின் படி சிறப்பாக பிரதிஷ்டை செய்து ஆலயத்தை மிகச் சிறந்த வழிபாடுகளுடன் திறம்பட நடத்த வேண்டுமென்று அறக்கட்டளை உறுப்பினர்களும் அங்கிருந்த பக்தர் பெருமக்களும் பெரிதும் விரும்பினார்கள். எனவே ஆலயத்திற்கான பாரம்பரிய கட்டுமான பணிகளுடனும் விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்ட விக்கிரகங்களையும் ஸ்தாபிதம் செய்ய வேண்டும் என்று அனைவரும் ஆவல் கொண்டார்கள்.

1990ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட அனைத்து விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு புனித நீருடன் பூஜைகள் செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு ஆலயத்தின் முதல் கும்பாபிசேகம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. ஆலயத்திற்காக அறக்கட்டளையின் முயற்சியின் பேரில் கூடுதல் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வெங்கடேஸ்வரர் மற்றும் ஐயப்பன் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அடுத்ததாக 2002ஆம் ஆண்டின் நடத்தப்பட்ட ஆலய கும்பாபிசேகத்திற்கு முன்பாக ராஜகோபுரமும் வசந்த மண்டபமும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் செய்து முடிக்கப்பட்டன.

ஆலயத்திற்கு தேவையான ஓடிட்டோரியமும், உணவு உண்ணும் அறையும், ஓமகுண்டத்திற்கான வசதிகளும் 2003ஆம் ஆண்டில் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டன. நாட்டியம், இசை கச்சேரி மற்றும் சொற்பொழிவுகள் நடத்துவதற்கு ஆலயத்தின் ஓடிட்டோரியம் மிகவும் பய னுள்ளதாக அமைந்தது. அமைக்கப்பட்டிருந்த இரண்டு ஹோம குண்டங்களில் ஒன்று பக்தர்களின் சிறப்பு வழிபாடுகளுக்காகவும் மற்றொன்று ஆலய பயன்பாட்டிற்காகவும் செய்யப்பட்டிருந்தது.

லன்ஹாமில் வசித்து கொண்டிருக்கும் இந்து சமய மக்களுக்கு திருமணம் மற்றும் இதர குடும்ப விசேசங்களை நடத்துவதற்கும் ஆலயத்தின் ஓடிட்டோரியம் பயன்படுகிறது.

இந்த ஆலய விழாக்கள் குறைவின்றி நடைபெற தன்னார்வு தொண்டர்களும் ஆலயத்தின் பணியாளர்களுடன் மிகச் சிறந்த முயற்சிகள் மேற்கொள்கின்றார்கள். ஆலய பணிகளை



மேற்கொள்வதற்காக நிர்வாக பணியாளர்களும் எட்டு அர்ச்சர்களும் தங்களின் சிறந்த சேவைகளை தந்து அப்பகுதியின் இந்து இன மக்களின் ஆன்மீக தேவைகளை அற்புதமாக பூர்த்தி செய்து வருகிறார்கள். லன்ஹாமில் ஸ்ரீசிவ விஷ்ண ஆலயத்தில் சிவன், விஷ்ணு, விநாயகர், முருகன், மற்றும் ஐயப்பன் ஆகியோரது சன்னதிகளும் உள்ளன. இவ்வாலயத்தில் செய்யப்பட்டுள்ள விக்கிரக ஸ்தாபிகளும் இதர ஆன்மீக வேலைகளும் புகழ் பெற்ற கணபதி ஸ்தபதியாரின் மேற்பார்வையில் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

லன்ஹாமின் ஸ்ரீசிவவிஷ்ணு ஆலயமானது இங்கு வசித்து வரும் பக்தர்களுக்கு வழிபாட்டிற்குரிய தலமாகவும், கலாசார பண்பாட்டு மையமாகவும் விளங்கி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

- அபிதா மணாளன்



# ஏழுமலையான்

## தரிசனமும் திருவருளும்

**கோடிக்கணக்கானோர் ஏழுமலைவாசனை வணங்கி மகிழ்கின்றோம். ஆனால் நம்மில் பலருக்குத் தெரியாத அதிசயங்கள் எத்தனையோ திருப்பதியில் இருக்கின்றன.**

உலகிலேயே மிகவும் தொன்மை வாய்ந்தது எனவும் புனிதமானது எனவும் இந்துக்களால் போற்றப்படுவது திருமலையில் குடி கொண் டிருக்கும் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலே. இத்திருத்தலம் ஆந்திராவிலுள்ள சித்தூர் மாவட்டத்தில் சுமார் மூவாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள ஏழு மலைகளும் ஆதிசேஷனின் ஏழு தலைவகளைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது. சேஷாத்ரி, நீலாத்ரி, கருடாத்ரி, அஞ்சனாத்ரி, விருஷபாத்ரி நாராயணாத்ரி, வெங்கடாத்ரி ஆகிய ஏழு மலைகள் உள்ளதாலேயே இப்பெருமாளுக்கு ஏழு மலையான என்ற திருநாமமும் ஏற்பட்டது. குலசேகர ஆழ்வார் இப்புண்ணியத்திருத்தலத்தைப் பற்றி மனம் நெகிழ்ந்து பாடி மங்களாசாசனம் செய்துள்ளார்.

திருப்பதி ஆலயத்திலிருந்து 1கிலோ மீற்றர் தொலைவில் "சிலாதரணம்" என்ற அபூர்வ பாறைகள் உள்ளன. உலகத்திலேயே இந்தப் பாறைகள் இங்கு மட்டும்தான் உள்ளன. இவற்றின் வயது 250 கோடி வருடம் எனச் சொல் லப்படுகின்றது, ஏழுமலையானின் திருமேனியும் இந்தப் பாறைகளும் ஒரே தன்மையானவை.

ஏழுமலையான் திருவுருவச் சிலைக்கு பச்சைக் கற்பூரம் சார்த்துகிறார்கள். இந்தப் பச்சைக் கற்பூரம் ஒரு இரசாயன அரிப்பைக் கொடுக்கும் ஒரு வகை அமிலம். இந்த இரசாயனத்தை சாதாரண கருங்கல்லில் தடவினாலே கருங்கல் வெடித்து விடும். ஆனால் சிலாதாரணத்தில் உள்ள பாறைகளில் இதைத் தடவினால் அந்தப் பாறைகள் வெடிப்பதில்லை. ஏழுமலையான் திருவுருவம் சிலைக்கு 365 நாளும் பச்சைக் கற்பூரம் தடவுகிறார்கள். ஆனாலும் எவ்வித வெடிப்பு ஏற்படுவதில்லை.

எந்தக் கருங்கல் சிலையானாலும் எங்காவது ஓர் இடத்தில் சிற்பியின் உளி பட்டிருக்கும் இடம் தெரியும். உலோகச்சிலையானாலும் உலோகத்தை உருக்கி வார்த்த இடம் தெரியும். ஏழுமலையான் திருவுருவச்சிலையில் இவ் விதமான அடையாளமேதுமில்லை. எந்தக் கருங்கல் சிலையை எடுத்துக் கொண்டாலும் சொரசொரப்பாக இருக்கும். ஆனால் ஏழுமலையான் திரு மேனியில் நுணுக்க



வேலைப்பாடுகள் எல்லாம் அப்பழுக்கற்றுக் காட்சி தருகின்றன. ஏழுமலை யானின் நெற்றிச்சுட்டி, காதணிகள், புருவங்கள், நாகாபரணங்கள் எல்லாம் நகைக்கு பொலிஷ் போட்டது போல் பளபளப்பாக இருக்கின்றன.


ஏழுமலையான் திருவுருவச் சிலை எப்போதும் 110 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பத்தில் இருக்கிறது. ஆனால் திருமலையோ 3000 அடி உயரத்தில் உள்ள குளிர்பிரதேசம். அதிகாலை 04.30 மணிக்கு குளிர்ந்த நீர், பால் மற்றும் திரவியங்களால் அபிஷேகம் செய்கிறார்கள். ஆனால் அபிஷேகம் முடிந்தவுடன் ஏழுமலையானுக்கு வியர்க்கிறது. பீதாம்பரத்தால் வியர்வையை ஒற்றி எடுக்கிறார்கள். வியாழக்கிழமை அபிஷேகத்திற்கு முன்னதாக நகைகளைக் கழற்றும் போது ஆபரணங்கள் எல்லாம் கொதிக்கின்றன. திருப்பதி திருக்கோயில் சமையல்கட்டு மிகப் பெரியது. பொங்கல், தயிர் சாதம், புளிச்சாதம், சித்ரான்னம், வடை, முறுக்கு, ஜிலேபி, அதிரசம், போளி, அப்பம், மௌகாரம், லட்டு, பாயசம், தோசை, ரவாகேசரி, பாதாம்கேசரி, முந்திரிப்பருப்பு கேசரி போன்றவை தினமும் பெரிய அளவில் தயார் செய்யப்படுகின்றன.

ஏழுமலையானுக்கு தினமும் ஒரு பதிய மண் சட்டி வாங்குகிறார்கள். இதில் தயிர்சாதம்தவிர வேறு எந்த நைவேத்தியமும் கோவில் கர்ப்பக் கிரகத்தின் குலசேகரப் படியைத் தாண்டாது. வைரம், வைடூரியம், தங்கப் பாத்திரங்கள் எதுவும் குலசேகரப்படியைத் தாண்டிச் செல்லாது. ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட எச்சில் மண் சட்டியும், தயிர்ச்சாதமும் கிடைக்கப் பெறுவது மிகப் பெரிய பாக்கியம்.

ஏழுமலையான் 21 முழ நீளமும் 6 கிலோ எடையும் கொண்டு பட்டு பீதாம்பரம் அணிந்திருக்கிறார். இந்த ஆடையை கடையில் வாங்க முடியாது. திருப்பதி தேவஸ்தான அலுவலகத்தில் 12500 ரூபாய் செலுத்த வேண்டும். வாரத்தில் ஒரு முறை வெள்ளிக்கிழமை அன்று மட்டும் தான் வஸ்திரம் சாத்தப்படுகின்றது. பணம் செலுத்திய பிறகு வஸ்திரம் சார்த்துவதற்கு மூன்று வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

உள் சாத்து வஸ்திரம் ஒரு செட் இருபதாயிரம் ரூபாய் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 15 வஸ்திரங்கள் சார்த்துவதற்கு சமர்ப்பிக்கப்படும். பணம் செலுத்திய பிறகு வஸ்திரம் சார்த்துவதற்கு பத்து வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

பக்தர்கள் சமர்ப்பிக்கும் வஸ்திரங்கள் தவிர அரசாங்கம் சமர்ப்பிக்கும் சீர் வஸ்திரங்கள் ஆண்டுக்கு இரண்டு முறை சார்த்தப்படுகிறது. ஏழுமலை ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்ய இன்று கட்டணம் செலுத்தினால் மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். ஐரோப்பாவில் உள்ள ஆம்ஸ்டர்டாமில் இருந்து பக்குவப்படுத்தப்பட்ட ரோஜா மலர்கள் பக்தர்களால் திருப்பதிக்கு விமானத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒரு ரோஜா மலரின்



விலை சுமார் 80 ரூபா. சீனாவிலிருந்து சீனச் சூடம், அகில், சந்தனம், அம்பர், தக்கோலம், இலவங்கம், குங்குமம், தமாலம், நிரியாசம் போன்ற வாசனைப் பொருட்கள் ஏழுமலையான் திருக்கோயிலுக்காக அனுப்பப்படுகின்றன.

ஏழுமலையானின் நகைகளின் மதிப்பு ரூ.1000 கோடி. இவருடைய நகைகளை வைத்துக்கொள்ள இடமும் இல்லை. சார்த்துவதற்கு நேரமும் இல்லை. அதனால் ஆண்டிற்கு ஒரு முறை உபரியாக உள்ள நகைகளை செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தி ஏலம் விடுகிறார்கள். ஏழுமலையானின் சாளக்கிராம் தங்கமாலை 12 கிலோ எடை கொண்டதாகும். இதை சார்த்துவதற்கு மூன்று அர்ச்சகர்கள் தேவை. சூரிய சடாரி, 5 கிலோ எடை பாதக் கவசம், 375 கிலோ எடை கொண்ட கோவிலில் இருக்கும் ஒற்றைக் கல் நீலம் உலகில் யாரிடமும் கிடையாது. இதன் மதிப்பு ரூ.100 கோடி.

மாமன்னர்களான இராசேந்திரசோழர், கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் போன்றோர் ஏழுமலையானுக்கு பல காணிக்கைகளையும், அறக்கட்டளைகளையும் செய்து அவற்றை கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் பொறித்துள்ளனர். சோழ அரசியும் இங்கு வந்து காணிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்.

ஒவ்வொரு பக்தரும், வாழ்நாளில் ஒரு முறையாவது இத்துணை பெருமையும், பேரருளும் நிறைந்த திருமலை வாசனை தரிசனம் செய்து பிறவிப்பயனை அடைதல் வேண்டும் என்றும், வாழ்வில் நல்ல திருப்பங்களோடு வளங்கள் பெற்றிட வேண்டும் என்றும் நம்பிக்கையோடு திருமலை சென்று பக்தியோடு வணங்கித் திரும்புகிறார்கள்.

— நவநீதம்




# கஜலட்சுமி வழிபாடு

புதிதாக ஒரு தொழில் அல்லது வியாபாரம் தொடங்குவோர் அதில் வெற்றி பெறுவதற்கு அஷ்டலட்சுமிகளுள் ஒருவரான கஜலட்சுமியை வழிபட வேண்டும்.

கஜலட்சுமியை சகல தோஷங்களையும் நீக்கி அரச போகத்தைத் தரும் இராஜலட்சுமி என்றும் குறிப்பிடுவர். பாக்கியங்களை அருளுவதால் சௌபாக்கிய லட்சுமி என்றும் குறிப்பிடுவர்.

எந்தவொரு புதுசெயலைத் தொடங்குகிறோமோ அதற்கு முதல் நாள் அது எந்தக் கிழமையாக இருந்தாலும் அன்று கஜலட்சுமி பூஜை செய்ய வேண்டும்.

புதிய முயற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நாள் வளர்பிறைக் காலமாக இருக்க வேண்டும். கரி நாள், மற்றும் அஷ்டமி, நவமி, நிதி ஆகியவை இல்லாத நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு தேந்தெடுக்கப்படும் நாளின் முதல் நாளும் நல்ல நாளாக இருக்கும்படி பார்த்துத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பூஜை செய்யும் நாளும் புதிய முயற்சியில் ஈடுபடும் நாளும் ஒரே நாளாக இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கும்.

பூஜைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நாளில் வீடு முழுவதையும் தூய்மை செய்து கோமியத்தையும் கடல் நீரையும் வீடு முழுவதும் தெளித்து மாவிலை தோரணம் கட்டி அலங்கரிக்க வேண்டும்.

வீட்டிலுள்ள பூஜை அறையிலோ அல்லது வேறு அறையிலோ பீடம் அமைத்துக் கொள்ள வேண்டும். கிழக்கு முகமாக அமைக்கப்பட்ட பீடத்தில் சதுரமாக நெல் பரப்பி அதிலே ஒரு தட்டில் பச்சரிசி பரப்பி கலசம் அமைக்க வேண்டும். ஐம்முக விளக்கோ காமாட்சி விளக்கோ வைக்க வேண்டும்.

ஒரு தட்டில் அருகம்புல் பரப்பி அதன் மீது மஞ்சள் அல்லது பசும் சாணத்தில் செய்த பிள்ளை யாரை வைக்க வேண்டும்.

விளக்கிற்கு நெய்விட்டு ஏற்ற வேண்டும். செந்தாமரை, மல்லிகை, சாமந்தி, மருக்கொழுந்து ஆகியவற்றால் கலசத்தையும் விளக்கையும் அலங்கரித்துக் கொள்ள வேண்டும்.

இளநீர், பால், கல்கண்டு, பாயசம், பழங்கள், அவல், பொரி கடலை, தேங்காய், ஊதுவத்தி, சாம்பிராணி ஆகியவற்றையும் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.



ஒரு பூசணிக்காய் வாங்க வேண்டும். அதன் மேல் பக்கத்தில் சதுரமாக நறுக்கி எடுக்க வேண்டும். அதில் மஞ்சள் சுண்ணாம்பு அல்லது செந்நிறக் குங்குமம் ஆகியவற்றை இட்டு சிறிது தண்ணீர் ஊற்ற வேண்டும். அவற்றுடன் சில்லறைக் காசுகளையும் இட்டு மூடி பூஜை பீடத்தின் அருகே வைக்க வேண்டும். நான்கு எலுமிச்சம் பழங்களை பூஜை மேடையில் கலச பாதத்தில் வைக்க வேண்டும்.

## குருவாயூரின் சிறப்புகள்!

குருவாயூர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் துலாபாரம் என்று அழைக்கப்படும் எடைக்கு எடை காணிக்கை கொடுப்பது இங்கு சிறப்பாக கருதப் படுகின்றது. தாய்மார்கள் இந்த ஆலயத்திற்கு வந்து குழந்தைகளுக்கு முதல் முதலாக சோறு ஊட்டுவார்கள். இந்த நிகழ்ச்சிக்கு "அன்ன பிரசன்னம்" என்று பெயர். பூலோக வைகுண்டம் என்று குருவாயூர் தலம் போற்றப் படுகின்றது. ஏனென்றால் பூமியில் இறைவன் விஷ்ணு வாசம் செய்யும் இடமாக இது கருதப்படுகின்றது. குருவாயூரப்பனுக்கு கண்ணன், உன்னிக்கண்ணன், உன்னி கிருஷ்ணன், பாலகிருஷ்ணன் என்ற இதர பெயர்களும் உண்டு. குருவாயூருக்கு வரும் பக்தர்கள் அருகில் மம்மியூர் சிவனையும் வணங்கினால் மட்டுமே குருவாயூர் புனித யாத்திரை முழுமை பெறும் என்பது ஐதீகம்.



முதலில் விநாயகருக்கு அருகம்புல்லை அர்ச்சனை செய்தபடி அஷ்டோத்திர விநாயகர் தோத்திரங்கள் முடிந்த பிறகு கற்பூர தீபம் காண்பித்து வணங்க வேண்டும். திருவிளக்கு தோத்திரங்களைச் சொல்லி மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். அர்ச்சனை முடித்து திருவிளக்கிற்கு கற்பூர தூப தீபம் காண்பிக்க வேண்டும். திருவிளக்கை வணங்கிய பிறகு கலசத்திற்குக் கற்பூரம் காட்டிவிட்டு லட்சுமி தோத்திரம் கூறியபடி மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

அர்ச்சனை முடித்து அஷ்டலட்சுமி தோத்திரங்கள் சொல்லி முடித்து கற்பூர தூப தீபம் காண்பிக்க வேண்டும்.

வேறு ஒருவரிடம் பூசணிக் காயைக் கொடுத்து பூசணிக்காயில் கற்பூரத்தை வைத்துக் கொளுத்தி சேர்ந்து நிற்கும் வீட்டார் அனைவரையும் மூன்று முறை சுற்றி வருமாறு சொல்ல வேண்டும்.

பின்பு பூசணிக்காய் வைத்திருப்பவரை வீடு முழுவதையும் சுற்றி வரச் சொல்லி பூசணிக்காயை முச்சந்தியில் வைத்து உடைக்கச் செய்ய வேண்டும். எலுமிச்சை பழத்தையும் இதே போல சுற்றி வரச் செய்து காலால் நசுக்கி நசுக்கிய எலுமிச்சம் பழத்தை நான்கு துண்டுகளாகச் செய்து நான்கு திசைகளிலும் வீசியெறியச் செய்ய வேண்டும்.

மீண்டும் பீடத்தில் கலசத்திற்கு கற்பூர தீபம் காட்டி வணங்க வேண்டும். பிரசாதங்களை முதலில் பிறருக்குத் தந்து விட்டு பிறகு நாம் எடுத்துக் கொள்ளலாம். இந்த வழிபாட்டின் போது உச்சாடனம் செய்யப்பட வேண்டிய தோத்திரங்களை இங்கே குறிப்பிடுகிறோம்.

### கஜலட்சுமி தோத்திரம்

தடாகத் தாமரையாள்
தன்மைமிகு தவ
வடிவாள்
அடா அத்துயரமிதை
அழிக்கின்ற அருளடியாள்
விடாநற்றனமழையாள் விளங்கானைத்
துதியடியாள்
படாகக் கறியிவர்வாள் பண்ணடிகள்
போற்றியம்மா!

### கஜலட்சுமி அஷ்டோத்திரம்

ஸ்ரீதேவி உவாச:
தேவ தேவ மகாதேவ
த்ரிகலாஜ்ஞ மகேஸ்வர
கருணாகர தேவஸே
பத்கானுக்ரஹ காரக
அஷ்டோத்தர ஸதம்
கஜலட்சுமி ஸ்ரோது மிச்சாமி
தத்வத்

– கே.எஸ்.பதஞ்சலி ஐயர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

உலகை இருளில் இருந்து மீட்க உதவுவது ஒளி. ஒளியில்லாவிட்டால் கண் இருந்தும் குருடாகி விடுவோம். வெளிச்சமும், வெப்பமும் அடங்கிய ஆற்றல்மிக்க அக்னி முன்னால் எல்லாமே சமம், ஒளிக்கும் வெப்பத்திற்கும் காரணம் கதிரவனே! நம்மைப் படைத்து காத்தருளும் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் "எளிய யாகமே" இந்த தெய்வீக அக்னி ஹோத்திரம்.

படைப்பின் மேல் அன்பைத் தோற்றுவிக்கவும், முழுமையான அடைக்கலம் அடைவதற்கும் உரிய எண்ணங்களை வளர்ப்பதே ஆன்மீகத்தின் குறிக்கோளாகும். நீங்கள் பிறப்பால் இந்துவாக, முஸ்லிமாக, கிறிஸ்தவராக, சீக்கியராக. ஜைனராக, பௌத்தராக அல்லது யூதராக இருக்கலாம். பாபா, ராகவேந்திரா, அடிகளார் போன்றதொரு குருவின் சீடராகவோ அல்லது கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகராகவோ கூட இருக்கலாம்.

இந்தப் புனிதமான அக்னி ஹோத்திரா செய்வதன் மூலம் நீங்கள் வசிக்குமிடம் மட்டுமல்ல. உங்கள் ,மனமும் தூய்மையடைகிறது. "அக்னி ஹோத்திராவின் பயன்கள் உங்களை வந்தடைய எந்தத் தடையும் கிடையாது" என்பதை பல நாட்டவர்கள், விஞ்ஞானிகள் இன, மொழி, பேதம் கடந்து அக்னி ஹோத்திரம் செய்வதிலிருந்து அறிந்திருப்பீர்கள். உங்களின் பரந்த உள்ளம் நிச்சயம் "இனி எங்கும் அக்னி ஹோத்திரம்" இடம் பெறச் செய்யும் என நம்புகிறோம்.

### அடிப்படைத் தேவைகள்

ஐந்து அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலொழிய அக்னிஹோத்திரம் செய்ய இயலாது.

1. சரியான நேரம் (சூரிய உதய, மறையும் நேரம்)
2. அக்னி (பசும் சாண வரட்டியால் வளர்க்கப்படும் அக்னி)
3. சரியான அளவில் செய்த செப்பு பிரமிடு பாத்திரம்
4. சுத்தமான பசு நெய் கலந்த முழு பச்சரிசி சிறிதளவு
5. மாத்திரம்

### புனித வேள்வி

அக்னிஹோத்திரம் செய்வது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரின் அத்தியாவசியக் கடமை ஆகும். உண்ணும் உணவு கிடைக்காவிட்டால் கூட வெறும் நீரை மட்டுமே பருகிக் கொண்டு ஓரிரு வாரங்கள் வாழ முடியும். பருகும் நீர் கிடைக்காவிட்டால் சில நாட்கள் உயிர்வாழ முடியும். ஆனால் சுவாசிக்க காற்று கிடைக்காவிட்டால் சில நிமிடங்கள் கூட உயிர்வாழ முடியாது.

நீங்கள் யாராக இருந்தாலும் ஆணோ, பெண்ணோ, ஏழையோ, பணக்காரரோ, இந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்தவரோ, சீக்கியரோ, படித்தவரோ, படிக்காதவரோ, எந்த சாதியோ "உயிர்வாழ விரும்பும்" யாராக இருந்தாலும் எந்த வயதினரும் தனியாக தத்தம் வீட்டிலோ அல்லது பொதுஇடத்தில் ஒன்று கூடியோ இனிமேலாவது கட்டாயம் அக்னி ஹோத்திரம் செய்தே ஆகவேண்டும். இந்தப் புனித வேள்வியில் பங்குகொள்ள இனி எந்த தடையும் இல்லையே!

இவ்வளவு எடுத்துக் கூறிய பிறகும்கூட இன்னும் சிலர் மனதில் தம் இன, மதக் கோட்பாடுகள் இதற்கு இடந்தருமா? எனும் சந்தேகம் உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருப்பதால் தான் மென்மேலும் இதை ஏன் செய்தே ஆகவேண்டும் என்று எடுத்துரைத்து வருகிறோம்.

சரி! இதில் பயன்படுத்தப்படும் பொருட்களும், பயன்களும் பற்றி முழுமையாக நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு சற்று அளவுக்கு அதிகமாகவே ஆங்காங்கே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

1. சரியான சூரிய உதயகாலமும், மறையும் காலமும் யாருக்குச் சொந்தமா? இந்த சந்தியா காலம் என்பது இரவுமல்லாத, பகலுமல்லாத பல அதிசயங்களும், அற்புதங்களும் நிகழும் அற்புதமான காலம், இந்தப் புனித நேரத்தில் இந்த வேள்வியில் ஈடுபட்டு இதன் பயன் தனியாக உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தினருக்கும், உலகத்தினர் அனைவருக்கும்



# தெய்வீக அக்னி ஹோத்திரம்



கிடைப்பதை யார் வேண்டாமென்று தடுக்கப் போகிறார்கள்?

2. அக்னி நெருப்பு யாருக்குச் சொந்தம்? சிறந்த கிருமிநாசியான பசும் சாண வரட்டி மீது சுத்தமான நெய்விட்டு வளர்க்கப்படும் அக்னி எந்த மதத்திற்குச் சொந்தம்? மனிதனால் மட்டுமே அக்னியை வளர்க்க முடியும்! மற்ற உயிரினங்களால் நெருப்பின் பயனை வேண்டு மானால் அனுபவிக்க முடியும். ஆனால் புனிதமான அக்னியை முறைப்படி வளர்க்க ஆறு அறிவு படைத்த மனிதர்களால் மட்டுமே இயலும். எனவே இதை வளர்க்க விரும்பாதவர்களும், தடை செய்யும் எண்ணம் கொண்ட சிலரும் "மக்கள் அல்ல மாக்கள்" என்பதை இனியாவது உணர்ந்து கொள்ளுங்கள்.

3. செப்பு பிரமிடு பிரமிடுகளின் மர்மமான ஆற்றல்கள் அளவிட முடியாதவை. அதுவும் செப்பு பிரமிடு எனும் போது அதன் ஆற்றல்கள் அதிசயிக்க வைப்பதை உணர்ந்த பல மேலைநாட்டவர்கள் எவ்விதச் சந்தேகமும் இன்றி முறையாகச் செய்து மகிழ்ந்து வருகிறார்கள்.

4. நெய் கலந்த அரிசி அக்னியில் இடப்படும் நெய் கலந்த அரிசி ("அவிசு") எரியும் போது தீவிரமாக மாசுபட்டுள்ள காற்று மண்டலத்தில் உள்ள நச்சு வேதிப் பொருள்களால் ஏற்படும் தீய விளைவுகள் முறியடிக்கப் பயன்படுகின்றன. இதுவொரு (Chemical reaction) வேதியியல் வினை. ஐவகை வாயுக்கள் இதனால் உருவாகி மனித மூளை அழுத்தங்களை அகற்றி இன்னும் பல நோய்களையும் போக்கு கிறது.

5. மந்திரங்கள் சூரியனின் ஒளி வெள்ளத்தில் உருவாகும் இசை வெள் ளத்தின் சக்தியின் சாராம் சம்தான் அக்னி ஹோத்திர மந்திரங்கள், எனவே அக்னிஹோத்திர மந்திரங்களை எக்காரணம் முன் னிட்டும் மாற்றி உச்சரிக்க முயற்சிக்க வேண்டாம். உலகெங்கும் இதைச் செய்யும் மக்கள் அனைவரும் பல மொழிகளைப் பேசினாலும் "இதை" "இதே" உச்சரிப்பில்தான் செய்து வருகிறார்கள். ஏனெனில் மாற்றி உச்சரிக்கப்பட்டால், அதன் தூய்மையாக்கும் சக்தி வெளிப்படாமலேயே மறைந்துவிடும்.


"இந்த ஒலி அதிர்வுகள்" ஆற்றல் மிக்கவை. ஆக்கப்பூர்வமானவையே. அவசியமானவையே. இதுவும் இன, மொழி, மதங்களைக் கடந்தது!

– எஸ்.கிருபராணி



# கொடுந் தொழிலினான்!

பாற்கடலில் பையத்துயிலும் பரம்பொருள், தீயோரை அழித்து, நல்லோரைக் காக்க அவதாரம் எடுக்கும் போது சிலர் அப்பரம் பொருள் தரிசனம் பெற்று சாப விமோசனம் பெறுகின்றனர். அவர்களில் விராதனும் ஒருவன். விராதன், யவன்சதப்பிரதை என்பாரின் மகன். குபேரனால் சாபம் பெற்று அரக்க உருவில் வாழும் தும்புரு என்னும் கந்தர்வன். விராதன் என்ற சொல்லுக்கு மிகுதியாய் அபராதம் செய்பவன் என்று பொருள்.



சித்திரக்கூடத்திலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற இராம, இலக்குவர் மற்றும் சீதை ஆகியோர் அத்திரி முனிவரின் இருக்கையை அடைந்து அவரை வணங்கி, ஆசி பெற்றுத் தண்டக வனம் புகுந்தனர். அங்குத்தான் விராதன் வாழ்ந்திருந்தான். மதங்கொண்ட பதினாறு யானைகளையும், அந்த யானையைப் போல் இரண்டு மடங்கு பெரிதான முப்பத்திரண்டு சிங்கங்களையும், மலையிலே வாழும் வட்ட வடிவமான கொடிய கண்களையுடைய பதினாறு யாளிகளையும் (யானை போலத் துதிக்கை கொண்ட சிங்கம் நிகர் விலங்கு) கூர்மையான ஒரு சூலத்தில் கோர்த்து அந்தச் சூலத்தை ஒரு கையால் பிடித்தபடி இராம இலக்குவர் முன் தோன்றினான். செம்மை நிறங்கொண்ட சுருட்டை மயிர் பொருந்திய தலையை உடையவன். புண்கள் போன்ற சிவந்த கண்கள், குகையொத்த காதுகள், அக் காதுகளில் ஒளிவீசும் குண்டலங்களாக பேருமலையின் சிகரங்கள். தன்னை எதிர்த்து இறந்த வீரர்களின் இரத்தத்தைச் செஞ்சந்தனமாகப் பூசிக்கொண்ட மார்பு. இவை அவனது தோற்றம்.

இவன் நடந்தால் விண்ணும், மண்ணும் நடுங்குகின்றன. எமன் மனத்தளர்ச்சியடைகிறான். கதிரவன் அஞ்சி வெம்மையைக் குறைத்துக் கொள்கிறான். வாசுகி, அனந்தன், நட்சன், சங்க பாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன் ஆகிய எட்டு நாகங்களையும், கிரகங்கள் மற்றும் விண்மீன்கள் ஆகியவற்றையும் கோர்த்த வெற்றி மாலையையும் அணிந்திருந்தான். ஜராவதத்தின் ஓடையை நெற்றிப்பட்டமாகவும், பெரிய வாகுலயமாகவும் கொண்டிருந்தான். கறுப்பு நிறத்துடனும் கொடிய வடிவத்துடனும் இரவோடு கூடி வருகின்றன கலி காலம் போன்றிருந்தான். விராதன் புலித் தோலை மேலாடையாகவும், யானைத்தோலை இடையாடையாகவும், மலைப் பாம்பை ஆடையின் கச்சாகவும், சலஞ்சலம் என்னும் உயர்ந்த சங்கினை கை வளையல் ஆகவும் அணிந்தவனாய் வில் வீரர்களான இராமஇலக்குவர் முன் தோன்றினான். எல்லா பூதங்களும் இணைந்து உருவான புதுமையான வடிவமோ என்று மலைக்கத்தக்க வகையில் தோன்றினான். தனது தவத்திற்கு மகிழ்ந்து பிரமன் அளித்த ஒன்றே கால் இலட்சம் மதயானைகளின் ஆற்றல் உடையவனாகி இடியோசை ஒத்த குரலோடு தோன்றினான். நெருங்கிய மலைபோலத் தன் கையிலுள்ள சூலத்தில் செருகி வைத்துள்ள மதயானை ஒவ் வொன்றையும் எடுத்து, தனது குகை போன்ற வாயில் அடக்கி மென்று தின்றான். "நில்லுங்கள், நில்லுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே வந்து, நெருங்கிய இதழ்கள் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னம் போன்றவளான சீதையை, ஒரு சொல்லைச் சொல்லும் அளவை விட குறைந்த நேரத்தில் ஒரு கையால் தூக்கிக் கொண்டு வான் வழியே சென்றான்.

இது கண்டு சினந்த காளையொத்த இராம இலக்குவர் விராதனைப் பார்த்து "நில்லடா! நின் செயல் வஞ்சனையானது. திரும்பி வா!" என்று கூற, அதற்கு அந்த அரக்கன், "ஆதி நான்முகன் பிரமன் கொடுத்த வரத்தினாலே நான் என் உயிரை இழக்க மாட்டேன்.

என்னால் வெல்லப்படாதது ஏதும் இல்லை. உங்களுக்கு உயிர்ப் பிச்சைத் தருகிறேன். இந்தப் பெண்ணை என்னிடம் விட்டு விட்டு நல்லபடியாகச் சென்று விடுங்கள்" என்று பதில் உரைத்தான். இராமன், "எனது போர்த்திறமையை இவன் அறியாதவன்", என்றெண்ணிப் புன்சிரிப்போடு தனது கனமான வில்லின் நாணோசையை எழுப்ப, அந்த ஒலியா னது ஏழு உலகங்களிலும் இடி போல முழங்கியது.

அது கேட்ட விராதன், பூனை வாயில் சிக்கிய கூட்டுக்கிளியாய்க் கலங்கும் சீதையைக் கீழே விட்டு விட்டுச் சிதைந்த மனம் கொண்டவனாய்ச் சிறிது நேரம் சிந்தனை செய்தான். பின் இராமன் முன் வந்து நின்றான். பகைவர்களது இரத்தத்திலே தோய்ந்த பாரமான நுனியைக் கொண்டதும், வடவைக் கனலைத் தனது முகத்திலே கொண்டதுமான முத்தலைச் சூலத்தைச் சுழற்றி இராமன் மேல் எறிந்தான். ஆலகால விஷத்தைப் போலப் பேரொளி வீசிக் கொண்டு வந்த அந்த சூலத்தைக் குற்றமற்ற மேரு போன்ற மலைகளின் வலிமை பெற்றதும் வெற்றியைத் தருகின்றதும் ஆகிய தனது வில்லில் ஒப்பற்ற ஓர் அம்பைப் பொருத்திச் செலுத்தித் தடுத்தான் இராமன். அந்தச் சூலம் இரண்டாக உடைந்து திசைகளின் எல்லையை அடைந்தது.

ஆனாலும் சற்றும் தளர்ச்சியடையாமல் விராதன் பல மலைகளைப் பறித்தெடுத்து இராமன் மேல் வீசினான். இராமனது கணைகளை எதிர் கொள்ள முடியாமல் அந்த மலைகளெல்லாம் திரும்பிச் சென்று அரக்கனையே தாக்கின. அதன் பின் விராதன் ஒரு பெரிய மராமரத்தையே வேரொடு பிடுங்கி எடுத்து இராமனைத் தாக்க வந்தான்.

**ஓம் அராமரை ஒருங்கும் உணர்வோர் உணர்வறும்**
**நாமர் ஆம் அவரை நல் அறம் நிறுத்த நணுகித்**
**தாம் அரா அணைதுறைந்து தரை நின்றவரை ஓர்**
**மா மராமரம் இறுத்து அதுகொடு என்ற வரலும்**

நான்கு அம்புகளால் அவன் எறிந்த மராமரத்தைத் தடுத்து மேலும் அவன் மீது கூரிய பன்னிரண்டு அம்புகளை அழுந்தும்படி செலுத்தினான். பகை விலங்கின்மேல் தனது நெருங்கிய நீண்ட முட்கள் தைக்கும்படி சிலிர்த்து நிற்கும் முள்ளம் பன்றியைப் போன்று, விராதன் தன் மீது தைத்த இராம பாணங்களைச் சிலிர்த்து உதறினான். தீயைப் போலிருக்கும் இராமனது அம்புகள் துளைத்து இரத்தம் அருவியாகப் பாய்ந்தோடச் சோர் வடைந்தான் விராதன். அவனது வலிய கைகளை வெட்டி வீழ்த்துவதற்காக அவனது தோள்களில் ஏறினர் அயோத்தி மைந்தர் இருவரும் சோர்வு சற்று விடைபெற, அவ்விருவரையும் தண்டாயுதம் போன்ற தனது கைகளினால் சேர்த்துப் பிடித்து அழுத்திச் சுமந்து கொண்டு. வானத்தின் உச்சியைத் தொடும் வண்ணம் மேலெழுந்தான்.

ஆகாயத்தில் இராம இலக்குவரோடு மேலெழுந்து திரியும் விராதன். முன்பு தருமம் என்ற இரு இறக்கைகளுடன் பலராமகிருஷ்ணரைச் சுமந்து பறந்த கருடாழ்வாரைப் போன்று விளங்கினான் என்பது கவிகூற்று. இதைக் கண்ட சீதை மனம் வாடிப் புழுதியில் விழுந்தாள். அவள் விராதனைப் பார்த்து, "உலகத்திற்கே தாய் போன்ற அன்புடைய இராம இலக்குவர்களை விட்டு விட்டு என்னைக் கூட உனது உணவாக்கிக் கொள்" என்று கூறி மயங்கி விழ, இது கண்ட இளவல் தமையனைப் பணிந்து அரக்கனை அழித்து விடுமாறு வேண்ட, பரம் பொருளான இராமன் தனது வலிமையான காலினால் விராதனை உதைத்துத் தள்ளினான். தோள்கள் வெட்டுப்பட்டும், குருதி ஆறாக உடல் புண்களிலிருந்து பாய்ந்தோடும் நிலையிலும் அரக்கன் சாகாமலிருப்பது கண்ட இராமன். விரைவாக அந்த அரக்கனை இலக்குமணன் வெட்டிய குழியில், அங்கு ஓடிய ஆற்று நீரில் அழுந்தும்படி தனது சிவந்த திருவடியால் எட்டி உதைத்தான்.

திருவடி தீக்கை (தீட்சை) கிடைக்கப் பெற்ற விராதன் குபேரன் தந்த சாபம் நீங்கப்பெற்ற வனாகித் தனது பழைய கந்தர்வ வடிவத்துடன் விண்ணிலே தோன்றி, உண்மையான ஞானம் எய்தித் திருமாலாகிய இராமனை அறிந்து துதிக்கத் தொடங்கினான். பரமனின் புகழையும், அவனது குணங்களையும், வீரச் செயல்களையும் பதின்மூன்று பாடல்களில் ஆழ்வார்களின் அமுதப் பாடல்களுக்கு இணையாகப் பாடிப்பரவுகிறான். சாபம் நீங்கப் பெற்ற விராதன்.

**– மீனாட்சி பட்டாபிராமன்**



## வழிபாட்டு நெறிமுறைகள்!

இந்து சமயத்தில் வழிபாட்டிற்கான நெறிமுறைகள் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. விதியை மாற்றிட திதியை அடிப்படையாக வைத்தும், ஆயுளை நீட்டிட நாளை அடிப்படையாக வைத்தும் பாவங்கள் அகன்றிட நட்சத்திரங்களை அடிப்படையாக வைத்தும், நோய்கள் தீர்ந்திட யோகத்தை அடிப்படையாக வைத்தும் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டுமென சாஸ்திரங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. அதேப் போல் காரிய வெற்றி கிடைத்திட வேண்டுமானாலும் காரணங்களை அடிப்படையாக வைத்து வழிபாட்டை செய்திடல் வேண்டும்.

# நெருப்பை அணைக்க மந்திரம்

எங்காவது நெருப்புப் பற்றிக் கொண்டால் எந்த திசையில் காற்று அடிக்கிறது. சுவாலை எப்படி எந்தப் பக்கம் வீசுகிறது என்று அதை கவனித்து அந்த பக்கம் போய் அந்த திசையை நோக்கி நின்று கொண்டு கையால் ஒரு பாத்திரத்தில் ஜலம் வைத்துக் கொண்டு எந்த நாசியில் சுவாசம் ஓடுகிறதோ அந்த நாசியில் ஜலத்தை கொஞ்சம் உறிஞ்சிக் கொண்டு கையில் கொஞ்சம் ஜலம் எடுத்து ஏழு துளிகள் ஜலத்தை கீழே உள்ள மந்திரத்தை ஜெபித்து நெருப்பின் மேல் தெளிக்கவும். நெருப்பு சில நிமிடங்களில் அடங்கி முற்றுமாக அணைந்து விடும்.


இது மிகவும் உபயோகமான மந்திரம் ஆகும் இதை ஜெபித்து உருவேற்றி வைத்துக் கொண்டால் சமயத்தில் பிரயோகிக்க ஏதுவாக இருக்கும்.

### மந்த்ரம்

உத்தரஸ்யாஞ்ச திக்பாகே மாரீசோ நாம ராக்ஷஸ
தஸ்ய மூதர் புரீஷாப்யரம் ஹு தோவன்ஹி ஸதம்பி
ஸ்வாஹா!!

என ஜபித்து ஒரு தடவை ஜலத்தை எரிகிற நெருப்பில் தெளித்தால் தீ அணைந்து விடும்.

இதை பிரயோகம் செய்து பாருங்கள்.



### சரசாஸ்திரமும் ஸ்திரீகளும்

ஸ்திரீகள் புருஷர்களின் இடது பாகமாகக் கருதப்படுகிறார்கள். இடது பக்கம் தான் சிலாக்கியமானதாக கருதப்படுகிறது. அதனால்தான் சிறந்த பாதி பாகத்தினர்கள் என ஸ்திரீகள் அழைக்கப்படுகிறார்கள்.


இதில் இருந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் சுவாச கதியானது ஒரே விதமாக இருக்கிறதா அல்லது வித்தியாசப்படுகிறதா என்ற கேள்வி ஏற்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் சரீர அமைப்பில் எத்தனையோ வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் இவைகள் அடிப்படையான வித்தியாசங்கள் அல்ல. ஆதலால் சுவாசகதி சம்பந்தமான முறைகள் இருவருக்கும் சமமாகவே பொருந்தும்.

சுவாச முறையில் ஏற்பட்ட அப்பியாசங்களை இருவருக்குமே பயின்று பயன்பெறலாம். பூவுலகில் இறைவன் சூரியனுக்கு புருஷனை பிரதிநிதியாகவும் சந்திரனுக்கு பெண்ணை பிரதிநிதியாகவும் படைத்து இருக்கிறார். புருஷனிடத்தில் பிரகாசிக்கும் முக்கிய குணம், தன்மைகள் எல்லாம் சூரியனுடையவைகளே ஆகும். அதே போல ஸ்திரீயிடம் காணப்படும் தன்மை, குணம் யாவும் சந்திரனுடையவைகளே.

இதை இந்த சாஸ்திர பாஷையில் சொன்னால் இடது நாசி வேலை செய்யும் சமயத்தில் அதாவது சந்திர நாடி ஓடும் பொழுது மனிதனிடம் அவனுடைய சூரிய குணங்கள் சந்திர நாடியால் ஆழ்த்தப்பட்டு சூரிய குணங்கள் தலை தூக்காது அமைதியுடன் இருக்க ஏதுவாகிறது என்றும், சூரிய நாடி ஓடி வலது நாசி வேலை செய்யும் பொழுது சூரிய குணங்கள் ஓங்கி நின்று பிரகாசித்து வருகின்றன என்றும் அறிய வேண்டும்.

அதே போல ஸ்திரீகளிடத்தில் சந்திர நாடி ஓடும் பொழுது சந்திர குணங்கள் ஓங்கி பிரகாசிக்கின்றன என்றும், சூரிய நாடி ஓடும் பொழுது சந்திர நாடி அடங்கி நிற்கும் என்றும், சொல்லக் கூடும். இவற்றை ஆதாரமாக வைத்து இருவராலும்

சேர்ந்தே செய்யப்பட வேண்டிய விடயங்கள் இன்னவை என்றும் அவைகளின் முறைகளையும் முன்னோர்கள் நமக்குத் தொகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.



பத்மாசனம்


★ கஷ்டங்களில் சிக்கி தவிக்கும் ஒருவன் இரண்டு வித உபாயங்களால் தனக்கு ஏற்பட் டிருக்கும் துரதிர்ஷ்டத்தை மாற்றிக் கொள்ள முடியும். அதன் விபரங்கள்:

அ) சூரிய உதயத்துக்கு முன்னதாக குறைந் தது அரை மணி நேரம் முன்பே படுக்கையை விட்டு எழுந்து விட வேண்டும்.

ஆ) எழுந்த உடன் சுவாச கதியை கவனிக்க வேண்டும். சுவாசம் மூக்கில் எந்த பாகத்தில் ஓடுகிறதோ அந்தப் பக்கத்துக் கையைக் கொண்டு முகத்தையும் வாயையும் அழுத்தி துடைத்து விட்டு எழுந்து படுக்கையில் உட்கார வேண்டும். பின் எந்த நாசியில் சுவாசம் ஓடிக் கொண்டு இருக்கிறதோ அந்தப் பக்கத்துக் காலை படுக்கையில் இருந்து எழுந்து பூமியில் வைத்து நடக்க ஆரம்பிக்க வேண்டும்.

இந்த எளிதான முறைகளை எவர் அனுஷ்டிக்கிறாரோ அவர்கள் வாழ்க்கையில் சுகவான்கள். சரீரம், மனம் இவற்றின் சமநிலை சுக மளிக்கும். ப்ரம்ம முகூர்த்தத்தில் எழுந்து ஸ்நானம் செய்தால் தாதுக்கள் சரியான நிலையில் இருந்து வரும்.

★ எந்தவித வேதனை ஆனாலும் ஜ்வரம் ஆனாலும் என்ன வியாதி ஆனாலும் அப்பொ முது எந்த நாசி வழியாக சுவாசம் ஓடிக் கொண்டிருக்கிறதோ உடனே அந்த நாசியை அடைத்து விட வேண்டும்.



எத்தனை நாள் வரை சரீரம் தனது சுபாவ நிலையை அடையவில்லையே அது வரை அந்த மூக்கை அடைத்தே வைத்து இருக்க வேண்டும்.

இதனால் வியாதி சீக்கிரம் குணம் அடைந்து விடும்.

★ வெகு தூரம் நடத்தல், தேகப் பயிற்சி மற்றும் உழைப்பு, சூரிய வெயிலின் கடுமை இவை களால் சரீரம் களைத்து இருக்கும் போது கொஞ்ச நேரம் வலது பக்கமாய் படுத்து இருந்து வந்தால் சற்று நேரத்தில் இந்த களைப்பு எல்லாம் தீர்ந்து விடும்.

★ கடும் வெயிலில் வெளியே செல்லும்போது அங்கவஸ்திரம் அல்லது கைக் குட்டையால் இரு காதுகளையும் மூடிக் கொள்ளவேண்டும்.

இதனால் வெயிலில் போனாலும் உஷ்ணத்தினால் ஏற்படும் தோஷங்கள் ஒன்றும் சரீரத்தை தாக்காது. காதுகளில் காற்று படாதபடி இரு காதுகளையும் மூடிக் கொள்ள வேண்டும்.

★ஞாபக சக்தி குறைந்து விட்டால் தலை யின் மேல் ஒரு மரத்துண்டை வைத்து அதன் மேல் ஒரு சிறு மரத்துண்டை வைத்து அதை மெது வாக தட்டி அடித்தால் ஞாபக சக்தி வளரும். அரை அவுன்ஸ் நெய் யுடன் எலு மிச்சம் பழ சாற்றை கலந்து சுடவைத்து சாப்பிடவும். இதனால் ஞாபகசக்தி அதிகமாகும். கண்கள் கூர்மை அடையும்.

★ தினந்தோறும் பத்மா சனத்தில் அமர்ந்து பற்களின் மூல பாகத்தில் நாக்கின் நுனியை வைத்து அழுத்திக் கொண்டு இருந்து வந்தால் எல்லா வியாதிகளும் நீங்கி விடும். வியாதிகள் வராமல் தடுக்கும். ஆரோக்கியம் உண்டாகும்.


★ தினசரி அரை மணி நேரம் சித்தாசனத்தில் இருந்து நாபி பிரதேசத்தை தியானித்து வந்தால் உடல் நன்கு வலுப்பட்டு எப்படிப்பட்ட வியாதியானாலும் போய்விடும்.

— சிவராஜ யோகி

திருநெல்வேலி மாவட்டத்துப்புளியங்குடிகிராமத்தில் வசித்து வருபவர் மகேந்திரன், ஒரு பஸ் கண்டக்டராக இருக்கிறார்.

மகேந்திரன் தாயார் தெய்வ பக்தி உடையவர். அம்மாவிடமும் நம் குருபகவானிடமும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தினமும் அம்மா படத்தையும் குரு படத்தையும் வைத்து வழிபட்டு வருபவர் தொண்டு செய்பவர். மகேந்திரனுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. போயும் போயும் சாதாரண மனுஷளை வைத்து இவர்களெல்லாம் கும்பிடு கிறார்களே என்று கேலி பேசி வந்தார்.

சமீபத்தில் இரண்டு வருடங்களாக் மகேந்திரனுக்கு ஒரு பிரச்சினை! அவர் கால்களில் அடிக்கடி கொப்புளம் தோன்றும். நடக்க முடியாமல் தவிப்பார்.



துக் கொள்வார். அப்படித் தேய்த்தால் ஊறல் நிற்கும். அதன் பின் இரத்தம் வரும். சிறிது நேரம் கழித்து அங்கங்கே கொப்புளம் ஏற்படும். இப்படிப்பட்ட வேதனையுடன் பஸ் கண்டக்டர் தொழிலைப் பார்த்துக் கொண்டு வந்தார். அதிகம் லீவு எடுக்க வேண்டி இருந்தது. சம்பள மில்லாத லீவு எடுத்துக் கொண்டு மருத்துவ சிகிச்சையும் பெற்றுக் கொண்டு சமாளித்து வந்தார். வருமானம் போதவில்லை. இரண்டு வருடங்களாகப் படாத கஷ்டம் பட்டுக் கொண்டு வந்தார். வாழ்க்கையே வெறுக்க ஆரம் பித்தார்.

மாதா பிதா செய்த புண்ணியம் மக்களுக்கு ஆகும் என்பது பழமொழி, தாயின் தெய்வ பக்தியும், வழிபாடும், அன்னை ஆதிபராசக்தியின் கருணையை ஈர்த்தன. ஆம்! அந்தத் தாயின் தெய்வ பக்திக்கு ஆட்பட்டு அவர் பிள்ளைக்கு இரங்

# பக்தரின் கனவில் தோன்றிய



அதிகமாக நடந்தால் காலில் ஊறல் ஏற்பட்டு அதன் பிறகு அரிப்பு ஏற்படும். நன்றாகச் சொறிந்து கொள்ள வேண்டும் போல் இருக்கும். ரோட்டில் நடக்கும் போதே காலைத் தேய்த்

கினாள் அன்னை. அன்னை ஆதிபராசக்தியின் மறு உருவமான அருள்திரு அடிகளார் மகேந்திரனின் கனவில் தோன்றி, அவர் தலையில் திருவடியை வைத்து, "அங்கே இங்கே அலைவதைவிட்டுக் கோயிலுக்கு வாடா! அமாவாசை வேள்வியில் கலந்து கொள்ளடா! உன் கால் நோயைக் குணப்படுத்துவேன் மகனே! யோசிக்காமல் வாடா" என்று உத்தரவிட்டு மறைந்துவிட்டார். மறுநாள் கண்ட கனவைத் தாயாருக்குச் சொன்னார் மகேந்திரன். அந்த தாய்க்கு அதிக மகிழ்ச்சி!


அமாவாசை தோறும் நம் ஆலயத்தில் வேள்விப் பூசை நடக்கிற விபரம் தாய்க்கும் மகனுக்கும் தெரியாது. அருகில் உள்ள ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத் துக்குச் சென்று விபரம் கேட்டனர். மன்றத்தார் அமாவாசை வேள்வி பற்றிய விவரங்களைக் கூறினர். முதன் முறையாக மகேந்திரன் வேல்மருவத்தூர் வந்தார். குரு பகவான் தரிசனம் பெற விரும்பினார். ஒரு தட்டில் பூ, பழம், குங்குமம், எலுமிச்சம் பழம் வெற்றிலைப் பாக்கு, குரு காணிக்கை வைத்து முறைப் படி தரிசனம் பெற வேண்டி வரிசையில் அமர்ந்திருந்தார். அவரை அழைத்தார்கள். குரு

பகவான் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தார். அன்று நம் குருபகவான் மௌன விரதம், ஆசி உண்டு என்று மட்டும் சைகைகளால் காட்டினார்கள். சக்தி வாங்க! வாங்க! என்று அருகிலிருந்த தொண்டர்கள் விரைவு படுத்தியதால் வெளியே வந்து விட்டார் மகேந்திரன்.

அம்மா நமக்கு ஒன்றும் சொல்லவில்லையே என்ற ஏக்கத்தில் மகேந்திரனுக்கு அழுகையே வந்து விட்டது. ஓ! என்று அழுதார். விசும்பி விசும்பி அழுதார்.

விவரம் அறிந்ததொண்டர்கள் சிலர், "சக்தி! நாளைக்கு அம்மாவைப் பாருங்கள்! நிச்சயம் பேசுவாங்க! உங்க கனவிலேயே வந்து பேசியதாலே அம்மா நிச்சயம் பேசுவாங்க!" என்று ஆறுதல் கூறினார்கள்.

அன்றிரவு அந்த அமாவாசை வேள்வியில் கலந்து கொண்ட மகேந்திரன், மறுநாளும் தங்கியிருந்து குரு தரிசனம் பெற நீண்ட நேரம் காத்திருந்தார். அழைப்பு வந்தது. முதல் நாள் இருந்த பதட்டம் இன்றில்லை.



# அருள்மிகு அடிகளார்



அம்மாவின் திருவடிகளில் விழுந்து எழுந்தார். அம்மா கருணையோடு அவரைப் பார்த்துச் சொன்னார்கள்.

"உன் கால் வேதனைக்கு, ஐம்பதாயிரம் வரை செலவு செஞ்சுட்டே... இப்ப அம்மா கிட்ட வந்துட்டே... கவலைப்படாதே! அம்மா குணப் படுத்திவிடும். சிறியா நங்கை இலை! முனை முறியாத விராலி மஞ்சள் மூன்று, சுயம்பில் வைத்த விபூதி இந்த மூன்றையும் ஒரு சேர அரைத்து காலை, மதியம், மாலை மூன்று வேளையும் தடவிக் கொண்டு வா! உன் காலில் இருக்கும் புண் இருந்த இடம் தெரியாமல் போயிடும்! அம்மா தொண்டு நிறைய பண்ணு தொடர்ந்து மூன்று அமாவாசைக்கு வா! உன் குடும்பம் அம்மா பொறுப்பு" என்று கூறினார்கள். மனப்பாரம் நீங்கிய நெஞ்சோடு வெளியே வந்தார் மகேந்திரன்.

முதல் நாள் அமாவாசையில் கலந்து கொண்ட மகேந்திரனுக்கு உடனே பலன் கிடைத்தது. ஊருக்குத் திரும்பியவுடன் அம்மா சொன்ன மருந்தை அரைத்து மூன்று வேளையும் தடவினார்.

1. காலையில் ஒரு முறை தடவியவுடன் ஊறல் எடுப்பது நின்றது.

2. மதியம் தேய்த்தவுடன் அரிப்பு ஏற்படுவது முற்றிலும் நின்று விட்டது.

3. மாலையில் தடவிய பிறகு முற்றும் குணம் அடைந்தது. கொப்புளம் கால் வீக்கம் எதுவும் இல்லை.

மகேந்திரனால் நம்பவே முடியவில்லை. ஒரே நாளில் குணமாகி விட்டதே...!

சாதாரண மகேந்திரன் இப்போது சக்தி மகேந்திரனாக மாறி விட்டார்.

எப்போதும் அம்மா நினைப்பு! அம்மா தொண்டு! இப்போது ராஜ நடை போட்டு நடக்கிறார்! எல்லாம் அம்மாவின் கருணை!

– சக்தி சாரி

போதி தர்மர் இங்கு சில நற்பேறுகளைப் பற்றிக் குறிப்பிட்டபடியே இந்தத் தலைப்பை நிறைவு செய்கிறார். தரும சிந்தனையைப் பயிற்சி செய்வது அல்லது தாராள மனப்பான்மையைப் பயிற்சி செய்வது, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொறுமை, சக்தி அல்லது பக்தி, கூர்ந்து கவனித்தல் அல்லது தியானம் மற்றும் அறிவாற்றல் என்று அனைத்து செயல்களுமே, "நான் இவற்றைச் செய்கிறேன் என்ற எண்ணம் இல்லாமலேயே செய்யப்படுவது ஆகும்.

# ஆன்மீகப்பரிமாணத்தின் மூலமே விடுதலை!



நம் அனைவருக்குமே மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற ஆவலும் துடிப்பும் இருக்கின்றன என்றே நான் எண்ணுகிறேன். நமது தேவைகளை முழுமையாக நிறைவேற்ற, நமது வாழ்க்கையின் சூழ்நிலைகளில் அமைதியுடன் இருக்க, இவை மிகவும் இயற்கையான, ஆழமான விருப்பங்களாகவே நமக்கு இருக்கின்றன. இருப்பினும், நாம் வளர்ந்து வந்து விட்டோம். நாம் இவை அனைத்தையும் செய்வதற்கு மிகவும் கஷ்டங்களைக் கண்டோம். ஆயினும், மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு நாம் எடுத்துக்கொண்ட எந்த முயற்சிகளும் வெற்றி பெறவில்லை. நீண்ட காலங்களாகவே இவை வெற்றி பெறவில்லை என்பது உண்மை. நாம் நமது மகிழ்ச்சிகளுக்குப் பிறரையே சார்ந்திருக்க வேண்டும். நம்முடைய மனநிறைவு அசைவற்று, வளர்ச்சி குன்றி இருப்பதைக் காண்கிறோம். இதற்கு நமது சூழ்நிலையும், மற்றவர்களும், நமது தனிப்பட்ட ஐயங்களுமே காரணமாகின்றன. மற்றவர்கள் நம்மைத் தொல்லை செய்து, நமது செயல்களில் குறுக்கிடும் பொழுது, அதை நாம் கூர்ந்து கவனித்து புரிந்து கொள்கிறோம். அப்போது நமது வாழ்க்கையின் இத்தகைய சூழ்நிலையைத் தாங்கிக் கொண்டு இருப்பது, இனிமேல்

இயலாத காரியம் என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. மேலும் நாம் எண்ணும் வகையில் காரியங்கள் நிறைவேறாத நேரங்களிலும் இவ்வாறே எண்ணுகிறோம்.

நாம் அறிந்து கொள்ளாமலேயே, ஒரு கட்டுத் திட்டங்கள் நிறைந்த வாழ்க்கைக்குள் வந்துசேர்ந்து விட்டோம். அதேநேரத்தில், நமது திறமைகள் கட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பதையும், நாம் நம்முடைய சிறு தவறுகளின் காரணமாக மிக உயர்ந்த நிலையில் இருந்து கீழிறங்கி, ஒரு வித மரத்துப்போன வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் அறிகிறோம். உண்மையான மகிழ்ச்சியை அடைய வேண்டுமானால், அமைதியாக எளிமையாக வாழ வேண்டுமானால், தனிப்பட்ட சுதந்திரம், அதாவது நான் மாத்திரமே என்ற சுதந்திரம் தேவைப்படுகிறது. நாம் ஆன்மிகப் பரிமாணத்தின் மூலமே விடுதலை பெற்றவர் ஆக வேண்டும். பௌத்தம் என்பது ஒரு மதமோ அல்லது ஒரு சில தத்துவங்களோ அல்ல. ஆயினும் அது இந்த இரண்டு பகுதிகளையும் உட்கொண்டதாக இருக்கிறது. பௌத்தம் என்பது படிப்பினைகள், தியானங்கள், வழிமுறைகள் மற்றும் சடங்குகளின் ஒரு தொகுப்பே ஆகும்.

## நானிலம் போற்றும் நல்ல குணங்கள்!

புராணங்களும் இதிகாசங்களும் மனிதர்களிடத்திலே இருக்க வேண்டிய நல்ல குணங்களை பற்றி எடுத்து இயம்புகின்றன. பொறுமையாய் இருப்பது, அடக்கத்தோடு இருப்பது, பற்றற்று வாழ்வது, நடுநிலையை அனுசரிப்பது, நம்பிக்கையோடும் அமைதியோடும் வாழ்நாளை கழிப்பது போன்றவைகள் நல்ல குணங்களாக போற்றப்படுகின்றன.

**துன்பங்களுக்கான காரணங்களில் கீழ்க் காணும் அம்சங்கள் அடங்கியுள்ளன.**

**1. ராகா (ஆசைகள், விருப்பங்கள்) பல வகையான பொருள்களின் மீது விருப்பம் ஏற்படுவது, அதில் நாம் மிகவும் அன்பு செலுத்துபவர்களிடம் இருந்து நிரந்தரமான ஆறுதலை, மனஅமைதியை தேடுகிறது.**

**2. தோஷா (எண்ணம்) நமக்கு மனநிறைவு தராத பொருட்களை ஒதுக்கி விடுதல்.**

**3. அவித்யா (அறிவின்மை) எந்தப் பொருளையுமே அது எப்படி இருக்கிறதோ அப்படியே காணாமல், மாற்றாக வேறு பொருள்கள் வேண்டும் என்று விரும்புதல்.**

**4.அறிவீனம் என்பது பொருள்களின் உண்மை நிலையை உணராமல் குழப்ப மடைந்து, பலவிதமான கற்பனைகளில் மூழ்கி இருப்பதே ஆகும். நாம் பொருள்களை வேறு வேறாகப் பார்க்கத் தொடங்கும்பொழுது, நாம் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்ப்பது அதிகரிக்கிறது. இதற்குத் தக்க பயிற்சியும் தேவைப்படுகிறது.**

**பயிற்சி, அறிவு நுட்பம் பற்றியது (ஞான விளக்கம்) மக்களுக்கு நன்மை ஏற்படச் செய்வதற்காக உறுதிமொழி எடுத்துக் கொள்வது.**

நான்கு வகையான மெய்யறிவுகள் கொடுப்பதற்கு முன்வருதல், மென்மைத் தன்மை, கருணையான பேச்சு, இரக்கத்துடனும் நல்லெண்ணத்துடன் உதவுதல் ஆகியவைதான் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கான வழிமுறைகள் ஆகும். இவையே போதி சத்துவரின் பயிற்சி முறைகள் ஆகும். எந்தவொரு பொருளும் ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது அல்ல என்பது உண்மை தான். ஆனால், இந்த நிலை நாம் கொடுப்பதற்குத் தடை செய்யாது. நாம் கொடுப்பதின் அளவு பற்றிய சிந்தனை இங்கு தேவை இல்லை. நாம் கொடுப்பதை எந்த அளவு ஆத்மார்த்தமாகக் கொடுக்கிறோம் என்பதுதான் சிந்திக்க வேண்டிய விடயம். எனவே ஒருவர், தான் பெற்ற போதனைகளில் இருந்து ஒரு சொற்றொடர் அல்லது சிறந்த கவிதையின் ஒரு வரியை கொடுக்க முன் வர வேண்டும். ஏனெனில் இது இந்த வாழ்வின் மற்றும் மறு வாழ்வின் நன்மைக்கான ஒரு விதையை ஊன்றி விடுகிறது. இதுபோன்றே ஒரு நாணயத்தையோ அல்லது ஒரு புல்லின் இலையையோ கொடுக்க முடிந்தால் அது நன்மைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்க முடியும். இந்தப் படிப்பினைகளே சிறந்த பொக்கிஷங்கள் ஆகும். இத்தகைய உண்மையான பொக்கிஷங்கள்தான் படிப்பினைகள்இங்குஎந்தவித மான பலன்களையும் எதிர்பாராமல், மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே முழு மனத்துடன் ஆத்மார்த்தமாக கொடுத்தவர்களும் இருக் கின்றனர்.

ஒருபடகைக் கொடுப்பதும் மற்றும் ஒரு பாலத்தைக் கட்டுவதும் ஆகிய இரு பணிகளுமே, கொடுக்கும் பணிகள்தாம். மற்றவர்களுக்கும் பயன் அளிப்பவைகளாக இருக்கும் பட்சத்தில் அனைத்து விதமான தொழிற்சாலைகளுமே கொடுத்தலைத்தான் செய்கின்றன. அனைத்து உயிர்களையும், கருணை நிறைந்த கண்களுடன் உற்றுப் பார்த்தபடி அவர்களுடன் கனிவாகப் பேசுவது தான் மென்மைத் தன்மை. மென்மையாக இருப்பது எப்படி என்பதை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவர் அனைத்து உயிர்களையும் தன்னுடைய சொந்தக் குழந்தைகளாகவே எண்ணும் மனநிலையோடு இருக்க வேண்டும்.

நம்பி



# மிதுனம்

குடும்பபாரம் ஏற்று பல காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சுக்கிரனும் சனியும் சாதகமான சூழ்நிலையில் இருப்பதால் ஆறுதலான பலன்கள் கிடைக்கும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.

### பணியாளர்களுக்கு

பணி புரியும் இடத்தில் பல சிரமங்களை சந்தித்து வந்தாலும் உங்களின் கிரக நிலைகள் சரியில்லாமல் இருப்பதாலும் அதிகாரிகளிடம் அனுசரித்து செயல்படுவது நல்லது. பொருளா தாரத்தில் சீரான நிலை இருக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் ஆர்வம் கொண்டு விளங்கும் நீங்கள் உதவி கள் செய்ய போய் மன அமைதியின்மை உண்டாகும் படி அமைந்து விடும். ஆதரவாளர்கள் உதவிகள் இருக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் எதிர்பார்த்த வருமானம் இல்லை என்றாலும் தேவைகளுக்கு நல்ல பலன் கிட்டும் வருமானம் கிட்டும். தேங்கி கிடக்கும் பொருட்களை சலுகைகளை கொடுத்து விற்று வருமானத்தை பெருக்கு கொள்வீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு முன்னேற்றம் உண்டாகும். வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். கோவில் திருவிழாக்களில் கலந்து கொள்வீர்கள். பொருளாதார நிலை உயரும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கையில் சில சோதனைகள் வந்து மறையும். எதிரிகளுக்கு கூட உதவும் பண்பு உண்டாகும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் சிறப்பாக முன்னேற்றம் காண்பீர்கள். சொந்த முயற்சியில் படிப்பில் கவனம் செலுத்தி நல்ல மதிப்பெண் பெறுவீர்கள்.



**சூரிய உதயத்தில் தூங்காதீர்!**

எக்காரணத்தைக் கொண்டும் சூரியன் உதிக்கும் போதும் மறையும் போதும் தூங்காதீர்கள். உலகத்துக்கே ஒளியை அளித்து வரும் ஆதவன், நம் வாழ்க்கையிலும் ஒளி ஏற்றட்டும்!

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

23.09.2015 புதன் காலை 09.36 முதல் 25.09.2015 வெள்ளி பகல் 1.26 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்

சில்லறை விற்பனையாளர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். சகோதரர்களின் ஆதரவு கிட்டும். ஒன்லைன் வர்த்தகம் ஆதாயம் தரும்.

### திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

பணியில் இருப்பவர்களுக்கு சில கஷ்டம் வந்தாலும் எதிலும் வெற்றியை பெறுவீர்கள். வெளிநாட்டு தொடர்புகள் கிட்டும். தூரத்து உறவினர் சந்திப்பு மகிழ்ச்சியை தரும்.

### புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

புத்திரர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். உயர் கல்வி படிக்கும் வாய்ப்புகள் கை கூடும். தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்**

பச்சை, வெண்மை, இளநீலம்

**அதிர்ஷ்ட திசைகள்**

மேற்கு, வடமேற்கு, தென்மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** புதன், வெள்ளி, திங்கள்

### இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை வணங்கி மஞ்சள் தூளால் அபிசேகம் செய்து சர்க்கரை தானம் செய்துவர தடைகள் நீங்கி நன்மை உண்டாகும்.



ஜீ.எஸ்.கபர்தே என்பவர் மிகச் சிறந்த சாயி பக்தர் அவருக்கு பல்வந்த் என்ற பெயர் கொண்ட மகன் இருந்தான்.

அவனுக்கு ஒரு இரவு கனவில் சாயிபாபா தமது வீட்டுக்கு வந்தது போலவும், அவரை வரவேற்று விருந்து அளித்து உபசாரம் செய்வது போலவும் தெரிந்தது. அதைத் தந்தை கபர்தேயிடம் கூறினான். தனது மகன் பார்த்த கனவை தந்தை நம்பவில்லை. "கனவு உண்மை ஆகிவிட முடியாது. உன் கற்பனையை பலருக்கும் விற்பனை செய்யாதே" என்று கூறினார்.

ஆகவே இதைப் பற்றி இருவரும் தம் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்குக்கூட கூறிக் கொள்ளவில்லை. தந்தையும் மகனும் அன்று மாலை சாயிபாபாவை தரிசனம் செய்யச் சென்றனர்.

பலவந்தை நோக்கி "வா" என்று அழைத்தார் பாபா. பிறகு "குழந்தாய்! நேற்று இரவு உன் இல்லத்தில் விருந்து

# விருந்துடன் காணிக்கை கொடு

நேரத்தில் நீ விருந்து மட்டுமே கொடுத்தாய். ஆனால் ஏன் எனக்கு காணிக்கை எதுவும் கொடுக்கவில்லை? காணிக்கையில்லாத விருந்து த(ாழ்ந்த) மோ குணதானம் என்று கீதை மற்றும் சாஸ்திரங்கள் கூறும். சரி, அப்பொழுது தராத காணிக்கையை இப்பொழுது பெற்றுக் கொள்கிறேன். காணிக்கையாக ரூபாய் இருபத்தைந்தை நீ தரவேண்டும்!" என்று உரிமையுடன் கேட்டார்.

கபர்தேயும் பலவந்தும் பெற்ற ஆனந்தத்திற்கு அளவே கிடையாது. அவர் இருந்த இடத்திற்குச் சென்று காணிக்கைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வந்து சாயிபாபாவிடம் சமர்ப்பணம் செய்தார்கள். கனவில் பன்தர் அளித்த விருந்திற்கு நனவில் காணிக்கை பெற்று அவருக்கு ஞானத்தை வழங்கினார் சாயிபாபா.

– இரா. மணிகண்டன்

# பரிவு எப்போதும் பரவசத்தையே தரும்



பரிவு என்பது இன்னோர் உயிரை முக்கியமாக உணர்வது. அவர்களை மதிப்பது, அவர்களைப் போலவே சிந்திக்க வேண்டும் உணர வேண்டும் என்றெல்லாம் தேவையில்லை.

இந்தப் பரிவுணர்வின் ஆகச் சிறந்த அடையாளமாய் நான் வாழ்வில் கண்ட ஒருவரைப் பற்றி உங்களுக்கு சொல்ல வேண்டும். என் கொள்ளுப் பாட்டிதான் அவர், அவரைப் பற்றி பலரும் சொல்வது, "அவர் ஒரு பெண்ணல்ல, பேய்" என்று, அவர் எந்தத் தீமையும் செய்தவரில்லை. ஆனால், சிரித்தால் பேய்த்தனமாகச் சிரிப்பார். அவருடைய சிரிப்பொலியில் வீதியே அதிரும்.

அந்தக் காலங்களில் பெண்ணென்றால் அவ்வளவு சத்தமாகச் சிரிக்கக் கூடாது என்று ஒரு எண்ணம் இருந்தது. அவர்கள் சிரிப்பு வந்தாலும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றிருந்த காலத்தில் இவர் வீதி அதிரச் சிரிப்பார். 113 வயது வரை வாழ்ந்தார். அவர் சாகவேமாட்டாரென்று ஊரார் நினைத்து விட்டார்கள். அவருடைய பிள்ளைகள் இறந்தனர். பேரன் பேத்திகளில் சிலர் இறந்தனர். கொள்ளுப் பேரக் குழந்தைகளில் கூட சிலர் இறந்தனர். ஆனால், அவர் ஆயுள் நீண்டு கொண்டே போனது.

தன் அறுபத்தெட்டாவது வயதில் குடும்பத்தை விட்டு வெளியேறினார். கணவனும் மகனும் இறந்த பிறகு, வீட்டை விட்டு வெளியேறி வேறு யாரோ ஒருவரின் நிலத்தில் ஒரு கோயிலைக் கட்டி குடியேறினார். அவர் குடும்பத்திற்குச் சொந்தமாக நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் நிலம் இருந்தது. இருந்தும் இன்னொருவர் நிலத்தில் கோயில் கட்டிக் குடியேறியதால் அதை குடும்பமே தலைகுனிய வேண்டிய விடயமாக நினைத்துவிட்டது. குடும்பத்திற்கே அவர் அவமதிப்பை கொண்டு வந்துவிட்டதாக எல்லோரும் நினைத்தார்கள். கோடை விடுமுறைக்கு நாங்கள் தாத்தா ஊருக்குப் போகும் போது குழந்தைகளைப் பார்க்க அவர் வீட்டுக்கு வருவார். அற்புதமான பெண்மணி தியானத்தில் அமர்ந்தால் ஒரு விநாடியில் அவர் ஆனந்த பரவசத்தில் மூழ்கிவிடுவார்.

உண்மையில் அது மிகவும் எளிது. உங்களுக்கு பரவசத்தில் மூழ்க வேண்டுமென்றால் எந்த போதைப் பொருளும் தேவையில்லை. அதற்கான அத்தனை ரசாயனங்களும் உங்கள் உள் அமைப்பிலேயே உள்ளன. அவர் எப்போதும் பரவசத்திலேயே இருப்பார். முழங்கால் வரை நீண்ட அவர் கூந்தலை விரித்து விட்டிருப்பார். அவரை நான் முதன்முதலாகப் பார்த்தபோது அவருக்கு வயது நூறு, வெடித்துச் சிரித்தபடியே தன்னை மறந்து நடமாடுவார். பார்க்கிறவர்கள், இவருக்கு பைத்தியமோ என நினைக்கும் படி ஆடுவார். அவர் மேல் எனக்குத் தனியானதொரு



பிரியம் உண்டு. அப்போது எனக்கு ஐந்து வயதிருக்கும் அவருக்குக் காலை உணவு கொடுத்தால் உடனே வெளியே போய் ஊர்ந்து கொண்டிருக்கும் எறும்புகளுக்கும், பிறகு குருவி களுக்கும் அணில்களுக்கும் தன் உணவைக் கொடுப்பார். அவருடைய தட்டில் கொஞ்சம்தான் மீதமிருக்கும். "உங்களுக்கு வயதாகிவிட்டது. சரியாக சாப்பிடாவிட்டால் செத்துப் போவீர்கள்" என்று சிலர் அவரிடம் சொல்வார்கள். அப்படிச் சொன்னவர்களெல்லாம் செத்துப் போனார்கள். அவர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

பல நாட்கள் எறும்புகள் உண்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார். கண்ணீர் சொட்டிக் கொண்டேயிருக்கும். பிறகு தன் உணவுத் தட்டைத் தள்ளி வைத்துவிட்டு "வயிறு நிரம்பிவிட்டது" என எழுந்து கொள்வார்.

நான் சிறுவன். அந்த எறும்புகளைப் பார்த்து அவர் அழுகிறாரே என ஓடிப்போய் அந்த எறும்புகளை மிதிப்பேன். ஆனால் அந்த உயிர்களுடன் ஓர் ஒத்திசைவை உணர்ந்தவராய் அமர்ந்திருக்கிறார் என்பதை நான் உணர வெகுநாட்கள் ஆயின. அவர் உண்ண வில்லை. ஆனால் எறும்புகள் உண்டதில் அவர் ஆரோக்கியமடைந்தார். நன்கு சாப்பிட்டவர்கள் இறந்தனர். இவருடைய ஆயுள் நீண்டு கொண்டே போனது.

பதினான்கு வயதில் அவருக்கு திருமணம் நடந்திருந்தது. அந்தக் காலத்தில் பெண்கள் திருமணமாகிவிட்டால் வெற்றிலை புகையிலை சாப்பிடலாம். பதினான்காவது வயதிலிருந்து புகையிலை போடத்தொடங்கியவருக்கு நூற்றுப் பதினோராவது வயதில் தொண்டையில் புற்றுநோய் வந்தது. சிகிச்சை மேற்கொள்ள மறந்துவிட்டார். பெரிய புண்ணாகிவிட்டது. அசுர வலி அவருக்கு. ஆனால் ஒரு வலி நிவாரணி மாத்திரை கூட எடுத்துக் கொள்ளவில்லை.

தன்னுடைய நூற்றுப் பதின்மூன்றாவது வயதில், தன் நிலை சிறிதும் தாழாமல் மருத்துவ மனை போகாமல் அமர்ந்த நிலையிலேயே அவர் இறந்தார். சக உயிர்கள் மீது அவருக்கிருந்த பரிவு அவரை பரவசத்திலேயே வைத்திருந்தது. எல்லாம் ஒரே சக்திதான் என்பதை இன்று அறிவியல் உங்களுக்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இதைத்தான் மதங்கள் காலங்காலமாக கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று சொல்கின்றன. இரண்டும் ஒரே உண்மையைத்தான் சொல்கின்றன.

விஞ்ஞானிகள் தங்கள் ஆய்விலிருந்து சொல்கிறார்களே தவிர அனுபவத்திலிருந்து சொல்லவில்லை. மதவாதிகள் அதனை தங்கள் அனுபவத்திலிருந்து சொல்லவில்லை. ஆனால் ஏதோ ஒரு நாள் அதனை அனுபவித்தவிட முடியும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் சொல்கிறார்கள்.

யோகா என்றால் ஒன்றுதல். எனவே பரிவின் உச்சமே யோகாதான். இந்த இருப்பின் தன்மையுடன் நீங்கள் ஒன்றிப் போகிறீர்கள். சிலர் இதனை உணர்வுப்பூர்வமாக காண முற்படுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் சிக்கிப் போகிறார்கள். உணர்வு சார்ந்த ஒன்றுதல் பிணைப்பாகத்தான் இருக்கும். பரிவை உணர்ந்தால்தான் ஆனந்தத்தை உணர்வீர்கள்.

இந்தப் பிரபஞ்சமே முழுமையான ஒழுங்கில் இயங்குகிறது. சில தனி மனிர்கள்தான் துயரத்தை உற்பத்தி செய்து கொள்கிறார்கள். தங்களுக்கு வழங்கப்பட்ட மனம் என்பது ஒரு பேரற்புதம் என்பதை உணராமல், அதை துயரங்களின் உற்பத்திக்கான எந்திரமாய் மாற்றிவிட்டார்கள். அவர்களிடம் நீங்கள் பரிவு காட்டிப் பயனில்லை. அவர்கள் தலையில் தட்டி உண்மையை உணர வைக்க வேண்டும்.

தங்களுக்காக யாரோ துயரத்தை உருவாக்குவதாய் அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் தங்கள் துயரத்தை தாங்களே உற்பத்தி செய்து கொள்கிறார்கள்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**



# நல்லூர் கந்தனும் திருவருளும்

சிவபூமியென்று திருமூலநாயனார் திருமந்திரத்தில் போற்றியது ஈழமணித்திருநாடு ஆகும். இந்நாட்டின் நான்கு பக்கமும் புனித தீர்த்தம் அலை மோதிட பஞ்ச ஈச்சரங்கள் விளங்குவதுடன் சிவனுக்கு நிகரான ஞான சொரூபியாகிய முருகப் பெருமான் வழிபாடும் பழைமை யும் பெருமையும், உடைய நிலையில் விளங்குகிறது.

"தனக்கு தானே மகனாகிய தத்துவன்" என்று தணிகைப் புராணம் கூறுகின்றது. அதாவது சிவனிடமிருந்து உருவாகிய ஆறு தீப்பொறிகளும் சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாய் மலர்ந்தன. ஆண் பெற்றெடுத்தமையால் ஆண் பிள்ளை என்ற பெயர்க்குரியவன் சுப்பிரமணியன்.

ஈழநாட்டில் முருக வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு நிலவி வருவதைக் காணலாம். வேல் கொண்டு வழிபாடு ஆற்றுதலே மேலான வழிபாடாக நாடு பூராக இன மத வேறுபாடு இன்றிக் காணப்பட்டதாய் அகழ்வாராச்சியாளர் கருத்தாகும். வேல் ஞான சக்தியாகும். இச்சக்தியை முருகனுக்கு சிவன் பார்வதி கொடுத்த சிவ சக்தியே திருவருளாகும். ஆனால் அசுரத்தனம், அஞ்ஞானம் போன்றவற்றை அழிப் பதற்காக கொடுத்த ஆயுதம் என்பார்கள். மலங்களை அகற்றி ஞானத்தை நல்கிய சக்தி வாய்ந்த வேல் சூரனுக்கேமுக்தி கொடுத்தது. அதனையே அடியார் கள் நேரடியாக வழிபடுகிற பக்தி மேலோங்கி யதோ என எண்ணியதோடு மணிவாச கர் திருவாசக வரிகளை நினைத்துப் பார்ப்பது வழமை யாகும்.

"ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே..." என்ற தத்துவ சிந்தனை ஆதியந்தம் இல்லாததும் அகண்டிதமானதும் அணுவுக்கு அணுவான நுண்மையான பொர்ருளும் என்பதனைச் சித்தரித்துக் காட்டப்படுகிறது. எல்லை யிலாத ஞான சக்தியா கிய வேலினை கர்ப்பக்கிரு கமாகிய மூல மூர்த்தியாய் வழிபடு தற்குரிய ஆலயங் கள் சக்திவாய்ந்த புனிதத்தையும் அவற்றோடு பெருமையும் புகழும் ஓங்கி நிற்பதைக் காணலாம். அடியார்கள் எளிமையாகவும் ஆடம்பரம் இல்லாது வழிபடுதற்குரிய தலங்களாய் வேற்பெருமான் தலங்களைச் சுட்டிக்காட்டும் பக்தர்கள் அதிகம். அந்த வகையில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன், மண்டூர் முருகன், திருக்கோயிற் சித்திர வேலாயுதர் என்று பல கோயில்கள் உண்டு. அவற்றோடு கதிர்காமம் இயந்திரப் பெட்டி கொண்டு வழிபடப்படுதலும் ஆகம முறையில் மாருதப் புரவீக வல்லியினை வருகையால்

மாவிட்டபுரம் கந்தசாமியார் கோயிலும் விளங்குகின்றன.

இவற்றை யாழ்ப்பாண மக்கள் புகழ்ச்சி கூறுகின்ற போதும் நல்லூர் கந்தனை அலங்காரக்கந்தன் (பணக் கார கந்தன்) என்றும் தொண்டமாறு செல்வச் சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்றும் கதிர்காமம் கந்தனைக் காவடிக்கந்தன், கற்பூரக்கந்தன் என்னும் மாவிட்டபுரம் கந்தசுவாமியாரை அபிஷேகக் கந்தன் என்றும் புகழப்பட்டு வருகிறது.

முருகப் பெருமானின் இச்சாசக்தி வள்ளி கிரியாசக்தி தெய்வானை ஞானசக்தி வேல் ஆகும். அதனால் ''திருக்கை வேல் போற்றி போற்றி'' என்பர். ஆயிரம் கோடிசூரியன் ஒளியை வென்றதே வேல் எனக்கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகிறார். அஞ்ஞானம் முதலான தீமைகள் அனைத்தினையும் போக்கி ஞான ஒளிபரப்பி ஞான சொரூபியான உண்மைப் பொருளை உணர்த்திய பெருமான் என்பதை நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் பாடி யுள்ளார்.

**''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்— வாரி**
**குளித்த வேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்**
**துளைத்த வேல் உண்டே துணை''**

இத்தகு வேலின் துணையுடையார் வரலாறு நல்லூரான் வீதியில் "வழைமை படைத்த பக்தி முதலாய் வரலாறு கூறியிருக்கிறது. சிங்கை நகர் முதலாய் நல்லூர் தலைநகராய் விளங்கும் வகையில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தின் பெருமைக்குரியதாகும்? பொங்கொலி நீர்ச்சிங்கை நகராரியன்'' எனக்கோட்ட கமக்கல் வெட்டு குறிப்பிடுகின்றது. இவர்கள் வழியில் சப்புமல் குமாராயா என்ற ஸ்ரீசங்க போதி புவனேகவாகு குருக்கள் வளவளவு என்ற இடத்தில் அழிந்துபோன நல்லூர் கந்தசுவாமி கோயிலை மீண்டும் புதிதாகக் கட்டுவித்தார். யாழ்ப்பாணத்தில் மிகவும் பெரிய கோயில் என்று புகழப்பட்டது. மேலும் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் நல்லூர்கந்தப் பெருமான் தலைநகராக கொண்டு பரராஜசேகரன், செகராஜசேகரன் முதலான அரசர்கள் சைவநெறி வளர்த்த பெருமைக்கு உரியவர்களாய் விளங்கினர். இவ்வாறு ஆட்சி செய்த நல்லூர் கந்தப் பெருமானை எண்ணிப் பார்க்கும் போது போர்த்துக்கேயர் கடும்போர் செய்து வருகையில் சைவத் தமிழ் மக்களும் பிராமணர்கள் எல்லோரும் ஆலயத்தை மீட்டு எடுக்கப் போர் செய்து இறந்துபோக நல்லூர் ஆலயத்தை அழிப்பதை நோக்காகக் கொண்ட 'பிலிப்தே ஒலிவேறா'' என்ற போர்த்துக்கேயத் தளபதி தனது தங்கு கோட்டையாக அமைத்துக் கொண்டான். அவ்விடம் மீளவும் சிலர் சூழ்ச்சி யால் முற்று முழுதாக அழிக்கப்பட்டது. அச் சூழலிலே தான் சங்கிலிய அரசன் ஆண்ட அரண்மனைகள், அந்தப்புரம், மந்திரி அவைகள், யமுனா ஏரி என்பதை கொண்டிருந்தது என்பது இன்றைய எச்சங்களாகவே இன்று காணப்படுகிறது. அவ் நல்லூரான் இடம் கிறிஸ்தவ தேவாலயமாய் அமைந்துள்ளது. (செங்கை யாழியன்).

மறைக்கப்பட்ட செப்பேடுகள். கல்வெட்டுக்கள் போன்றவற்றை ஆதாரமாக கொண்டு மீண்டும் கோயிலைப் புதுப்பொலிவுறச் செய்ய கிருஷ்ணை யர் சுப்பையர் இரகுநாதமாப்பாண முதலியார் பரம்பரை பெரும் பிரயத்தனமாய் பணம் திரட்டிக் காணி வாங்கி முருகனுக்கு ஓர் அழகிய ஆலயம் அமைக்க பல்வேறுபட்ட இடர்பாடுகள் அல்லல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் திருவருளாய் நல்லூர்க் கந்தன் ஆலயம் எழுச்சி பெற்றது. அவ்வாலயக் கட்டியம் கூறுகின்றபோது வரலாறு கூறப்படுகிறது.

**''ஸ்ரீமான் மகராஜாதிராஜ**
**அகண்ட பூமண்டல**
**ரத்தியதிகிந்த விஸ்ராந்த கீர்த்தி**



**ஸ்ரீ கஜவல்லி மகாவல்லி**
**ஸமேத ஸ்ரீ சுப்பிரமணிய**
**பாதார விந்த ஜனாதிருட**
**சிவகோர்த்திரோற்பவ ஹா**
**இரகுநாத மாப்பாண முதலியார் சமுகா!**

இதன் வழி இன்றைய ஆலயம் மூர்த்தி தலம், தீர்த்தம், விருச்சம் என்ற பழைமையினைப் பிரதிபலிக்கிறது. கருவளறயில் அழகிய தங்கவேல் காட்சி கொடுக்க மாமரம் தலவிருச்சமாகவும், யமுனா ஏரியின் தென் திசைக் கேணி தீர்த்தமாகவும் கஜவல்லி மகாவல்லி சமேதராக கந்தப் பெருமான் காட்சி தரும் தலமாகும்.

ஈழநாட்டில் எங்குமில்லாத சிறப்புக்குரிய பஞ்சமணிக்கோபுரம் அவற்றோடு கிழக்கு வாயில் ராஜகோபுரம், உள் சுற்றுப் பிரகார தென் திசைக்கோபுரம், தெற்கு வெளிப்புறச் சுற்றுப்புப் பிரகாரத்தோடு கம்பீரமான ராஜகோபுரம் அமைக்கப்பட்டதோடு இந்தாண்டு வடக்கு திசையி லும் 08.08.2015இல் கலசங்கள் வைக்கப்பட்ட


புதிய ராஜகோபுரம் விளங்குகிறது.

இங்கு ஆறுகாலப் பூசையும் சிறப்புற இடம் பெறுவதுடன் வருடத்தில் ஐம்பத்தி ஐந்து உற்சவம் நடைபெறும் என்று கூறுவார்கள். அதில் மகோற்சவம் பெருவிழாவாய் போற்றுதற்குரியது ஆகும். கருவளை மூர்த்தியாகிய வேல் வடிவே வீதியில் முச்சக்தியாய் வலம் வருவதைக் காணலாம். தேர்த்திருவிழாவில் சண்முகப்பெருமான் இச்சாசக்தி. கிரியாசக்தி ஞானசக்தியோடு வருங்காட்சியை காணவே பல்லாயிரம் அடியார்கள் புடை சூழ வருவார்கள். தீர்த்த திருவிழாவில் ஐந்து சுவாமிகள் வீதி வலம் வரும் காட்சியையும் சிறப்பாய் இங்கு மட்டுமே காணலாம் அன்பர்களே! முத்துக்குமார சுவாமிக்கு கார்த்திகை மாதம் அபிஷேகம் வழிபாடு மிகவும் சிறப்பிற்குரியதாகும். இவ்வாலய மகோற்சவம் ஆடி அமாவாசை அடித்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆவணி அமாவாசை தீர்த்தத்துடன் இருபத்தைந்து நாள் உற்சவம் நடைபெறும். மறுநாள் பூங்காவனம் என்னும் திருக்கல்யாண உற்சவம் சிறப்பிக்கப்படும். இவ் உற்சவ காலங்களில் இன்றைய நிகழ்வுகளை நோக்கும் போது ஆங்கிலேயர் ஏகாபத்தியத்தில் தடைப்பட்டுக் காணப்பட்ட சமய நெறிகளை முன்னெடுத்தனர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நல்லூரில் பெரும்பற்றும் ஈடுபாடும் கொண்ட நிலையில் புராணபடனம் மருமகனார் வித்துவான் சிரோண்மணி பொன்னம்பலப்பிள்ளை பாட நாவலர் பொருள் விளக்கம் கூறுதலை அடியார்கள் எல்லோரும் ஆவலுடனும் தம்மை மறந்து முருகப் பக்தியில் லயித்து நிற்பதைக் காணலாம். வீதிகளில் திருமுறை பாட முடியாத காலத்து உற்சவ காலத்து வீதியில் திருவாடுதுறை ஆதீன ஓதுவார்களை அழைத்து அவர்களை இறைவன் பின்னே பாட வைத்தால் இன்றும் திருமுறைகள், திருப்புகழ், கந்தரனுபூதி என்ற பஜனை பாடல் பாடும் குழுக்களும் யாத்திரையாய் வரும் வவுனியா கோயிற்குளம் அடியார்கள், குப்பிளார் ஆத்ம ஜோதி முத்தையா மன்றத்தினர் நயினை அடியார்கள் என பஜனைகள் இன்றும் நாவலர் வழியில் பாடுகின்றனர்.

நல்லைநகர் நாவலர் வழியில் இந்து சமய கலாசார திணைக்களம் நாவலர் மணி மண்டபத்தில் ஞானவேள்வி என்ற நிலையில் சைவ சொற்பொழிவு மட்டுமல்லாது அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் பக்தி பூர்வமாய் நடைபெற்று வருவது சிறப்பிற்குரிய ஒன்றாகும். அதுபோல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் துர்க்கா மணி மண்டபம் முத்து தம்பி மண்டபம், வடக்கே உள்ள மகேஸ்வரன் மணி மண்டபம் பரமேஸ்வரி மண்டபம், வீரகத்தி விநாயகர் ஆலயம், மீனாச்சி அம்மன் ஆலயம், அறுபத் மூவர் தனியடியார் மண்டபம் முதலியன அன்னதானப் பணியுடன் சைவச் சொற்பொழிவு, பண்ணிசை, விவாதம், நடனம் என சைவ நுண்கலையின் பிறப்பிடமாய் நல்லூர்ச் சூழல் தெய்வீக சூழலாய் மலர்ந்துள்ளதைக் காணலாம்.

மேலும் உள ரீதியான உடல் ரீதியான பிணி தீர்க்கும் புண்ணியப் பதியாய் விளங்குவது. நல்லூர் வீதியில் அடியார்கள் நிறைந்திருப்பார்கள். வேலவனின் இறை காந்த சக்தியை காண முடிகிறது என்பார்கள். அந்நிலையில் 1862 இல் பெரிய கடைநாதனாம் கடையிற் சுவாமியின் உத்தம சீடனாய் வட்டுக்கோட்டையில் அவதரித்த செல்லப்பன் நித்தமும் தரிசனம் செய்த நிலையில் ஒருநாள் ஒரு ரூபாய் நாணயத்தை வெற்றிலையில் சுற்றி அவர் கையில் கொடுத்து குடையினால் ஓடடா என் தட்டினார். அவ் அடியோடு நல்லூரான் வில்வ மரத்தடியில் மணிக்கணக்கு நாட்களாய் நாட்கள் மாதங்களாய், மாதங்கள் வருடங்களாய் நிட்டை கூடினார். இதனை,

**"கந்தைத் துணியணிவான் கந்தன் முன்னிலையில் நிற்பான்**
**போவார் வருவார்களை வாய்க்கு வந்தபடி பேசிடுவார்.**



**சின்னத்தங்கம் ஓவியம்போல் இருந்தானடி**
**செல்லப்பன் என்னும் சீமான்"**

என்று யோகர் சுவாமிகள் கூறினார். இவர் மாவிட்டபுரத்தில் பிறந்து சதாசிவம் என்றபெயருடன் கிளிநொச்சி நீர்ப்பாசனத்து பொருட் காப்பாளராய் ஆங்கிலேயர் ஆட்சியில் இருக்கும்போது அப்போது பிறவுண் என்னும் ஆங்கில அதிகாரி "கடவுளின் மனிதன்" என்று போற்றினார். யோகர் சுவாமி ஒருநாள் அங்கிருந்து நடக்க முற்பட்டவர் நல்லூரான் தேரடியில் செல்லப்பா சுவாமியின் திருவடியை வணங்கினார். நீயாரடா, உள்ளே பாரடா, பற்றெல்லாம் தீரடா. என்றதும் நாற்பது நாட்கள் தேர்முட்டியில் நிட்டை கூடினார். அன் திட்டையில் முருகனின் திருவருள் கூடியது. அதன் வழிகதிர்காமம் முதல் நவநாதச் சித்தர் சமாதி முருகன் தரிசனத்துடன் யாழ்ப்பாணத்தில் யோகரும், செல்லப்பரும் திருவருளோடு பல்வேறு அற்புதங்கள் செய்தனர். செல்லப்பா சுவாமிகள் வாய்க்கு வந்தபடி பேசியதால் விசர்ச் செல்லப்பா என்றனர். அவர் பிறப்பில் கை வழங்காத பெண்மணி நல்லூர் கந்தனுக்கு மறுகையில்

செவ்வருத்தம் பூ வைத்துக் கும்பிட்டார் அப்போது. செல்லப்பா சுவாமிகள்அப்பூவை தனது வாயில் போட்டு குதப்பி குதப்பி ஆலயத்தை சுற்றி ஓடினார் பெண் தனது மனத்தை முருகனிடம் ஒப்புவித்து வணங்கும் வேளை காறித்துப்பினார். அவருடைய வழங்காத கையில் வீழ்ந்து வடியும் போது கையை உதறினார். நலமான கையாகியது செல்லப்பர் செய்த மருந்து முருகனை கைகூப்பி வழிபட வைத்தது. அன்றிலிருந்து செல்லப்பா சுவாமியைத் தேடித் திரிந்து அடியார்கள் வழிபடுவார்கள்.

இத்தகைய சித்தம் நிறைந்த பூமியாய் நல்லூரான் வீதி விளங்குகிறது. அன்பர்களே! சிவமகாலிங்கம் ஐயா அடிக்கடி கூறுவார், "நல்லூரான் வீதியில் நடந்தாலே வினை தீரும் இருந்தால் பிணி தீரும்" என்பார். அதனால் ஒவ்வொரு நாளும் எத்தனையோ கல்விமான்கள் முதலாக எல்லோரும் அவ்வீதியில் மண்டபத்தில் இருந்து அருள் வேண்டி நிம்மதியுடன் செல்வதைக் காண்கிறோம்.



உற்சவ காலத்தில் அதிகாலையில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அங்கப் பிரதட்சணம் (அடியரித்தல்) செய்கின்றபோது "முருகா" "வள்ளி மணவாளா", "கந்தா" என்ற வாசகம் வானெழுந்த நாத ஓசையாய் விளங்கும் நிலையில் பஞ்சபூத சுத்தி, செய்து வையகத்தையே முருக நாமம் அதிர வைக்கிறது. இவ் இருபத்தைந்து நாட்களும் சிறப்பாக யாழ்ப்பாணம் மட்டுமல்ல, வெளிநாடு பூராக நல்லூரான் உற்சவம் என்றால் உலகமே புனிதப்பட்டு அவர் திருவருள் வேண்டிப் பணிந்து விரதமென்றும் தவம் பேணி முருகனையே எங்கிருந்தும் துதிப்போர் உள்ளத்தில் நிலையாய் இருப்பான். இத்தகைய பெருமானிடம் குழந்தைகள் முதலாய் முதியோர்வரை அனைருமே பக்தியில் திளைத்திருப்பதைக் காணலாம். இக்காலத்து நாலா பக்கமும் எல்லைக் கிராமம் முதலாக தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்து தர்ம சிந்தனைக்கு வித்திட்டமையும், நேர்த்திக் கடன்களாய் காவடிகள் ஆடிவரும் பக்தர்கள் ஏராளம் ஆகும். "இத்தகைய செயலுக்கெல்லாம் ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதார்" என்பதற்கு அமைவாக வாழும் நல்லூர் ஆகும். அதனை யோகர் சுவாமிகள் நல்லூர்க்கந்தன் மீது பாடிய பாடல் அதிகம் ஆனால் அடியார் நிலையினைக் கூறுகிறார்.

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் நல்லமயில்
ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறி விடு சிந்தைதெளி"
அவற்றோடு கிளித்தூது
பாடியிருப்பதையும் காணலாம்?
"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே
இரவு பகல் காணேனடி"

இவ்வாறு பாடியதுடன் எமது நாடு படும் துன்பம் துயரம் இடர்கள் அனைத்தும் போக்கிடும் நல்லூர் கந்தனை எத்தனை அடியார்கள் தஞ்சமாய் வாழ்ந்தார்கள். அப்போதும் காக்கப்பட்டார்கள். இப்போதும் அத்திருவளைக் காணலாம்.

"பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி"

என்றதன் அடிப்படையில் நல்லூரான் திருவடியை குருவடியாய் கொண்டு பாடினர். என்னை எனக்கறிவித்தான் எங்களை குருநாதன் என்னும் உணர்வலையோடு இன்றும் இளையோர் யுவதியர்கள் அனைவரும் நல்லூர்க் கந்தனின் திருவருள் காந்த சக்தியோடு ஞான சக்தியாய் வேலின் காட்சியை நெக்குருகி நினைப்பார் நெஞ்சகத்து குடியிருப்பார் வேலவன் என்று அடியார்கள்.

"வெற்றி வடிவேலன் அவனுடைய வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்"

என்று மகாகவி பாரதியார் பாடியது போல் ஈழத் திருநாட்டின் முருகா என்ற நாமத்தோடு நல்லூரான் திருவடியை நினைத்த மாத்திரத்தில் குழந்தைகள் முதல் அனைவரும் திருவருள் பெற்றிடும் வேலவன் கருணையே ஆகும்.

சுபம்



சைவப்புலவர் சைவ
சித்தாந்தபண்டிதர்
க. நித்தியசீதரன் M.A.
இந்துதர்மாசிரியர்

# சிவலிங்க திருமேனியில் இஷ்டதெய்வம் தோன்றும் அதிசயம்

மெலட்டூர் ஒரு சிவஸ்தலம். தஞ்சாவூரிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அருள்மிகு கர்ப்பரட்சாம்பிகை சமேத முல்லை வனநாதர் கோயில் கொண்டிருக்கும் திருக்கருக்காவூருக்கு ஐந்து கிலோ மீற்றர் அருகாமை யில் இருக்கிறது. அது போலவே காளிங்க நர்த்தனர் கோயில் கொண்டிருக்கும் ஊத்துக்காடு திருத்தலம் மெலட்டூருக்கு அருகிலேயே (சுமார் ஆறு கிலோ மீற்றர்) இருக்கிறது.

தஞ்சாவூரிலிருந்து மெலட்டூர் செல்லும் வழியில் தென்குடித்திட்டை என்று புகழ்பெற்ற குரு பரிகாரத் தலம் இருக்கிறது. இத்தலங்கள் எவையேனையும் தரிசிக்க வரும் அன்பர்கள் அவசியம் மெலட்டூருக்கும் சென்று வர வேண்டும் என்ற காரணத்தால் இவற்றைக் குறிப்பிடுகிறோம்.

இந்துமதப் பாரம்பரியமும், கலாசாரமும் சிதைந்து விடாமல் இன்றும் புனிதமாகக் காக்கப் பட்டு வரும் கிராமம் மெலட்டூர், மெலட்டூர் பெரு மாள் கோயில் தெரு வில் நுழைந்த உட னேயே, வேத பாடசாலையிலிருந்து மிதந்துவரும் வேதகோஷங்கள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

ஒரு பக்கம் சாமவேதம், அதைத் தொடர்ந்து சற்றுத் தள்ளி யஜுர் வேதம் எனப் பாடசாலைக் குழந்தைகள் வேத பாராயணம் செய்யும் அழகு நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. தெருவின் இரு பக்கமும் திண்ணை வைத்த அழகான வீடுகள் வாசலில் சாணம் தெளித்துப் பெரிதாக மாக் கோலம், இவற்றுக்கு இடையே கட்டுக் குடுமியும் இடையில் துண்டுமாய் பவனி வரும் பாடசாலைப் பையன்கள். இவை இயற்கை எழில் கொஞ்சம் மெலட்டூருக்கு அழகு சேர்க்கின்றன.

வெளிநாட்டு மோகம், அரசியல் அக்கப்போர், திரைப்படம், தொலைக்காட்சி என திசை திருப்பவும் கவர்ந்திழுக்கவும் பல கவர்ச்சிகள் சூழ்ந்திருக்கும் இன்றைய நாளில் பண்டைய பாரம்பரியம் மாறாமல், குருகுலப் பாணியில் குழந்தைகளுக்கு வேதம் பயில்விக்கும் இந்த பாடசாலையின் பணி பாராட்டுக்குரியது. ஸ்ரீ சங்கர குரு குலம் ஆசார்ய வித்யாபீடம் என்ற இந்த வேத பாடசாலையில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பாலக்காட்டிலிருந்துமாக சுமார் 35 மாணவர்கள் வேதம் பயில்வதாக சாம வேத விற்பன்னரான திரு எஸ்.ஸ்ரீவாச வெங்கடேச சர்மா எம்மிடம் தெரிவித்தார்.

மெலட்டூரில் ஸ்ரீ தெட்சிணாமூர்த்தி விநாயகர் என்ற பிள்ளையார் கோயில் இருக்கிறது. அற்புத மான கோயில். கார்கமுனிவர் பூஜித்த இந்த விநாயகரைத் தொழுது வழிபட, குரு பலன் உடனே கிட்டும் என்கிறார்கள்.

இவர் சுயம்பு மூர்த்தி, மேட்டில் கோயில் கொண்டிருப்பதால் மெலட்டூர் ஆயிற்று. ஸித்தி, புத்தி சமேத கல்யாண விநாயகரே இந்த ஆலயத்தின் உற்சவமூர்த்தி சங்கடஹர சதுர்த்தியன்று இந்த விநாயகருக்கு அர்ச்சனை செய்து வெண்டிக் கொண்டால் திருமணத் தடை நீங்கி விவாஹம் விரைவில் நிச்சய மாகும் என்று விவரித்தார் குருக்கள். இவ்வாறு பலர் பலன் பெற்றிருக்கிறார்கள் என்றும் கூறினார் அவர். இந்த



கோயில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சுத நாயக்கர் என்ற ஒரு மன்னர் தான் அறியாது செய்துவிட்ட பாவத்திற்குப் பரிகார மாக ஐந்நூறு அந்தணர்களுக்கு வீடு, நிலம், கிணறு என தானமாக வழங்கப்பட்ட கிராமம் தான் மெலட்டூர். இயல், இசை, நாட்டிய வளர்ச் சிக்காகக் கொடையாக அளிக்கப்பட்டது என் பாரும் உண்டு.

மெலட்டூர் என்றாலே பாரம்பரியம் மிக்க சாஸ் திரீய சங்கீத நாட்டிய நாடகம் தான் நினைவுக்கு வரும். மெலட்டூர், வீரபத்ரய்யாவின் வழிவந்த மெலட்டூர் வேங்கடராம சாஸ்திரிகளே பாகவத மேளா நாடகங்களின் தந்தை எனலாம். ஆண்டு தோறும் நரசிம்ம ஜெயந்தி உற்சவத்தின் போது மெலட்டூரில் ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயி லுக்கு எதிரில், பெருமாள் கோயில் தெரு வில் பாகவத மேளா நாடகம் நடைபெறும்.

சாஸ்திரீய சங்கீதத்திற்கும் நடனத்திற்கும் முழு முக்கியத்துவம் கொடுத்து, பரதநாட்டிய சாஸ்திரத்திலிருந்து சற்றும் வழுவாமல் முழுமை யாக இருப்பது மெலட்டூர் பாகவத மேளா சம் பிரதாயத்தின் தனிச்சிறப்பு நாடகங்கள் பெரும் பாலும் தெலுங்கில்தான் இருக்கும்.

பெண் கதாபாத்திரங்களிலும் ஆண்களே நடிப் பார்கள். இந்த நாடகங்களில் பங்குபெறும் ஒரு சிலர் வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் பணி யாற்றிக் கொண்டிருந்தாலும் கூட, மெலட் டூரில் இந்த நாடக விழா நடைபெறும்போது தவறாமல் வந்து கலந்து கொண்டு நாடகங்களை வெற்றி கரமாக நடத்திக் கொடுக்கும் பாங்கு, அவர்கள் தங்கள் சொந்த மண்ணின் மீதும், பாரம்பரிய மான இந்தக்கலையின் மீதும் கொண்டிருக்கும் பற்றுக்கும் பாசத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.

ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் சிறிய கோயில்தான். மூலவர் பூதேவி, ஸ்ரீதேவி சகிதம் வரதராஜப் பெருமாள் நின்ற திருக்கோலம். ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மருக்குத் தனிச் சந்நிதி இருக் கிறது. பாகவத மேளா நாடகத்தில் நரசிம்மர் வேஷம் பூணுபவரின் முகமூடி இங்கு உயரே கண்ணாடி அலுமாரியில் பாதுகாக்கப்பட்டு வரு கிறது. நரசிம்மர் வேடம் பூணுபவர் பய பக்தி யுடன் விரதமிருந்து இந்த முகமூடிக்குப் பூஜை போட்ட பிறகே அணிவது வழக்கம்.

மெலட்டூருக்கு உன்னதபுரம் என்று பெயர். இறைவன் உன்னத புரீஸ்வரர் ஆலயத்தின் இராஜ கோபுர வாசலில் இரு புறத்திலும் விநா யகர் திருவுருவச் சிலை உள்ளது.

இறைவன், சுயம்பு மூர்த்தி உயரமான ஆவுடை மீது உயரமாகக் காட்சி தருகிறார். பிரளய காலத்தில் வந்து சேர்ந்து மேடான பகுதியில் தங்கி விட்டதால் மெலட்டூர் எனப் பெயர் வந்ததாக விவரித்தார் ஸ்ரீஉன்ன தபு ரீச சிவாச்சாரியார்.

இதர சிவாலயங்களில் காணக்கிடைக்காத ஒரு அற்புத அனுபவம் இங்கு ஸ்ரீ உன்னதபுரீஸ்வரரைத் தரிசிக்கும் போது ஏற்படு கிறது. நான் பார்த்தபோது சிவலிங்கத் திருமேனி மீது துதிக்கையுடன் விநா யகர் திருஉருவம் என் கண்களுக்குத் தெரிந்தது.

"ஆ! அம்பாள் உருவம் தெரிகிறது!" என்றார் என் மனைவி

மீண்டும் சற்று உற்றுப் பார்த்தபோது சிவ லிங்கத் திருமேனி மீது அம்பாளின் உருவம் எனக்கும் தெரிந்தது.


"என்ன பார்க்கிறீர்கள்?" என்று விசாரித்தார் நாகராஜ குருக்கள்.

"சிவலிங்கத் திருமேனி மீது உருவம் தெரி கிறதே" என்றேன் நான் வியப்போடு"

"அதுதான் இந்த ஆலயத்தின் சிறப்பு! அவரவர்களுக்கு இறைவன் அவர்கள் இஷ்ட தெய்வமாகக் காட்சி கொடுப்பார்! நீங்கள் மட்டு மல்ல, பல பெர் இந்த அதிசயத்தை தரிசித்துக் கூறியிருக்கிறார்கள்!" என்றார் அவர்.

K. குருமூர்த்தி


## மனப்போராட்டம் ஓய்வதில்லை!



நம்மை எப்போதும் ஆட்டிப் படைப்பது நம்முடைய மனமே. உருவமற்ற இந்த மனம் பெரிய உருவம் படைத்த நம்மை எப்படியெல்லாம் ஆட்டி படைக்கின்றது என்பதை யோசித்து பார்க்க வேண்டும். மனதுடன் நடத்தும் போராட்டம் என்றுமே ஓய்வதில்லை. விழிப்பு நிலையில் மட்டுமல்ல உறக்க நிலையிலும் கூட மனதின் போராட்டமானது நம்மை விட்டு ஒரு போதும் நீங்குவதில்லை. ஜகத்குரு ஆதிசங்கரர்

# ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள்

# 108 போற்றிகள்



ஓம் அப்பா போற்றி
ஓம் அறமே போற்றி
ஓம் அருளே போற்றி
ஓம் அச்சுதா போற்றி
ஓம் அரவ சயனா போற்றி
ஓம் அரங்கமா நகராய் போற்றி
ஓம் அற்புத லீலா போற்றி
ஓம் ஆறுமுகனின் அம்மாள் போற்றி
ஓம் அனுமந்தன் தேவே போற்றி
ஓம் ஆதியே அனாதி போற்றி
ஓம் ஆழ்வார்கள் தொழுவாய் போற்றி
ஓம் மூலமே போற்றி
ஓம் ஆபத்துச் சகாய போற்றி
ஓம் ஆனைக்கும் அருள்வாய் போற்றி
ஓம் ஆனந்த மூர்த்தியே போற்றி
ஓம் உமையம்மை அண்ணா போற்றி
ஓம் உலகெலாம் காப்பாய் போற்றி
ஓம் உத்தமர் தொழுவாய் பொற்றி
ஓம் உம்பருக் கருள்வாய் பொற்றி
ஓம் எங்குமே நிறைந்தாய் போற்றி
ஓம் எண்குண சீலா போற்றி
ஓம் ஏழைப்பங்களா போற்றி
ஓம் கலியுக வரதா போற்றி
ஓம் கண்கண்ட தேவே போற்றி
ஓம் கடுவர் கனனே போற்றி
ஓம் கல்யாண மூர்த்தி போற்றி
ஓம் காமரு தேவே போற்றி
ஓம் காலனைத் தவிர்ப்பாய் போற்றி

ஓம் கோக்களைக்காத்தாய் போற்றி
ஓம் கோவிந்தா முகுந்தா போற்றி
ஓம் சர்லோகேசா போற்றி
ஓம் சாந்தகுண சீலா போற்றி
ஓம் சீனிவாசா போற்றி
ஓம் சிங்கார மூர்த்தி போற்றி
ஓம் சிக்கலையறுப்பாய் போற்றி
ஓம் சிவபிரான் மகிழ்வாய் போற்றி
ஓம் தவசிகள் தொழுவாய் போற்றி
ஓம் தரணியைக் காப்பாய் போற்றி
ஓம் திருமகள் மணாளா போற்றி
ஓம் திருமேனி உடையாய் போற்றி
ஓம் திருவேங்கடவா போற்றி
ஓம் திருமலைக் கொழுந்தே போற்றி
ஓம் திருத்துழாய் அணிவாய் போற்றி
ஓம் தீந்தமிழ் அருள்வாய் போற்றி
ஓம் கடவமு தளித்தாய் போற்றி
ஓம் நந்தகோபாலா போற்றி
ஓம் நான்முகன் பிதாவே போற்றி
ஓம் நாரதர் துதிப்பாய் போற்றி
ஓம் நவமணி தரிப்பாய் போற்றி
ஓம் நரசிம்ம தேவே போற்றி
ஓம் நான்மறை தொழுவாய் போற்றி
ஓம் பாற்கடல் கிடந்தாய் போற்றி
ஓம் பாவலர் பணிவாய் போற்றி
ஓம் தசாவதாரா போற்றி
ஓம் தயாநிதி ராமா போற்றி
ஓம் தந்தைசொல் காத்தாய் போற்றி
ஓம் தவக்கோலம் பூண்டாய் போற்றி
ஓம் பட்டத்தைத் துறந்தா போற்றி
ஓம் பரதனுக்கீந்தாய் போற்றி
ஓம் பாண்டவர் துணைவா போற்றி
ஓம் பரந்தாமா கண்ணா போற்றி
ஓம் பாஞ்சாலி மானம் காத்த 'பார்புகழ் தேவே போற்றி
ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
ஓம் புலவர்கள் புகழ்வாய் போற்றி
ஓம் வாமன வரதா போற்றி
ஓம் உலகினை அளந்தாய் போற்றி
ஓம் பிரகலாதன் பணிவாய் போற்றி

ஓம் பரகதி அருள்வாய் போற்றி
ஓம் துருவனும் தொழுவாய் போற்றி
ஓம் சபரியின் கனிவே போற்றி
ஓம் துருவதிலை தந்தாய் போற்றி
ஓம் நற்கதி தந்தாய் போற்றி
ஓம் வையகம் புகழ்வாய் போற்றி
ஓம் முழுமதிவதனா போற்றி
ஓம் மும்மலம் அறுப்பாய் போற்றி
ஓம் கமலக்கண்ணா போற்றி
ஓம் கலைஞனே மருள்வாய் போற்றி
ஓம் கஸ்தூரி திலகா போற்றி
ஓம் கருத்தினி லமர்வாய் போற்றி
ஓம் பவளம் போல் வாயா போற்றி
ஓம் பவப்பிணி ஒழிப்பாய் போற்றி
ஓம் நான்கு பயத்தாய் போற்றி
ஓம் நற்கதி அருள்வாய் போற்றி
ஓம் சங்குசக் கரனே போற்றி
ஓம் சன்மார்க்க மருள்வாய் போற்றி
ஓம் கோபிகள் லோலா போற்றி
ஓம் கோபமும் தணிப்பாய் போற்றி
ஓம் வேணுகோபாலா போற்றி
ஓம் வேட்கையைத் தணிப்பாய் போற்றி
ஓம் புருடோத்தமனே போற்றி
ஓம் பொன்புகழ் அருள்வாய் போற்றி
ஓம் மாயா வினோதா போற்றி
ஓம் மனநிலை தருவாய் போற்றி
ஓம் விஜயராகவனே போற்றி
ஓம் வினையெலாம் ஒழிப்பாய் போற்றி
ஓம் பதும நாயனே போற்றி
ஓம் பதமலர் தருவாய் போற்றி
ஓம் பார்த்தசாரதியே போற்றி
ஓம் பார்வேந்தர் தொழுவாய் போற்றி
ஓம் கரிவாத ராஜா போற்றி
ஓம் கனிவுடன் காப்பாய் போற்றி
ஓம் சுந்தர ராஜா போற்றி
ஓம் கனிவுடன் காப்பாய் போற்றி
ஓம் சுந்தர ராஜா போற்றி
ஓம் சுகமெலாம் தருவாய் போற்றி
ஓம் அனைத்துமே ஆளாய் போற்றி
ஓம் அரிஅரி நமோ நாராயணா போற்றி

## மன்மத ஆண்டு புரட்டாசி மாதம்
## 18.09.2015 முதல் 17.10.2015 வரை



# கடகம்

எல்லோரையும் வளமாக வாழ வைக்க நினைக்கும் கடக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தனகாரகன் வீட்டில் குரு அமர்ந்து பொருளாதாரத்தில் நன்மையை தருவார். தொழிலில் சிறந்து விளங்குவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் ஒற்றுமைக்காக பாடுபடுவீர்கள். தொழிற்சங்க நன்மைகளை தொழிலாளர்களிடம் பகிர்ந்து கொள்வீர்கள். ஏற்றமான காலமாக இருக்கும். பொருளாதாரத்தில் மேன்மையை பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நலனுக்காக உங்களின் கடமைகளை மறந்து செயல்படுவீர்கள். உங்களை சுற்றி மக்களின் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். எதையும் பலமுறை யோசித்து செயல்படுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்தில் அமருவதால் நன்றாக அமையும். விடுதிகள், சமையல் காண்டிராக்ட் போன்ற தொழிலில் கூடுதல் லாபம் கிட்டும். வங்கி கடன் முயற்சிகள் நல்ல பலனை தரும். பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் வெளியூர் நிகழ்ச்சிகளில் தங்கி கோவில் திருவிழாக்களில் கலந்து கொள்ளும் நிலை உண்டாகும். திறமையான கலைஞர்களுக்கு தொடர்ந்து வாய்ப்புகள் கிட்டும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் முன்னேற்றத்திற்கு வாய்ப்புகள் அமையும். சுயதொழிலில் சிறந்து விளங்குவீர்கள். அரசு பணி சிலருக்கு கிடைக்க வாய்ப்புகள் அமையும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**மாணவர்களுக்கு**

கல்வியால் முன்னேற்றம் உண்டாகும். அனிமேசன் கணணி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சட்டம் சார்ந்த கல்வியில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள் 25.09.2015 வெள்ளி பகல் 01.27 முதல் 27.09.2015 ஞாயிறு மாலை 04.06 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**


**புனர்பூசம் 4ஆம் பாதம்**

வங்கி கடன் வசதி, பொருளாதார பெருக்கங்களை பெறுவீர்கள். கலைஞர்களுக்கு நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பணியாளர்களின் விருப்பங்கள் நிறைவேறும். தொழிலில் பல மாற்றங்களை செய்த உங்களுக்கு உறுதியான நிலை உண்டாகும்.

### பல்வகை வழிபாடுகள்!



மருந்து என்று இருந்தாலும் ஒவ்வொன்றுக்கும் எப்படியெல்லாம் வீரியம் மாறுபடுகிறதோ, அது போன்று நமதுவழிபாடுகளில் பலவிதமான மலர்கள், அன்னம், படையல்கள், துதிகள் என ரிஷிகள்நமது தேவைகளுக்கு ஏற்பப் பகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இதையே ஆத்திகர்கள் பகுத்து அறிதல் எனக் கடைப் பிடிக்கிறார்கள்.

**ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கணணி துறையில் சிறந்து விளங்குவீர்கள். கல்வியில் மாணவர்கள் முன்னேற்றம் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் உயர்வு பெறுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** வெண்மை, இளம் மஞ்சள், பிரவுன்

**அதிர்ஷ்ட திசைகள்** வடமேற்கு, மேற்கு, தென்கிழக்கு


**அதிர்ஷ்ட கிழமைகள்** திங்கள், புதன், வியாழன்

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை காலை 6 , 7 க்குள் விநாயகர் வழிபாடு செய்து தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு வரவும்.



# வியாசரின் காசி யாத்திரை



வியாசருடன் சீடர்கள் அனைவரும் மிகுந்த ஆவலுடன் காசிக்குப் புறப் பட்டார்கள் ஒரு நாள் காலையில் வியாசர் தமது சீடர்களுடன் காசி வந்து சேர்ந்தார். அங்கு முதல் வேலையாக ஒரு தர்ம சத்திரத்தில் தங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டார்கள். பின்னர் அனைவரும் கங்கையில் நீராடி விட்டுப் பிட்சை சேகரிப்பதற்காக ஊரின் பல பாகங்களுக்குப் பிரிந்து சென்றனர்.

அன்று மாலை வியாசர் உட்பட அனைவரும் பசியால் வாடிய முகத்துடன் தங்கள் இருப்பிடமான சத்திரத்திற்குத் திரும்பி வந்தனர். பின்பு ஒருவருக்கொருவர் அன்றைய தினம் தாம் பிட்சைக்குச் சென்ற பகுதி, பெற்ற அனுபவம் போன்றவற்றைத் தங்களுக் குள்ளாகக் கலந்துபேசிக் கொண்டார்கள். அப்போது, அவர்களுள் ஒருவருக்குக் கூட ஒரு கவளம் உணவு கூடப் பிட்சையின் போது கிடைக்கவில்லை என்ற விவரம் அவர்களுக்குத் தெரிய வந்தது. அத்தனை பேரில் ஒருவருக்குக் கூட ஒரு கவளம் உணவும் பிட்சையாகக் கிடைக்கவில்லை என்ற விவரம் அவர்களுக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது. அவர்களால் அதை நம்பவே முடியவில்லை. "ஒரு வேளை இன்றைய தினம் இல்லறத்தவர் பிட்சை இடக்கூடாது என்று சாஸ்திரங்களில் தடை விதிக்கப்பட்ட நாளாக இருக்கக்கூடும். அதனால் தான் இன்ற ஒருவருமே பிட்சையிடவில்லை" என்று ஒருவர் கூறினார். அதை மறுத்து மற்றொருவர், பிட்சை யிடக்கூடாத நாள் என்று சாஸ்திரங் களில் எந்த ஒரு நாளும் குறிப்பிடப்படவில்லை" என்றார். இவற்றைக் கேட்ட வியாச பகவான், "இன்று ஆனது ஆயிற்று. நாளைய தினம் என்ன ஆகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்றார். இவ்விதம் அன்றைய தினம் அனைவருமே பட்டினியாக இருக்கும்படி ஆயிற்று. மறுநாள் வியாசர் உட்பட எல்லோரும் பிட்சைக்காக ஒவ்வொரு தெருவாக அலைந்தார்கள். சில வீடுகளில், "பிட்சையிடுவதற்கு எங்களிடம் எதுவுமில்லை" என்று கூறிவிட்டார்கள். மற்றும் சில வீட்டார், வியாசரின் சீடர் எவரேனும் தங்கள் வீட்டு முன்னால் பிட்சைக்கு வந்து நின்றவுடனே முகத்தில் அறைவது போன்று கதவை இழுத்துத் தாழிட்டுக் கொண்டனர்.

வியாசர் உட்பட, சீடர்கள் எல்லோருக்குமே இவை போன்ற அனுபவங்களே அன்றைய தினம் ஏற்பட்டன. இத்தகைய அனுபவம் அவர்களை வருத்தம், ஏமாற்றம், அவமானம் ஆகியவற்றக்கு உட்படுத்தியது. அந்த நிலையில் இரண்டாம் நாளையும் பட்டினியுடன் இருந்து கழித்தார்கள். மூன்றாவது நாளும் வந்தது. அன்றைய தினமும் முதல் இரண்டு நாட்களுக்கு ஏற்பட்ட

அதேவிதமான அனுபவமே அனைவருக்கும் ஏற்பட்டது. இது போலவே ஏழு நாட்கள் கழிந்தன.

எட்டாம் நாளன்று வியாசர் ஒரு வீட்டில் முன்பு பிட்சை கேட்டு நின்றார். ஆனால் அந்த வீட்டில் இருந்தவர்கள் வியாசரின் குரலைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. வீட்டின் உள்ளேயிருந்த ஒருவரும் வெளியே வரவுமில்லை. பிட்சையிடவுமில்லை. இதைக் கண்டதும், ஏழு நாட்களாகப் பொறுமையுடன் இருந்த வியாசரின் கோபம் எல்லையற்றுப் போயிற்று. அவர் காசியில் வாழும் மக்கள் அனைவருக்குமே ஒரு பெரிய சாபம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மிகுந்த கோபத்துடன் சாபம் கொடுப்பதற்காகத் தமது வலக்கையை உயர்த்தினார்.

அதே சமயம் எதிரிலிருந்த மாளிகை போன்ற ஒரு பெரிய வீட்டின் கதவு திறந்தது. கதவைத் திறந்த அந்த வீட்டின் தலைவி வியாசரை நோக்கி, "நிறுத்துங்கள்" என்றாள். என்ன ஆச்சரியம்! வியாசரால் தூக்கிய தமது கையைக் கீழே இறக்கவே முடியவில்லை சில விநாடிகளுக்கு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே மௌனமாக நின்றனர். பின்னர் அந்த மாது, வியாசரை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள். உடனே வியாசரால் தமது கைகளைப் பழையபடியே அசைக்க முடிந்தது.


அந்த மாது அவரிடம், இவ்விதம் இந்தப் புனிதத் தலத்தின் மீது ஒரு காரணமும் இல்லாமல் கோபப்படுவதில் அர்த்தமே இல்லை" என்றாள். வியாசர், "என்ன? நான் கோபப்படுவதில் அர்த்தமா இல்லை? நாங்கள் இந்த ஏழு நாட்களாக இங்கே பிட்சை கிடைக்காமல் பட்டினியாக இருந்து கொண்டிருக்கிறோம். இந்த ஊரில் உள்ள இத்தனை பேர்களில் ஒருவர் கூட எங்களில் எவருக்கும் பிட்சையளிக்க முன்வரவில்லை. அப்படி இருக்கும் போது நான் ஏன் கோபப்படக் கூடாது? ஏன் சாபம் தரக்கூடாது?" என்று வினவினார்.

அந்த மாது புன்சிரிப் புடன், "உங்கள் சீடர்களை எல்லாம் இங்கு என் வீட்டுக்கு அழைத்து வாருங்கள்; உங்கள் அனைவருக்கும் விருந்து படைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமானால் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைவேன்" என்று தெரிவித்துக் கொண்டாள். வியாசர் அந்தப் பெண்மணியுடன் வீணாக விவாதித்துக் கொண்டிருப்பதைவிட, அவளது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதே நலம் என்று தீர்மானித்தார். அதன்படி அவளது கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவித்துவிட்டு தாம் சீடர்களுடன் தங்கியிருந்த சத்திரத்திற்கு விரைந்து சென்றார்.

அங்கே சத்திரத்தில் கடந்த ஒரு வார காலமாகப் பட்டினி கிடந்த சீடர்கள் பிட்சைக்குச் செல்வதற்கு நடக்கவும் சக்தியற்று, "குற்றுயிரும் குலையுயிரும்" என்பது போல் பாதி உயிர் போன நிலையில் பசி காரணமாக முடங்கிப் படுத்துக் கிடந்தார்கள். அவர்களிடம் வியாசர் நம்முடன் உணவருந்தப் புறப்படுமாறு கூறினார்.


விரைவில் எல்லோரும் அந்த மாதின் வீட்டை அடைந்தனர். அவள் குழந்தைகளை வரவேற்கும் அன்பார்ந்த தாய் போல அனைவரையும் வரவேற்றாள். அங்கே இருந்த பெரிய கூடத்தில் வியாசரையும் அவரது சீடர்களையும் உணவருந்த அமரும்படி கேட்டுக் கொண்டாள்.

அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் சாப்பிட ஆரம்பித்தனர். திருப்தியாகச் சாப்பிட்டு முடிந்ததும் தங்களுக்கு விருந்தளித்த வீட்டுத் தலைவியை நன்றியறிதலுடன் எல்லோரும் நோக்கினர். வீட்டுத் தலைவியான அந்த மாது நின்றிருந்த இடத்தில் ஜகன்மாதாவான சாட்சாத் அன்ன பூரணி கருணை பொங்க நின்றிருந்தாள். அவளுடன் ஜகத்பிதாவான காசி விசுவநாதரும் காட்சி தந்தார்.



சிவபெருமான் வியாசரிடம், "தாங்களும் தங்களது சீடர்களும் ஏன் இவ்வளவு துன்பத்திற்குள்ளாக நேரிட்டது என்பதை அறிந்து கொண்டீர்களா? உங்களில் ஒருவர் கூட பக்தி சிரத்தையுடன் இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. வியாசராகிய நீங்கள் ஏதோ அதிசயம் காண வேண்டும். காசி மகா தலத்தின் மகத்துவத்தைப் பரிசோதித்துப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டே இங்கு வந்தீர்கள். உங்கள் சீடர்களோ நீங்கள் சொன்னதைப் புறத்தளவில் ஒரு காரணமாகக் கொண்டு அந்தரங்க உள்ளத்தில் பேராசையினால் உந்தப்பட்டு இங்கே வந்தார்கள். இத்தகைய எண்ணங்களோட ஒருவர் காசி யாத்திரையை மேற்கொள்வது சரியாகுமா? பக்தியோட வந்திருந்தால் உங்கள் அனைவருக்கும் ஆன்மீகமயமான வேறுவித அனுபவங்களே ஏற்பட்டிருக்கும்" என்றார். வியாசர் தமது குற்றத்தை உணர்ந்தார். அவரும் அவரது சீடர்களும் தம் முன் எழுந்தருளியிருந்த விசுவநாதரையும் அன்ன பூரணியையும் பக்தியோடு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டுத் தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

– சுவாமி கமலாத்மானந்தர்



# சண்மதத்தை உருவாக்கினார் சங்கரர்!

அத்வைத உண்மையினை தேசமெங்கும் சென்று பரப்ப வேண்டுமென்று வியாசர் விரும்பியபடியால் சங்கரர் காசியை விட்டே கினார். பிரயாகையில் குமாரில பட்டருக்கு, அவர் மரணத் தறுவாயில் இருக்கும் பொழுது, "கர் மாக்கள் பலனளிக்காது, இறைவனே பேரா னந்தம் என்ற தத்துவத்தை விளக்கினார்.

மாஹிஸ்மதி என்ற நகரில் வாழ்ந்த மண்டன மிச்ரர் சரஸவாணித் தம்பதியினரையும் வாதத்தில் வென்று அடிமையாக்கின்றார், சங்கரர். மண்டல மிச்ரர் துறவியாகி சங்கரருடன் செல்கிறார் என் பதைக் கண்ணுற்ற கர்ம மீமாம்சகர்கள் சங்க ரரின் ஞான மார்க்கத்தைத் தழுவலாயினர்.

வழி நடையில் சிறிது களைப்பு ஏற்பட்ட கார ணத்தினால் சரஸவாணி பின் தங்கினார். அது துங் கபத்ரா நதிக்கரையோரத்து, சிருங்கிரி என்னும் ஊராகும். சங்கரர் திரும்பிப் பார்த்து, அங்கு ஒரு பீடம் அமைத்து, சரஸவாணியை அங்கு பிர திஷ்டை செய்தார். இது சிருங்கிரி சாரதா பீடம் என வழங்கலாயிற்று.

சிருங்கிரியில் பகவத் பாதர் தங்கிய பொழுது, தமது அன்னையின் உயிர் ஊசலாடுவதை உணர்ந் தார். அன்னைக்கு இறுதிக்கடன் முடிப்பதற்காக விரைந்தார். கடைசிக் காலத்தில் மகனைக் கண்ட தாய் அகம் மகிழ்ந்தார். திருமலை நோக்கிப் பாமாலை பாடினார், ஸ்ரீசங்கரர். வைகுண்ட லோகத் தூதர்கள் ஆர்யாம்பாளை விமானத்தில் ஏற்றிச் சென்றனர்.

ஊராரின் எதிர்ப்புக்கிடையில் தாமொருவரே அன்னையின் உடலைச் சிதையிலிட்டு எரியூட்டினார். அன் னையின் இறுதிக் கடனை முடித் ததும், சங்கரர் நாடு முழுவதும் திக் விஜயம் செய்தார்.

கர்நாடக மாநிலத்தின் மூகாம்பி என்ற ஊரில் தங்கிய பொது, அந்தணர் ஒருவர் தமது ஊமைப்பிள்ளையுடன் பெரியவரைத் தரி சிக்க வந்தார்.

சங்கரர் அப்பிள்ளையிடம், "நீ யார்?" என்று வினாவினார்.

"நான் இவ்வுடல் அல்ல, எங்கும் வியாபித் துள்ள ஆத்மாவான ஒரே சத்தியம்தான்," என்று உடனடியாகப் பதில் அளித்தான் அப்பிள்ளை. அவருக்கு அஸ்தாமலர் என்ற பெயர் சூட்டி முக் கியமான சீடர்களில் ஒருவராக்கிக் கொண்டார்.

பத்மபாதர், மண்டனமிச்ரர், ஹஸ்தாமலர், கிரி போன்ற தலைமைச் சீடர்களோடு வேறு பல ஞானிகளும் கூட சங்கரரிடம் வேத பாடம் கற்று வந்தனர். கிழக்குக் கடற்கரையில் உள்ள ஜகந்நாத புரி ஊரில் கோவர்த்தன பீடம் அமைத்து, அதில் பத்மபாதரை ஆசாரியராக அமரச் செய்தார்.

மேற்குக் கடற்கரையில் உள்ள துவாரகையில் ஒரு மடம் நிறுவி, ஹஸ்தாமலரை ஆசாரியராக அங்கு அமரச் செய்தார். சங்கரர் தமிழகத்தில் திருவானைக்கா, திருவிடைமருதூர், திருச்செந்தூர் போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து பல பெருமைகளைச் சேர்த்தார்.


திருப்பதி வேங்கடரமணப் பெருமாளைத் தரிசித்து மக்களை வசீகரிக்கும் ஒரு யந்திரத்தை அங்கு ஸ்தாபித்தார். அன்றிலிருந்து திருப்பதியில் தினமும் திருநாள் தான்.ஆந்திர தேசத்திலுள்ள ஸ்ரீசைலம் ஆசாரியரின் உள்ளத்தை மிகவும் கவர்ந்த இடம். இங்கு கோவில் கொண்டுள்ள மல் லிகார்ஜுனருக்காக "சிவானந்த லஹரி" பாடினார்.


ஸ்ரீசைலத்தை அடுத்து மனித சஞ்சாரமற்ற ஹராட கேசுவரம் என்ற இடத்தில் சங்கரர் தன்னந் தனியாகத் தவம் இருந்தார். நரபலி கொடுத்துச் சிவனை வணங்கும் கபாலிகர்களின் தலைவன் கிரகசன், தமது கொள்கையை எதிர்க்கும் ஒரே ஒரு வனையும் தான் பலி கொடுத்துவிட வேண்டும் என்று கருதித் தவம் இருக்கும் சங்கரரிடம் வந்தான். "கபாலிக்கு உங்களைப் பலி கொடுக்கச் சம்மதம் தாருங்கள்" என்று பெரியவரிடம் கேட்டான் கிரகசன்.

தியாக மூர்த்தி, "இந்த உடலால் எந்தப் பயனும் இல்லை என்று நினைத்தேன், இதைக் கொண்டு ஏதோ பயன் அடைவதாக நீ கருதுவ தற்கு நன்றி, நீயே என் தலையை வெட்டி எடுத் துக்கொள்," என்றார், ஆசாரியர். கிரகசன் வாளை ஓங்கி ஆசாரியரின் தலையைக் குறிபார்த்தான். ஒரு நொடியில் பத்மபாதர் நரசிம்ம வடிவில் வந்து வெட்ட இருந்த கிரக சனை கிழித்தெறிந்து விட்டார்.

ஸ்ரீ சங்கரர் நரசிம்ம மூர்த் தியை வணங்கினார்.

அவர் ஹிமாசலப் பிர தேசத்திலுள்ள பத்ரிநாத்தை அடைந்த போது மஹா விஷ்ணு அவருக்குத் தரிசனம் தந்தார். "இங்கே அலக நந்தா நதிப் படுகையில் எனது விக் ரகம் ஒன்று புதையுண்டு கிடக்கிறது. அதை எடுத்து பிர திஷ்டை செய்வாயாக" என்று இறைவன் பணித்தார்.





அவ்வாறே, ஆதிசங்கரர் செய்தார். பத்ரி நாராயணன் என்று இன்றளவும் கொண்டாடப்படும் மூர்த்தி இதுவேயாகும். கேதார் நகரத்திற்கு வந்த சங்கரர் தமது பூத உடலைப் போட்டுவிட்டு, யோக சக்தியின் மூலம் சூட்சும உடலோடு கைலாயம் சென்றார். அங்கு சிவபெருமானிடமிருந்த ஐந்து ஸ்படிக லிங்கங் களைப் பெற்று வந்தார்.

நேபாளத்தில் நீலகண்ட க்ஷேத்திரத்தில் ஐந்து லிங்கங்களுள் ஒன்றான வர லிங்கத் தைப் பிர திஷ்டை செய்தார். முக்தி லிங் கத்தை கேதாரி நாத்திலும், சிதம்பரத்தில் மோட்சலிங்கத்தையும் சிருங்ககிரியில் பொக லிங் கத்தையும் பிரதிஷ்டை செய்தார்.

தமது உலக வாழ்வை முடித்துக்கொள்ள விரும்பிய சங்கரர் ஏழு மோட்ச ஸ்தலங்களில் ஒன்றான காஞ்சிக்கு விரைந்தார். மன்னன் ராஜ சேனன் ஆசாரியரைப் பணிந்து வரவேற்றான். சுவாமிகள் விசுவேசுவரர் ஆலயத்தில் தங்கினார்.

"காமகோடி பீடம்" என்று தாம் தங்கிய மடத் திற்குப் பெயரிட்டு ஐந்து லிங்கங்களில் எஞ்சிய யோக லிங்கத்தை அங்கு பிரதிஷ்டை செய்தார். சிவ பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம், ஸௌந் தர்ய லஹரி, துவாதச ஜோதி லிங்க ஸ்தோத்திரம் போன்ற பாடல்கள் பாடி அருளியுள்ளார், சங்கரர்.

விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரம் முதலி யனவும் பாடியுள்ளார்.

சிவன், அம்பிகை, திருமால், விநாயகர், சூரியன், முருகன் என்று ஆறு தெய்வங்களையும் ஒன்றாக நினைத்து வழிபடும் "சண்மதம்" ஏற் படுத்தினார். சங்கரருடன் காஞ்சியில் வாதிட்ட பண்டிதர்களுக்கிடையே ஏழு வயதுச் சிறுவனும் ஒருவன், அவனை வென்று அவனுக்கு "சர்வக்ஞ ஆத்ம முனி" என்ற நாமம் சூட்டி காமகோடி பீடத்தின் முதல் சிஷ்யனாக்கினார்.

பிற மதங்கள் எழுபத்திரண்டு இருந்த இடம் தெரியாமல் அழிந்தன.

அவர் பணி முடிந்தது.

வயது முப்பத்திரண்டு...

காமாட்சி தேவியிடம் சென்று, "திரிபுர சுந்தரி வேத பாதஸ்தவம்" என்ற பாடலால் அம்பிகை யைத் துதித்தார். பாடல் முடியும் போது பாடத்தக்க அவரது வாழ்வு அமரநிலை எய்தியது.

பாரசக்தியோடு இரண்டறக் கலந்து விட்டார் ஆதிசங்கரர்.

– கவிஞர் கண்ணதாசன்

## மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்
## 18.09.2015 முதல் 17.10.2015 வரை

# சிம்மம்

நினைத்த காரியத்தை செயல்படுத்த எல்லா முயற்சிகளை எடுக்கும் சிம்ம ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குரு மன அழுத்தம் தந்தாலும் நல்ல பலன்களையே தருவார். மேலும் கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை இருந்து வரும்.

### பணியாளர்களுக்கு

பணியில் இருந்து கொண்டே வேறு ஒரு தொழில் முயற்சியை செய்து வருவீர்கள். பண பிரச்சினைகள் குடும்பத்தில் குழப்பம் தொடர்ந்து இருந்து வரும். மருத்துவ சிகிச்சை பெற்று நோய் குணமாகும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும். வங்கி கடன் கிடைக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் அக்கறை கொண்டு செயல் படுவீர்கள். வரவுக்குள் செலவு களை ஏற்படுத்தி கொள் வீர்கள். அரசாங்க காரியம் அனுகூலமாக அமையும். மக்களின் நியாயமான பிரச்சினை களுக்கு உடன் இருந்து உதவுவீர்கள். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத் தில் சனி பார்வை படு வதால் தொழிலில் மந்த நிலை இருந்து வரும். தேவைகளுக்கு பண புழக்கம் இருக்கும். வாகன தொழில் செய்பவர்களுக்கு அடிக்கடி தண்ட செலவு வரும். பொருளாதாரம் மேன்மை பெறும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு வெளியூர் செல்லும் வாய்ப்புகள் அமையும். நடன கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். பொருளாதாரம் வளர்ச்சியை பெறும்.

### பெண்களுக்கு

பெண்களின் திருமணம் கைகூடும். நல்ல வரன் அமையும். சுயதொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். பண புழக்கம் நன்றாக இருக்கும்.

### எங்கும் நிறைந்தவர் கடவுள்!

கடவுள் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார். எனினும், அவரை அனைத்து நேரத்திலும் உணர முடிவதில்லை. இந்த உணர்வை அனைத்துக் காலங்களிலும் நம்முள் இருக்கச் செய்ய கடவுளால் படைக்கப்பட்டவர்களே நம் தாய் தந்தையர், அதனால்தான் "தந்தை தாய் பேண்", "நன்றி மறவேல்" என்னும் முதுமொழிகள் உள்ளன.

### மாணவர்களுக்கு

மாணவர்களின் கல்வி வளர்ச்சியை தரும். ஆசிரியர் பயிற்சி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். உயர் கல்வி ஆசிரியர்களின் உதவியால் மேன்மையை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

27.09.2015 ஞாயிறு மாலை 04.07 முதல் 29.09.2015 செவ்வாய் மாலை 06.26 மணி வரை

### நட்சத்திர பலன்கள்
### மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். வய தான உறவினர்களுக்கு பாதிப்பை தரும். கவனமாக இருக்கவும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். வெளியூர் சென்று வருவீர்கள். மன அமைதியின்மை சில நேரம் வரும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்.

### உத்திரம் 1ஆம் பாதம்

முறையானவழியில் செல்ல வேண்டுமென்று நினைப்பீர்கள். கடன் தொல்லை ஓரளவ குறையும்.


**அதிர்ஷ்ட நிறங்கள்** சிவப்பு, ஆரஞ்சு, இளம் மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள்** கிழக்கு, தென்கிழக்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** ஞாயிறு, புதன், வியாழன்

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

விநாயகரை நான்கு முறை வலம் வந்து அருகம்புல் மாலை போட்டு சாம்பிராணி போட்டு வணங்கி வர நன்மை உண்டாகும்.



# ஆசாரங்கள் முதன்மையானவை!

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. "சர்" என்றால் நடத்தல் என்று பொருள். "ஆசாரம்" என்றால், அதன்படி நடத்தல் எதன்படி நடத்தல்? கடவுள் நமது நன்மையைக் கருதி நமக்காகக் கொடுத்தவையே ஆச்சாரங்கள், நின்றுகொண்டு சாப்பிடாமல் இருத்தல், இடது கையில் நீர் பருகுதலைத் தவிர்த்தல், விடியற்காலையில் எழுந்து கொள்ளுதல், எழுந்தவுடன் குளித்துவிடுதல், குளித்தவுடன் நாம் உடுத்திய துணிகளை நனைத்தல், பிரதி அமாவசையன்று நமது பித்ரு காரியங்களைச் செய்தல், அவரவர் வழக்கப்படி நெற்றியில் சமயச் சின்னங்கள் தரித்துக் கொள்ளுதல், பூமியைத் தூய்மையாக வைத்திருத்தல், வேறொருவர் பயன்படுத்தியதைப் பயன்படுத்தாமல் இருத்தல்,? தண்ணீர் மாசுபடாமல் பாதுகாத்தல், மற்றவர்களை ஏமாற்றாமல் இருத்தல், ஆடம்பரமாக இல்லாமல் இருத்தல், மாதவிடாய் காலங்களில் பெண்கள் கண்டிப்பாகத் தனிமையாக இருத்தல், தாய் தந்தையரை நல்ல முறையில் கவனித்தல், ஆலயத்துக்குச் செல்லும்போது ஆண்களாக இருப்பின் வேட்டி, துண்டு அணிந்து கொள்ளுதல், பெண்களாக இருப்பின் புடவை அணிதல், உண்மையே பேசுதல், தர்மத்தின் படியே நடத்தல், இவை போன்று எவ்வளவோ எளிமையான விடயங்கள் நமது சாஸ்திரங்களில் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாம் நம்மால் கடைப்பிடிக்கக் கூடியதுதானே! உலகம் எப்படி இருந்தாலும், மனிதர்கள் மனிதர்கள்தானே! அனைவருக்கும் தேவை அமைதியான வாழ்க்கைதானே! அதை சாஸ்திரங்கள் தவிர வேறு எதனாலும் நமக்கு அளிக்க முடியாது. "சாஸ்திராய ச்ஸுகாயச" சாஸ்திரங்கள் நமது நன்மைக்காகவே கொடுக்கப் பட்டவை.

நாம் நமது ஆசாரத்தைக் கடைப்பிடிக்கும் போது மற்றவர்கள் நம்மைப் பார்த்து வேடிக்கை செய்வார்கள்தான் ஏனென்றால் நமது நாட்டில் 500 வருடங்களுக்கு மேலாக அந்நியர் ஆட்சி இருந்தது. சுதந்திரம் கிடைத்த பின்னரும் நாத்திகர்களே ஆட்சி அதிகாரத்தைக் கையாண்டு வந்தார்கள். ஆதலால் பலர் மனதில் அடிமைத்தனமும், நம் நாட்டு வழக்கங்கள் என்றால் கீழாகவும் மேலைநாட்டு வழக்கங்கள் எனில் அதில் போலிப் பெருமையும் கொண்டுள்ளார்கள். எனவே அவர்களைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நாம் இவ்வுலகுக்கு தனியாகத்தான் வந்தோம். தனியாகத்தான் போகப்போகிறோம். இடைப்பட்ட வாழ்க்கையில் நாம் எவ்வளவு நல்லவர்களாக இருக்கிறோமோ, அதன்படி நாம் அடுத்த பிறவியில் நல்ல நிலையை அடையலாம் என்பதை மனப்பூர்வமாக நம்புங்கள்.

“ஆச்சார ப்ரதமோ தர்ம” என்ற வாக்கின்படி அனைத்துக் காரியங்களிலும் முதன்மையானது ஆசாரம் தான். அதை எப்பாடுபட்டாவது கடைப்பிடித்து உயர்ந்த நலன்களை அடையுங்கள்!



# சித்தர் பீடத்தில் நவராத்திரி விழா

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆன்மீக குரு பங்காரு அடிகளார் கருவறையில் அகண்ட தீபம் ஏற்றி விழாவினை துவக்கி வைப்பார்கள். இந்த ஆண்டும் இவ்விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தமிழ்நாடு மற்றும் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து பக்தியுடன் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


அடிகளார் ஏற்றி வைக்கும் அகண்ட தீபத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி வழிபடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பது வழக்கமான ஒன்றாகும்.

சித்தர் பீடத்தில் கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும், நவராத்திரி விழா வெகு விமரிசையாக அருள்திரு அடிகளார் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது. விழாவின் துவக்கத் தினத்தன்று அதிகாலையிலேயே மங்கள இசை முழங்க கருவறையில் ஆதிபராசக்தி அம்மனுக்கு சந்தன காப்பு, துளசி காப்பு, விபூதி காப்பு, வேப்பிலை காப்பு, குங்கும காப்பு முதலியவற்றுடன் சிறப்பு அபிடேக அலங்காரங்களும் செய்யப்பட்டு தங்க கவசம் சாத்தப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படும். அப்போது லட்சுமி பங்காரு அடிகளார் அவர்களால் சிறப்பு ஆராதனையும் மேற்கொள்ளப்படும்.

பக்தர்களின் முக்கூட்டு எண்ணெய் வழிபாட்டிற்கு பின்பாக, நூற்றுக்கணக்கான செவ்வாடை பக்தர்கள் 1008, 108 மந்திரங்கள் கூறும் வழிபாட்டுடன் லட்சார்ச்சனை துவங்கும். முந்தைய ஆண்டுகள் போலவே ஆலய வளாகத்தில் நவராத்திரி கொலு மிகச் சிறப்பாகவும் அழகாகவும் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.



சித்தர் பீடத்தில் நடைபெறும் நவராத்திரி விழா மற்றும் அனைத்து நிகழ்ச்சி ஏற்பாடுகளையும் மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி ஆன்மீக இயக்கப் பொறுப்பாளர்களும் இயக்கத் துணை தலைவர்களும் மேற்கொண்டு வருகின்றார்கள்.




# உலகத்தைப் பார்க்கும் பார்வை

ஓர் ஊரில் இளைஞர்கள் இருவர் அறிவைத் தேடுவதில் நாட்டம் கொண்டிருந்தார்கள்.

மலை உச்சியில் துறவி ஒருவர் இருக்கிறார். எல்லாம் அறிந்தவர் அவர் என்று அவர்கள் இருவரும் கேள்விப்பட்டார்கள். அவரைச் சந்திப்பதற்காக மலை உச்சிலை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் அவர்கள் இளைப்பாறினார்கள். மேய்ப்பவன் ஒருவன் பன்றிகளையும் பன்றிக் குட்டிகளையும் மேலே ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தான்.

ஒரு பன்றிக் குட்டியின் காலில் ஏதோ காயம். நடக்க முடியாமல் அது துன்பப்பட்டது. ஆனால் மேய்ப்பவனோ மற்றவற்றுடன் சேர்த்து அதையும் விரட்டிக் கொண்டிருந்தான். நொண்டியபடியே பரிதாபமாக நடந்தது அது. மலை உச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பெரியவர் ஒருவர் இதைப் பார்த்தார்.



"மேய்ப்பவனே! இந்தப் பன்றிக் குட்டியை நான் தூக்கி வரவா?" என்று கேட்டார். "உங்களுக்கு விருப்பமானால் தூக்கி வாருங்கள்" என்றான் அவன். அவர் அந்தப் பன்றிக் குட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினார். மரத்தின் நிழலில் இருந்தவர்களில் ஒருவன் "மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை முகத்தைப் பார்த்தே என்னால் சொல்ல முடியும். இது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டான்.

அதற்கு இன்னொருவன் "பன்றிக் குட்டியை அந்தப் பெரியவர் தூக்கிச் செல்கிறார். இதைப் பற்றி மேய்ப்பவனும் பன்றிக் குட்டியும் என்ன நினைக்கின்றார்கள்? சொல். பார்ப்போம்" என்றான்.


"உலகம் முழுவதும் முட்டாள்கள் நிறைந்து உள்ளார்கள். இந்தப் பன்றிக் குட்டியைத் தூக்கிச் செல்லும் கிழ முட்டாளைப் போல யாரும் இருக்க முடியாது. இப்படி யாராவது அடிக்கடி கிடைத்தால் நம் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று நினைக்கிறான். மேய்ப்பவன். பன்றிக் குட்டிக்கோ தன்னை யாரோ சுமந்து செல்கின்றனர் என்ற நன்றி உணர்வே இல்லை. தான் பட்ட துன்பத்தையும் அது நினைத்துப் பார்க்கவில்லை" என்றான்.

"மேய்ப்பவனுக்கோ பன்றிக்கோ எந்த உதவியும் அந்தப் பெரியவர் செய்யவில்லை இருவரிடமும் நன்றி உணர்வு இல்லை. எதற்காக இப்படி அவர் துன்பப்பட வேண்டும்?" என்றான் மற்றவன். நீண்ட நேரம் ஓய்வு எடுத்த அவர்கள் மலை உச்சியையடைந்தார்கள். பன்றிக் குட்டியைத் தூக்கி வந்த பெரியவர்தான் அங்கே துறவியாக உள்ளார் என்பதை அறிந்து அவர்கள் கேட்டு அறிந்தார்கள்.

அவர்களில் ஒருவனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. நீங்கள் எதற்காகப் பன்றிக் குட்டியைத் தூக்கி வந்தீர்கள்? பன்றிக் குட்டியின் துன்பத்தைப் போக்கவா? அல்லது மேய்ப்பவனின் திண்டாட்டத்தைக் குறைக்கவா? உங்கள் அருள் உள்ளத்தைக் காட்டவா?" என்று கேட்டான்.

"பன்றிக் குட்டியைச் சுமந்து வந்ததாக எனக்கு நினைவே இல்லையே" என்றார் அவர். விடை பெற்ற அவர்கள் மலையிலிருந்து இறங்கத் தொடங்கினார்கள். கேள்வி கேட்டவன் மற்றவனிடம் "என்னைப் போல முட்டாள் யாரும் இல்லை. உலகத்தைப் பார்க்கும் பார்வையில் ஞானிகளைப் பார்த்தது என் தவறுதான்" என்றான்.

– எ.சோதி



# மதமும்

மனிதன் வாழத் தொடங்கிய நாள் முதற்கொண்டு சிந்தனை ஆற்றல் பெருகிய நாள் வரையிலே மற்ற உயிரினங்களைப் போலவே இயற்கையாக, மலைக் குகைகளிலே, மரத்தடிகளிலே, ஆற்றோரங்களிலே வாழ்ந்து வந்தான். இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றக்கூடிய அளவிற்குச் சிந்தனை தொடங்கிய போது ஒவ்வொன்றிலும் "ஏன்" "எப்படி" என்ற வினா எழுந்தது. அதுதான் ஆறாவது அறிவினுடைய சிறப்பாகும். புலன் உணர்வுகளாலே உணருகிறோம், வாழ்ந்து வருகிறோம். அதனாலே வரக்கூடிய இன்ப துன்பத்தை அனுபவிக்கின்றோம். இது ஐந்து அறிவுடைய விலங்கினங்கள் வரையில் சரியே. அதற்கு மேலாக இது எதனால், ஏன் எப்படி என்றெல்லாம் வினா எழுந்து விட்டது என்றால் ஆறாவது அறிவு செயல்படத் தொடங்கி விட்டது என்று பொருள்.

மற்ற உயிர்களுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டைச் சொல்ல வேண்டுமானால் பிற உயிர்கள் அத்தனையும் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அப்படியே உள்ளது உள்ளவாறு துய்கின்றன. ஆனால் மனிதன் மாத்திரம் ஆறாவது அறிவின் சிறப்பாலும், சிந்தனையாலும், கைத்திறனாலும் இயற்கையில் உள்ளவற்றை அழகுபடுத்தியும், உருமாற்றியும் தான் அனுபவிக்கின்றான்.

இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றுவதற்கு அறிவைக் கொண்டும் கைத்திறனைக் கொண்டும் மாற்றம் செய்யும் செயலைத்தான் "கலை" (Arts) என்று கூறுகின்றோம். அதனால் மனிதனுடைய வாழ்வே கலை எனப்படுகிறது. "கலை" என்றால் அதற்கு வெவ்வேறு விதமான பொருள் இருந்தாலும் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றும் அறிவுத் தெளிவு, திறன், நுட்பம், இவைதான் கலை.

மனிதன் வாழ்வே கலைதான். எந்தப் பொருளையும் அழகுபடுத்தி, உருமாற்றி அனுபவிக்கிறான். அதன் விளைவாக எழக்கூடிய நன்மை தீமைகளை உணர்ந்து அவற்றைச் சரிசெய்து கொண்டு போக வேண்டிய பொறுப்பும் ஏற்பட்ட இடத்தில் ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் தேவைப்படலாயின. ஒரு மனிதன் தனக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடியாது. அது மட்டுமல்ல. பிறந்தது முதற்கொண்டு 15, 16 ஆண்டுகள் வரையிலே பிறர் உதவியிலே தான் வாழவேண்டுமேயல்லாது, மற்ற உயிர்களைப் போல பிறந்ததிலிருந்து தன்னுடைய செயலாலே முயற்சியாலே வாழக்கூடிய அளவுக்கு மனிதனுக்கு ஆற்றல் இல்லை. ஏனென்றால் எந்தப்பொருளையும் உருமாற்றி அதன் பிறகு தான் அனுபவிக்க வேண்டும்.


இங்கு தான் சிந்தனை செயல்படுகின்றது. "சிந்தனை" என்றால் என்ன? இயற்கையை நுணுகி, அதனுடைய அமைப்பை, இயக்கத்தை, இயக்க ஒழுங்கை, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அறிந்து கொள்ளக்கூடிய ஒரு திறன், ஆர்வம், செயல் இதுதான் சிந்தனை. இதுதான் ஆறாவது அறிவாகும். "இயற்கை" என்று குறிப்பிடுகிறோமே அந்த இயற்கை என்ற வார்த்தையின் பொருள் என்ன? எந்த வார்த்தைக்கும் சரியான பொருள் உணரவில்லை என்றால் அதிலிருந்து பெறக்கூடிய விளக்கங்கள் கூட குறை உள்ளதாகவே இருக்கும்.


நாம் காணுகின்ற இப்பேரியக்க மண்டலமாகிய இப்பிரபஞ்சம் பலகோடி அண்டங்களை உடையது. அவை எல்லாம் எவ்வாறு இயங்குகிறது. எப்படி உருவாயின என்ற வினா எழுப்பிக் கொண்டு பார்த்தால் அவை அனைத்துமே அணுக்களின் கூட்டு

இயக்கமேயாகும். அந்த "அணு" என்ற வார்த்தைக்கு இரண்டு விதமான கருத்துக்கள் உண்டு. விஞ்ஞானிகள் (Scientists) பல துகள்கள் சேர்ந்த ஒரு கூட்டு இயக்கத்தை "அணு" என்று சொல்கிறார்கள். நியூட்ரான், புரோட்டான், எலெக்ட்ரான் என்று மூன்று விதமான வேறுபாடு களைக் கொண்டு ஒன்றுக்கொன்று இயங்கிக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு குடும்பத்தை "அணு" என்கிறார்கள். எந்த வகையாலேயும் பிரிக்க முடியாத, கடைசியான ஒரு நுண்துகள் எதுவோ அதைத்தான் "அணு" என்று மெய்ஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அந்த "அணு" என்ற வார்த்தைக்கு "நுண்ணியக்க மூலக்கூறு" என்பதுதான் சரியான பொருள். அதைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு "பரமாணு" என்ற பெயர் வைத்துள்ளார்கள். "பரம்" என்ற சொல் அதற்குமேல் ஒன்றுமில்லை, "பரமாணு" என்றால் நுண்ணியக்கம். அதைவிட நுண்ணியது இல்லை.

# சடங்குகளும்

ஆகவே அந்தச் சக்தியின் திணிவினால் காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற நான்கு பௌதீக அமைப்புகளும் உருவாகி அவற்றை முதல் பௌதீகமான ஆகாசத்துடன் சேர்த்துப் பார்த்தால் ஐந்து ஆகிறது. இப்பிரபஞ்சத்தில் நாம் பார்ப்பதெல்லாம் இந்த நுண் இயக்கத் துகள்களின் கூட்டுத்தான் (Association of Energy particles) அதனுடைய திணிவு நிலைதான் பிரபஞ்சப் பொருட்கள், தோற்றங்கள் அனைத்தும், அந்தச் சக்திக்கு முன்னதாக ஆதாரமாக உள்ளதுதான் சுத்தவெளி, வெட்டவெளி ஆகும்.





**இயற்கையின் நான்கு நிலைகள்**

பிரபஞ்சம் முழுவதும் இருப்பாக உள்ளது என்னவென்று பார்த்தால் இந்தச் சுத்த வெளி தான். இந்தச் சுத்தவெளிக்கும் அணுவுக்கும் உள்ள தொடர்பை ஆராயும் போது அது அறிவாக உள்ளது. அந்த அறிவு மனிதனிடம் எல்லை கட்டிய அளவில் இருக்கிறது.

அதுவே எல்லைகளையெல்லாம் தாண்டிக் கடந்து ஊன்றி, ஒடுங்கி, நுணுகி தானே அதுவாக மாறும் போது, தானாக ஒரு நிலையில் நிற்கிற போது, ஊன்றிப் பார்க்கும் போது, அணுவையும் கடந்து அந்தப் பரமாணுவையும் கடந்து நிலைத்துப் பார்க்கும் போது, அவனே தானாகி அங்கு நிலைத்து நிற்கும் போது எப்படி இருக்கிறான் என்று சொல்ல முடியவில்லை.

அந்த நிலையிலிருந்து மீண்டும் அணு நிலைக்கு வந்தபோது, அணு நிலைக்கும் முன்னிருந்த நிலைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்கிறான். அதன் பிறகு இல்லாதது எது என்று சொல்லப்படுகிறதோ, சுத்தவெளி என்று சொல்லப்படுகிறதோ அதுவேதான் பின்னப்பட்ட நிலையில் அணுவாகவும் இருக்கிறது என்று கண்டு பிடித்த போது, இதுவரையிலே ஐந்து பௌதீகப் பிரிவுகளைப் பிரித்துத் தெளிவாக்கி உணர்த்தி வந்த வேத நூல்கள், அந்த வேதத்திற்கு முடிவான பரம் பொருள், மெய்ப்பொருள் என்று கண்டுபிடித்த போதுதான் "வேதாந்தம்" (வேதம் + அந்தம்) என்ற பெயரைக் கொடுத்து அதற்கு நிறைவு உண்டாகியது.

(தொடரும்)

– வேதாத்ரி மகரிஷி



# பிரம்ம மாயை

**இந்த அதிசயச் சேதியை ஆயர்குலச் சிறுவர் ஓராண்டு கழித்துத்தான் தன் பெற்றோர்களிடம் சொன்னார்கள். அது ஒரு பெரும் ரகசியம். அதை நான் அப்புறம் சொல்லுகிறேன் எனச் சுகர் பரீட்சித்துக்குச் சொல்லி விட்டு ஸ்ரீ கிருஷ்ணன் லீலைகளைப் பற்றி மேலும் சொல்லுகிறார்.**

கண்ணன் தன் நண்பர்களையும் கன்று காலி களையும் அகாசுரனுடைய வாயில் இருந்து காப் பாற்றி அவர்களை யமுனை ஆற்றங்கரைக்கு அழைத்து வந்து சொன்னான். "இங்கே நாம் எல்லா ரும் அமர்ந்து சாப்பிடுவோம். பொழுது சாய்ந்து கொண்டிருக்கிறது. நாமும் எல்லாரும் பசியால் மிகவும் களைத்திருக்கிறோம். ஆநிரைகளும் இங்கே அருகில் ஓடும் ஆற்றில் தண்ணீர் குடித்து விட்டுச் சற்றே மேய்ந்து கொண்டு இருக்கட்டும்!" என்றான்.

கோபாலர்கள் கண்ணனைச் சுற்றி மலர்ந்த கண் களுடன் வரிசை வரிசையாக அமர்ந்திருந்த காட்சி தாமரைக் காயைச் சுற்றி இதழ்கள் இருப்பது போல இருந்தது.

அவர்கள் அப்படி உட்கார்ந்து சாப்பிடும் போது தங்கள் தங்கள் உண்ட உண்டியின் ருசியை ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக் கொண்டார்கள். ஒரு சிலர் சிரித்து விளையாடினர். ஒரு சிலர் பிறரைச் சிரிக்கச் செய்து பகவானுடன் கூடி மகிழ்ந்தார்கள்.

அகன் விரோதியாக இருந்தாலும், பகவானு டைய சேர்க்கை ஏற்பட்ட காரணத்தால் பூதனையைப் போல் மோட்சம் அடைந்தான். அந்தச் சமயங்களில் பலராமன் உடன் இருக்கவில்லை.

பகவான் கண்ணன் அந்தக் கோபாலர் மத்தியில் நின்று கொண்டு அவர்களுக்கு வேடிக்கை காண பித்துக் கொண்டு இருந்தார். அப்போது அவர் ஆடைக்கும் இடுப்புக்கும் இடையே புல்லாங்குழல் இருந்தது. இடது கக்ஷத்தில் கொம்பூதியையும் பிரம்பையும் செருகியிருந்தார். இடது கையில் தயிர்ச்சாதப் பொட்டலம், விடல் இடைகளில் உசிதமான ஊறுகாய்களையும் வைத்திருந்தார். எல்லோரும் அவருடைய வேடிக்கை விநோதப் பேச்சில் தம்மைப் பறிகொடுத்தது மட்டுமின்றி

சிரியோ சிரி எனச் சிரித்தார்கள். இதைப் பார்த்துக் கொண்டே யஜ்ஞ நாராயணனாகிய கண்ணன் விளையாட்டுப் பிள்ளை வடிவில் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.

இடைச் சிறுவர்கள் மெய்மறந்து கண்ணனுடன் உணவு அருந்திக் கொண்டிருந்த போது கன்றுகள் புல்லுக்கு ஆசைப்பட்டுக் காட்டுக்குள்ளே வெகு தூரம் போய்விட்டன. அவர்கள் பயந்தனர். அதைப் பார்த்ததும் கிருஷ்ணன், "கவலையை விடுங்கள். கன்றுகளை நான் இங்கே கொண்டு வந்து சேர்ப்பிக்கிறேன். நீங்கள் பயமின்றி சாப்பி டுங்கள்!" என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு அருந்த வேண்டிய உணவுக் கவளம் ஒன்றைக் கையில் ஏந்தியவராக, அங்குள்ள சந்து பொந்துகள், குகை, புதர்கள் தோறும் சென்று கன்றுகளைத் தேடினர். இதைத் திருப்பாவையில் ஆண்டாள் அனுப வித்துப் பாடுகிறாள். இதோ அந்தக் காதல் வரிகள்:

*"கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்*
*அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து*
*உன்தன்னைப்*
*பிறவிப் பெருந்தனைப் புண்ணியம் யாமுடையோம்*
*குறைவொன்றும் இல்லாத கோவிந்தா*
*உன்தன்னோடு*
*உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது"*

இந்தக் காட்சியைத் தேவர்கள் பார்த்து நமக்கு இந்தப் பாக்கியம் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டனர். அது மட்டுமா அவர் கையில் இருந்து சிந்தும் சர்தத்தை உண்ண காக்கை வடிவம் எடுக்கலாம் அல்லது மீனுருவெடுத்துத் தண்ணீரில் (ஆற்றில்) சிந்தும் அந்தப் பருக்கைகளை உண்ண ஆசைப்பட்டார்கள்.

கிருஷ்ணன் மாடுகளைக் காணவில்லை என்று ஆற்றாமல் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். நம்மை விட்டு மாடுகள் ஒருநாளும் இப்படி வெகு தூரம் சென்றது கிடையாதே!" என்று நினைத்தான் கண்ணன். ஆக தனியாகத் தேடுவதை விட எல்லா ரும் சேர்ந்து நாலா திசைகளும் சென்று தேடலாம் என்ற திட்டத்துடன் நதித்திட்டிற்கு வந்து. அவன் பார்த்தால் அங்கு சிறுவர்கள் யாரும் அவன் கண் களில் தென்படவில்லை.

"இதென்னடா ஆச்சரியமாக இருக்கிறது. பையன்கள் யாரையும் காணவில்லையே?" என்று மனம் குழம்பி அவர்களைக் கூப்பிட்டுப் பார்த் தான். அவன் குரலுக்குப் பதில் கொடுக்க ஒருவரையும் காணோம். அவன் உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. யாரோ மாடுகளையும் சிறுவர் களையும் வேண்டுமென்றே மறைத்து விட்டார்கள் என்றும் புரிந்து கொண்டான். பின்பு இது பிரம்மா வின் மாயமே என்பதையும் நொடியில் தெரிந்து கொண்டான். உடனே அந்த மாயத்தை மாயத்தால் மாய்க்க மாதவன் திட்டமிட்டான்.

காலையில் கிளம்பும் போது எத்தனை கன்றுகள் மாடுகள் இருந்தனவோ, அத்தனை மாடுகளாகவும் கன்றுகளாகவும் வடிவெடுத்தார். அது மட்டுமா தன்னுடன் வந்த கோபாலர்களாகவும் மாறினார். அவர்களுடைய நடை உடை பாவனைகளை அப்படியே பிரதிபலிக்கப் பார்த்துக் கொண்டார். வழக்கம் போல மாடுகளுடனும் கன்றுகளுடனும் வீடு திரும்பினார்.

பகவான் எப்படி எல்லாம் இருந்தான் என்பதை ஒரு சுலோகத்தில் இப்படி வருணிக்கிறார்.

கன்று மேய்க்கும் சிறுவர்களுக்கு உள்ள உடல், வயது, வாகு, சாயல், அழகு அப்படியே உரித்து வைத்தது போலவும், உடன் வந்த கன்று களுக்குள்ள கால் முகம் மற்ற அங்கங்கள் அப்படி அப்படியேயும் மேலும் இந்த ஆயர் பாடிச் சிறுவர்கள் எந்த மாதிரியான ஆடை அலங் காரங்கள், ஆபரணங்கள், கொண்டு இருந்தார்களோ அதே மாதிரியாகவும், பெயர், உருவம், குணம், நடத்தை முதலியன எந்தெந்த மாதிரி இருந்தனவோ அந்தந்த மாதிரியாகவும் பிறப்பற்ற பகவான் ஹரி வடிவங்கள் கொண்டார். அது உலகம் எல்லாம் விஷ்ணுமயம் என்று சொல்வது போல் இருந்தது.

**-ஏ.எஸ்.வழிதுணைராமன்**





# ஆழ்மனதின் சக்தி...



பல வழிகளில் நம்முடைய ஆழ்மனது கணிணியில் உள்ள ஹோட்டிஸ்க் போல இருக்கிறது. ஹோட்டிஸ்க் கணிணி செயல்பட தேவையாக இருக்கும் முக்கிய பதிவுகளை சேமித்து வைக்கும் அது போல ஆழ்மனதானது நம்முடைய உடல் சரியாக செயல்பட்ட சிலவற்றை சேமித்து வைக்கிறது. நம்முடைய நிதான நிலை அவற்றினை நம்மையறியாமல் செயல்படுத்துகிறது. உதாரணத்திற்கு, நாம் பணிக்கு செல்லும் போது ஒரே சாலையைப் பயன்படுத்தினால், சில நாட்களில் நம்மையறியாமலே நாம் அத்திசையில் செல்வதுண்டு. ஆனால், பணியில்லாத நாட் களில் நாம் அப்பாதையில் செல்ல நேர்ந்தால், நம்மையறியாமலேயே நாம் வழக்கமானப் பாதையில் செல்ல வாய்ப்புகள் உள்ளது. அன்கான்சியஸ் நம்மை நல்வழியில் நடத்தி, நம் வாழ்வை சரியானப் பாதையில் நடத்தி வந்தாலும், சில அன்கான்சியஸ் விடயங்கள் ஆபத்தானவையாக திகழ்கின்றது. நம்முடைய மூளையின் நரம்பு மண்டலத்திலிருந்து நான்கு மின்காந்த அதிர் வலைகள் உருவாகின்றது, அவை பீட்டா, ஆல்ஃபா, தீட்டா, டெல்ட்டா எனபடுபவை. பீட்டா நிலையில் நாம் இருக்கும் பொழுது ஒரு வினாடிக்கு 1314 அதிர்வெண்ணாக இருக் கிறது. இந்நிலையில் நம்முடைய ஐம்புலன் செயல்படும், உள்ளுணர்வு செயல்படாது, இடது மூளை செயல்பாட்டில் இருக்கும். ஆல்;ஃபா நிலையில் நாம் இருக்கும் பொழுது ஒரு வினாடிக்கு 714 அதிர்வெண்னாக இருக்கிறது. நம் கண்கள் மூடி, உடல் பாகங்கள் ஓய்வில் இருக்கும். நம் நிலையிழந்து தூக்கத்தை நோக்கி செல்வோம். வலது மூளை இந்நிலையில் செயல் படும் அப்போது இலக்குகளை சிறப் பாக நிர்ணயிக்க முடியும். தீட்டா நிலையில் நாம் இருக்கும் பொழுது ஒரு வினாடிக்கு 48 அதிர்வெண்ணாக இருக்கிறது. இதனை ஆழ்ந்த தியானநிலை என கூறலாம். இதில் ஆன்மீக ஆற்றல் அதிகளவில் காணப்படும். ஐம்புலன்களில் செயல்பாடுகளை உணர முடியாது. டெல்டா நிலையில் நாம் இருக்கும் பொழுது ஒரு வினாடிக்கு நான்கிற்கும் கீழாகவே அதிர்வெண் இருக்கிறது. இந்நிலையில் நாம் ஆழ்ந்த நித்திரையிலோ, கோமாவிலோ இருப்போம். இந்நிலையில் தான் பலருக்கும் மரணத்தின் அருகில் செல்லும் அனுபவம் கிடைக்கும். நாம் ஆல்ஃபா தீட்டா நிலையில் தான் நம்முடைய ஆழ்மனதை அடைய முடியும். ஆனால் தீட்டாவை விட நாம் தூங்கும் ஆல்ஃபா நிலையில் தான் எளிமையாகவும் அடிக்கடியும் அந்நிலையை அடைய முடியும். பிளசிஃபோ எப்ஃபெக்ட் 1983 உலக கோப்பை கிரிக்கெட் அணியின் வீக்கெட் கீப்பர் நரேந்திர கிர்மாணி விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது விமானத்தில் திடீரென அவர் பயணித்த விமானத்தில் ஒரு முதியவருக்கு நெஞ்சு வலியால் அவதிப்படுகிறார். விமானத்தில் மருத்துவர் யாராவது இருந்தால் உதவுங்கள்


என அழைப்பு வந்தது, நீண்ட நேரமாக யாரும் உதவி வராமல் இருந்தனர். நீண்ட நேரத்திற்கு பின் ஒரு இளைஞன் அவரிடம் விரைந்து, அவருடைய நாடித் துடிப்பைக் கண்டு, அவருக்கு சில மாத்திரை கொடுத்தான், உடனே அந்த முதியவர் குணமாகிவிட்டார். விமானம் தரையிறங்கியவுடன் கிர்மாணி அந்த இளைஞரிடம் சென்று, ஏன் அறிவிப்பு வந்த உடனேயே உதவிக்கு வரவில்லை என கேட்டார். அப்போது அவன், "விமானத்தில் யாராவது மருத்துவர்கள் இருப்பார்கள், அவர்கள் அவருக்கு முன் வந்து உதவுவார்கள் என எண்ணினேன். விமானத்தில் மருத்துவர்கள் இல்லை என்று உணர்ந்தபின் நான் அவருக்கு உதவினேன்" என கூறினான். கிர்மாணி, "ஏதோ மாத்திரை கொடுத்தாயே, அது என்ன?" என கேட்டார். "நாம் சாதாரண வலிக்கு பயன்படுத்தும் ப்ரூஃபன் மாத்திரையைக் கொடுத்தேன்" என கூறினான். அப்போது தான் கிர்மாணிக்கு புரிந்தது, மருத்துவரோ, மாத்திரையோ முதியவரை குணமாக்கவில்;லை, அவர் குணமாகிவிடுவோம் என்று வைத்த நம்பிக்கையே அவரை குணமாக்கியது. இதையே மேற்கத்திய மருத்துவர்கள் ப்ளசிபோ எஃப்பெக்ட் என கூறுகிறார்கள். நம் கண்ணுக்கு புலப்படாத பல மருந்துகள் நம் உடலை குணப்படுத்துகிறது. அவை, நம்பிக்கை, அன்பு, பரிவு, பச்சாத்தாபம், நேர்மை, ஆசீர்வாதம், விட்டுக்கொடுத்தல், பொறுமை, உறுதிப்பாடு, பெருந்தன்மை, தியானம், ஜெபம், ஒளி, வாசம், உதவி, உண்மை, ஏற்றுக் கொள்ளும் மனம், ஆற்றல் திறன், புன்னகை என இவையணைத்தையும் கைக்கொண்டால் நம்மை நாமே குணமாக்கிக் கொள்ள முடியும். அதேப்போல் ஜப்பானின் முன்னணி விஞ்ஞானி மற்றும் டொக்டர் எமாட்டோவின் ஆராய்ச்சியில் தண்ணீரில் நம்முடைய உணர்வுகளில் தாக் கத்தை உட்புகுத்தி ஆராய்ச்சிகளை நடத்தி யிருக்கிறார்.



நேர்மறையானத் தாக்கத்தை அவர் நீரில் உட்புகுத்திய போது அழகான வடிவத்தை அளித்தது. அதன் பின் அந்த நீரில் நேர்மறையான தாக்கம், மெல்லிய இசை, நல்ல வார்த்தைகளைக் கூறி ஜெபம் செய்து அவற்றை கட்டிகளாக மாற்றினார். அப்போது அது அழகான வடிவத்தை அளித்தது. அவரை பிரத்தியேகமாக ஒரு மைக்ரோஸ்கோப் மூலம் பார்க்கும் போது அந்த நீரில் கிரிஸ்டல்சை காண முடிந்தது. அதேபோல அந்த நீரில் எதிர்மறையானத் தாக்கத்தை செலுத்தும் போது, அது ஒழுங்கில்லாத நிலையை அளித்தது. அதேபோல இரண்டாவதாக அவர் மூன்று ஜார்களில் அரிசியைப் போட்டு வைத்தார். முதல் ஜாரின் அருகில் அவர் நேர்மறையான எண்ணங்களையும், நல் வார்த்தைகளையும் கூறினார். இரண்டாவது ஜாரின் அருகில் எதிர்மறையான எண்ணங்களையும், வார்த்தைகளையும் கூறினார். மூன்றாவது ஜாரிடம் அவர் எதும் செல்லவில்லை. சில நாட்கள் கழித்து, முதலாம் ஜாரில் வைக் கப்பட்ட அரிசியிலிருந்து நல்ல வாசனையும் வெளியேறியது. இரண்டாவது ஜாரில் இருந்த அரிசி கருப்பாகவும், சக்தியிழந்ததாகவும் காணப்பட்டது. மூன்றாவது ஜாரில் இருந்து நூர்நாற்றம் எடுத்தது. இதன் மூலம் நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் மொழி மற்றவர் களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே. நம்முடைய உடலில் 70% நீரால் உள்ளது. நான் எதிர்மறையான எண்ணங்களை வெளிப்படுத்தும் போது அது நம்முடைய உடலில் உள்ள நீரில் தாக்கம் ஏற்படுத்தி, நம்முடைய உறுப்புக்கும் பாதிப்பு ஏற்படுத்துகிறது. இதன் மூலம் ஆழ்மனதானது நம்முடைய உடலில் ஏற்படுத்தும் மற்றங்களை நம்மால் அறியமுடியும்.

Dr.J. விக்னேஷ் சங்கர்
மனநல ஆலோசகர்
99525 40909

## மிகப் புனிதமானது சுந்தரகாண்டம்!



இதிகாச ரத்தினம் எனப் போற்றப் படும் ராமாயணத்தில் சுந்தரகாண்டம் பகுதி மிகவும் புனிதமாக கருதப்படு கின்றது. சுந்தரம் என்றால் அழகு என்று பொருள். சீதாதேவியை பிரிந்து வாடும் ஸ்ரீராமபிரானுக்கு அனுமன் மூலம் "கண்டேன் சீதையை" என்னும் நல்ல செய்தி கிடைப்பது இந்த காண்டத்தில் தான். அசோக வனத்தில் சோகமாய் அமர்ந்திருக்கும் சீதைக்கு நம்பிக்கை ஒளியாக அனுமன் தோன்றி தேறுதல் சொல்லுவது இந்த காண்டத்தில் தான். எனவே சோதனைகள் நிறைந்த வாழ்க்கையை சந்திப்பவர்கள் சுந்தரகாண்டத்தை பாராயணம் செய்தால் நலம் பெறலாம் என்று அருளாளர்கள் சொல்லியுள்ளார்கள்.

# நவராத்திரி விரதம்



நவராத்திரி என்பது ஒன்பது இரவுகளைக் குறிப்பதாகும். பரமசிவனின் இடப்பாகத்தில் எழுந்தருளி திருவருள் சக்தியாய் பஞ்ச கிருத்தியத்திற்குக் காரணமாயும் விளங்கும் உமாதேவியை வழிபட்டு நாம் நல்லருள் பெறு வதற்கான புண்ணிய காலமே நவராத்திரியாகும். புரட்டாசி மாதத்துப் பூர்வ பக்க பிரதமைத் திதி முதலாகவுள்ள ஒன்பது இரவுகள் எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் கொள்ளப்படுகின்றது. தேவர்கள் தொடங்கி அனைவரையும் துன்பப்படுத்தி வந்த மகிசாசுரன் எனும் அசுரனை சக்தியாகிய துர்க்கா எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டு கடைசி நாளான பத்தாம் நாள் வெற்றி கண்ட நிகழ்வே நவராத்திரியாகவும், விஜயதசமியாகவும் போற்றப்படுகின்றது. இவ்வசுரனை மர்த்தனம் செய்து நமது அறிவையும், ஞானத்தையும் ஜெயிப்பதற்கு உதவிடும் சக்தியே மகிசாசுரமர்த்தினி ஆகின்றாள். சக்தி உபாசனை மனிதரை மேம்படுத்தும் மேலான வழியாகும். மும்மூர்த்திகளும் கூட சக்தி உபாசனை செய்து நலம் பல பெற்றதாக தேவிபாகவதம் தெரி விக்கின்றது. பராசக்தியை துர்க்கா ரூபமாக உபாசித்தால் பயத்தெளிர்ச்சி உண்டாகும். இலக்குமி ரூபமாக உபசரித்தால் செல்வம் பெரு கிடும். சரஸ்வதியாக உபாசித்தால் கல்வியும் ஞானமும் கிடைக்கப்பெறும். நவராத்திரி நாட் களில் கொலு வைத்துக் கொண்டாடுகின்ற வழக்கம் இன்றளவும் இருந்து வருகின்றது. நவராத்திரியை வழிபடும் முறைகள் பல உள்ளன. நவராத்திரியின் போது கொலு வைப்ப தோடு குழந்தைகளைக் கலைமகளாகவே கருதி வழிபட்டு வந்தனர். ஒன்று முதல் ஒன்பது வயதுடைய பெண்களைத் தேர்ந்தெடுத்து முதல் நாள் ஒரு வயதுடைய குழந்தையும் இரண்டாம் நாள் இரண்டு வயதுடைய குழந்தை யையம் இவ்வாறே ஒன்பது தினங்களும் அவ்வெண்ணிக்கைக்கு ஏற்ற வயதுடைய குழந்தைகளை கலைமகளாகவே பாவித்து அலங்கார தீப தூபம் முதலியவற்றால் வழிபட வேண்டும். இது பண்டை நாட்களில் இருந்து வந்த ஒரு வழிபாட்டு முறையாகும். இவ்வகையான வழிபாட்டு முறை இப்போதெல்லாம் அதிகமாக மேற்கொள்ளப்படுவதில்லை.இப்போதெல்லாம் ஆலய வழிபாடு, பூஜையறை வழிபாடுகள், கொலு மற்றும் பஜனை முதலியவற்றிற்கே நவராத்திரியில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

நவராத்திரி விழாவில் ஒன்பது நாட்களிலும் முப்பெரும் பெண் தெய்வங்களான துர்க்கை இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் வழிபடுகின்றார்கள். துர்க்கை வீரத்திற்கும், இலக்குமி செல்வத்திற்கும், சரஸ்வதி கல்விக்கும் உரிய தெய்வங்கள் என்பதால் இவர்களை வழிபடவே நவராத்திரி ஏற்பட்டதாகும்.

விஜயதசமியன்று குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தலை ஆரம்பிக்கின்றார்கள். இராமர் இராவணனை வெற்றி கொண்ட நாள் விஜயதசமி என்று சொல்லப்படுகின்றது. இராமபிரானின் மூதாதையர்கள்தான் நவராத்திரி விழாவை தொடங்கி வைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

நவராத்திரி விழாவில் கொலுவின் போது இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள சிறுமிகளின் கைகளால், கன்னிப் பெண்களுக்கு மஞ்சள் குங்குமம் போன்ற மங்களப் பொருட்களை கவுரி பூஜை செய்து கொடுப்பது சிறப்பானதாகும். நவராத்திரி வழிபாட்டால் கல்வி, செல்வம், ஞானம் வீரம் முதலியன கிடைக்கப் பெறுவது திண்ணம் என்கின்றனர் ஆன்மீகச் சான்றோர்கள்.

S.ஆகாஷ்

## மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்
## 18.09.2015 முதல் 17.10.2015 வரை



# கன்னி

கருத்து வேறுபாடுகளை களைந்து உறவினர்களிடம் அன்புடன் செயல்படும் கன்னி ராசி வாசகர்களே! இம் மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம ராகுவுடன் சூரியன் இணைவது அரசு சார்ந்த விடயங்களில் அனுகூலமான சூழ்நிலை உருவாகும்.

### பணியாளர்களுக்கு

சகோதர நேசத்துடன் தொழிலாளர்களிடம் அன்பாக பழகுவீர்கள். வெளிப்படையான உங்களின் பேச்சு அனைவரிடமும் நல்ல வரவேற்பை தரும். உங்களின் கடமையை சரியாக செய்து நற்பெயர் பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் மக்களிடம் நீங்கள் பேசும் பேச்சு சிறப்பாக அமையும். உரிமையான விடயங்களில் உறுதியாக இருந்து பலருக்கும் உதவிகளை செய்வீர்கள். பொருளாதாரம் ஓரளவுக்கு நன்றாக இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

செய்யும் தொழிலில் கவனமும் அக்கறையும் கொண்டு செயல்படுவீர்கள். மருத்துவர்களுக்கு நல்ல வருமானம் கிட்டும். பாத்திர வியாபாரம் சிறப்பாக அமையும். பொருளாதார நிலை மேன்மை அடையும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு தொழிலில் நன்மையான பலன் கிட்டும். புதிய ஒப்பந்தங்களில் இணைவீர்கள். கதை, வசனம், பாடல்களில் ரசிகர்களின் அன்பை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக அமையும்.

### பெண்களுக்கு

பெண்களின் தொழிலில் சில சங்கடங்கள் வந்தாலும் எளிதில் சரி செய்து விடுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சில தடைகள் வரலாம், பண புழக்கம் குறைவாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் உங்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிட்டும். உயர் கல்வி வெளிநாட்டு படிப்புகளில் சில தடைகளை சந்திக்க வேண்டி வரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

29.09.2015 செவ்வாய் மாலை 06.27 முதல் 01.10.2015 வியாழன் இரவு 09.21 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

உறுதியான செயல்பாடுகளை செய்வீர்கள். கருத்துகளை பிறரிடம் தெளிவாக சொல்லுவீர்கள். புதிய செலவு உண்டாகும். பொருளாதார நிலை சுமாராக இருக்கும்.

#### ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சுலபமாக இருந்த பிரச்சினைகளை இறக்கி வைப்பீர்கள். காதலர்களுக்கு மனம் விட்டு பேசும் வாய்ப்பு அமையும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

#### சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

சின்ன விடயமாக இருந்தாலும் ஆராய்ந்து செயல்படுவீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** பச்சை, வெண்மை, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள்** தெற்கு, தென்மேற்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** புதன், வெள்ளி, சனி

### இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை வணங்கி 5 விளக்கு ஏற்றி அன்னதானம் செய்து வர விரைய குருவின் பாதிப்பு குறையும்.

### உடன் செய்க தர்மம்!



தர்மம் என்பது நமது மனதில் உதித்தவுடனேயே செய்துவிட வேண்டும், பிறகு என்று நினைத்தோ மானால், அது முழுமையாக இருக்காது. இறைவன் நமக்குக் கொடுத்திருப்பதே அனைவருக்கும் கொடுப்ப தற்குத்தான். மரங்கள் நிழலைக் கொடுக்கின்றன. நதிகள் தண்ணீரைக் கொடுக்கின்றன. இயற்கைச்செல்வங்கள் அனைத்துமே மற்றவற்றைக் காப்பாற்றுவதற்காகத் தங்களை அர்ப்பணிக்கின்றன.

# புதிய பிரசன்ன முறை

## (குருமூர்த்தி பத்ததி)

**ஜோ**திட சாஸ்திரத்தில் பலவிதமான பிரசன்ன முறைகள் இருக்கின்றன. எல்லாமே பல விதமான கணக்குகள் மற்றும் அதற்கு என்று வகுத்த சூத்திரங்கள் அடங்கியது ஆகும். இவைகளை எல்லாம் ஞாபகத்தில் கொண்டு பிரசன்னத்தை நாம் சொல்ல வேண்டும். ஆனால் இந்த புதிய பிரசன்ன முறையில் அவ்வளவு கஷ்டமான கணக்குகளோ, அல்லது சூத்திரங்களோ இல்லை. சாதாரண ஜோதிட சாஸ்திரம் தெரிந்தவர் கூட சரியாக சொல்ல முடியும். இந்த முறை எங்கள் குருநாதர் ஜோதிஸ் ஆசார்யா குருமூர்த்தி ஐயர் அவர்கள் எங்களுக்கு சொல்லிக் கொடுத்தது ஆகும். அதன் விபரம் இங்கு உதாரணத்துடன் விளக்குகிறோம்.

நம்மிடம் -வாசன் திருக்கணித பஞ்சாங்கம் இருக்க வேண்டும். இதில் நமக்கு ஜோதிட விடயமாக தேவையான விடயங்கள் இருக்கிறது. மேலும் இந்த அயநாம்சம் நம் கணக்குக்கு சரியாக உள்ளது. அதனால் இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

லக்னம் எப்படி கணிக்க வேண்டும் என்பதையும் இந்த முறைப்படி ஒரு பிரசன்ன ஜாதகம் எப்படி எழுத வேண்டும் என்பதையும் நாம் முத லில் தெரிந்து கொள்வோம்.

பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு மாதமும் கிரஹ நிலையை தெரிந்துகொள்ள ஒரு ஜாதக கட்டம் இருக்கும். அதில் கிரஹங்கள் எப்பொழுது அடுத்த ராசிக்கு செல்லுகின்றது என்பதை திகதி மூலமாக எழுதியுள்ளார்கள். அதைவைத்து நாம் அந்தமாத ஜாதகத்தில் நாம் பிரசன்னம் சொல்லும் திகதிக்கு கிரஹங்கள் எப்படி அமைந்துள்ளன என்பதை முதலில் எழுதி வைக்க வேண்டும்.இரண்டாவதாக நாம் அன்றைய சந்திரன் எந்த ராசியில் இருக்கிறார் என்று பஞ்சாங்கத்தில் உள்ள விவரங்கள் படி ராசி கட்டத்தில் எழுதிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, இந்த பிரசன்ன காண்டம் எப்பொழுது எழுதி முடிக்க முடியும்? என்று ஒரு கேள்வியை இப்பொழுது எடுத்துக் கொண்டு நாம் நேரத்தையும், திகதியையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மதுரை காலை 8.54 திகதி 10.05.2012

பஞ்சாங்கப்படி கிரஹங்கள் நிலை வியாழக் கிழமை

| | | | |
|---|---|---|---|
| யுரனே | புதன் குரு சூரி | சுக் கேது | |
| நெப் | சித்திரை $28^2$ (10.05.54) | | |
| | | | அங் |
| சந் புளுட்டோ | ராகு | சனி | |


பஞ்சாங்கத்தில் இன்றைய கிரஹ நிலை. இன்றைய சந்திரன் பூராடம் மாலை 6.21 வரை என்று உள்ளது. அதனால் சந்திரன் தனுர் ராசியில் எழுத வேண்டும். நமக்கு இப்பொழுது தேவையானது லக்னம் தான். அதை எப்படி கண்டு கொள்வது என்பதை பார்ப்போம்.இன்று சித்திரை 28 திகதி என்று இருப்பதால் மேஷத்துச் சூரியன் 28 டிகிரியில் இருக்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சூரியன் நாள் ஒன்றுக்கு 1 டிகிரி வீதம் சஞ்சரித்து 30 நாட்களில் ஒரு ராசியை தாண்டி அடுத்த ராசிக்கு போவார்.

இது ஆகாயத்தில் நாம் பார்க்கும் சூரியன், இன்னொன்று லக்ன சூரியன், இவர் 1 டிகிரியை தாண்ட 4 நிமிடங்கள் எடுத்துக் கொள்வார். ஆக ஒரு ராசியை தாண்ட 30 டிகிரி x 4 = 120 நிமிடங்கள் (24 மணி நேரத்தில்) கடந்து விடுவார். இந்த சூரியனின் போக்கை வைத்து தான் நாம் லக்னம் எழுத வேண்டும்.

இங்கு எடுத்துக் கொண்ட உதாரண ஜாதகத்துக்கு லக்னம் எழுத அதாவது நேரம் 8.54க்கு லக்னம் எங்கு வரும் என்பதை பார்ப்போம்.

சித்திரை 28 திகதி என்றால் 28 டிகிரி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக மேஷத்தில் இன்றும் லக்ன சூரியன் தாண்ட வேண்டியது. 2 டிகிரி அதாவது 8 நிமிடங்கள் ( 2x 4) ஆகும். இங்கு சூர்யோதயம் 6.00 மணி என்று எடுத்துக் கொள்ள

## கல்கி பகவான் கோவில்!



கல்கி அவதாரம் எப்போது நடைபெறும் என்று தெரியவில்லை. ஆனால், நிச்சயம் நடக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன. அப்படிப்பட்ட கல்கி பகவானுக்காக இப்போதே நம் நாட்டில் சில இடங்கிளில் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானது, திருவனந்தபுரத்தில் முட்டத்தரா என்ற இடத்தில் கல்லுமேடு சந்திப்பின் அருகே உள்ள கல்கி ஆலயம். இங்கு மூலமாக கல்கி பகவான் இருக்கிறார்.இந்தக் கோவிலின் பெயர் ஸ்ரீமகாவிஷ்ணு தேவி ஷேத்திரம். குழந்தைப் பேறு, திருமணம், நோய்கள் தீர, ஆனந்த வாழ்வு பெற.. என்று வேண்டி இங்கு வழி படும் பக்தர்கள் நல்ல பலனடைந்து வருகின்றனர்.

வேண்டும். இந்த கணக்கும் கம்ப்யூட்டர் கணக்கும் வித்தியாசம் வரும். ஏன் என்றால் கம்ப்யூட்டரில் ஒவ்வொரு ஊர்களுக்கும் சூரிய உதய நேரப்படி கணக்கிட்டு ஜாதகங்கள் கணிக்கப்படும்) இந்த விதமான ஜாதகம் நமக்கு இங்கு தேவை இல்லை. ஆக 6.00 சூரியோதயத்தில் 28 டிகிரியில் லக்ன சூரியன் இருக்கிறார் என்றும் 2 டிகிரி தாண்டினால் இவர் ரிஷப ராசிக்கு வந்து விடுவார்.

அதாவது 6.00 மணி / +0.08 நிமிடங்களில் ஆக 6.08 என்ற நேரத்தில் ரிஷபம் ஆரம்பம் ஆகும். நாம் பிரசன்னம் எடுத்துக் கொண்ட நேரம்

| | | | |
|---|---|---|---|
| யுரனே | புதன் குரு சூரி | சுக் கேது | லக்னம் 13.30 |
| நெப் | | | |
| | | | அங் |
| சந் புளுட்டோ | ராகு | சனி | |

8.54 காலை இந்த நேரத்திலிருந்து 6.00 மணியை (சூரிய உதய நேரத்தை கழிக்க ) 8.54 6.00 = 2.54 என்று வரும். இந்த 2 மணி 54 நிமிடங்களில் லக்ன சூரியன் எத்தனை டிகிரி தாண்டுவார் என்று பார்க்க வேண்டும். ஆகையால் மணியை நிமிடங்களாக மாற்றி 2x60=120 நிமிடங்கள்.இத்துடன் 0.54 நிமிடங்களை சேர்க்க 120+54=174 நிமிடங்கள் என்று வரும். இதை 1 டிகிரி தாண்ட 4 நிமிடங்கள் என்ற கணக்கை கொண்டும் 4ல் வகுக்க 174/4 = 431/2 டிகிரி என்று வரும். இதை மேஷத்துப் பாக்கியுள்ள 2 டிகிரியுடன் கூட்ட 43 1/2+2=451/2 டிகிரி என்று வரும். இதை இப்படி பிரிக்க வேண்டும்.

மேஷம்; 02.00 + ரிஷபம்: 30.00 + மிதுனம்: 13.30 = 45.30

என்ற வரும் ஆக 13 டிகிரி 30 நிமிடங்கள் மிதுன லக்னம் என்று வரும். இதை முன்பு எழுத வைத்துள்ள கிரஹங்கள் அடங்கிய ஜாதகத்தில் எழுத அது இப்படி மாறும். இப்பொழுது பிரசன்ன ஜாதகம் நமக்கு கிடைத்துள்ளது

இந்த புதிய முறை பிரசன்னத்தின்படி ராசியின் அதிபதிகள் தான் முக்கியம். இரண்டாவதாக அங்குள்ள கிரஹம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். லக்னத்துக்கு சூரியன் 11இல் இருந்து விட்டால் நினைத்தது உடன் கிடைக்கும் என்று கொள்ள வேண்டும். சனியின் பார்வை காரியங்களை தாமதமாக செய்யும் என்ற விதிமுறைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக நாம் லக்னத்துக்கு 3ஆம் வீட்டின் அதிபதியும், 11ஆம் வீட்டின் அதிபதியையம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த அதிபதிகள் நக்ஷத்திரத்தில் லக்னம் உள்ளதா என்று கவனிக்க லக்னம் ஏறிய சாரத்தை வைத்து தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி அந்த 3/11 அதிபதிகள் சாரத்தில் இருந்தால் உடன் காரியங்கள் நடக்க வாய்ப்புகள் உண்டு. இல்லாவிட்டால் லக்னத்தை இந்த இரண்டு கிரஹங்கள் எங்கு எந்த ராசியில் சந்திக்கும் என்று எடுத்துக் கொண்டு அது வரை லக்னத்தை நாம் நகர்த்த வேண்டும். அது சமயம் காரியம் நிறைவு பெறும். அதாவது நாம் எண்ணிய காரியம் வெற்றியாக முடியும் என்று அர்த்தம் கொள்ள வேண்டும். 3ஆம் வீடு என்பது நமது முயற்சிகள். எதிர்பார்ப்புகள் இவைகளை காட்டும். 11 என்பது அதை லாபகரமாக முடித்து வைக்கும் என்பதை காட்டும்.

- M.G.பாரதி

# ருசகயோகம் பெறும் அமைப்பு

இதுவும் பஞ்ச மகாபுருஷ யோகங்களில் முதன்மையாகப்படுகிறது. செவ்வாய்க்கு மற்றுமொரு பெயர் அங்காரகன் என்பதாகும். செவ்வாய் கிரகம் ஆட்சி அல்லது உச்சமாக நின்று இலக்கனத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ கேந்திரங்களில் அமையப் பெற்று காணப்பட்டால் அவ்வகை அமைப்பை ருசக யோகம் என்றழைக்கிறோம்.

நல்ல பேர், புகழ், தீர்க்காயுள். பண வருவாய், பகைவர்களை வெல்லும் திறமை, உத்தரவுகளைப் பிறப்பிக்கும் பெரிய உத்தியோகங்கள் போன்றவைகள் அமையப் பெறும்.

**உதாரணம் பிறப்பு 20.03.1975 மிருகசீரிடம்**

| | | | |
|---|---|---|---|
| சூரியன் குரு | ல / சுக்கிரன் | சந்திரன் கேது | சனி |
| புதன் | இராசி | | |
| செவ்வாய் | | | |
| | ராகு | | |

**விளக்கம்**

இவர் மதுரையில் கொடுக்கல், வாங்கல், தொழில் செய்து வருகின்றார். திருமணத்திற்கு பொருத்தம் பார்க்க வருகிறபோது ஜாதகத்தைக் காணுகிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பத்தாம் இடமான மகரத்தில் அதுவும் இலக்கனாதிபதி செவ்வாய் உச்சம் பெறுகிற அமைப்பு சிறந்த ருசகயோக அமைப்பாகும். மென்மேலும் வளர்வீர்கள் என்று கூறினேன். படிப்படியாக இன்று வசதி மிக்கவராக காட்சி தருகிறார். இலக்கனத்தில் உள்ள சுக்கிரன் தனது ஏழாவது பார்வையால் தன் வீட்டைத் தானே பார்க்கிற தன்மையால் இல்வாழ்க்கை சிறப்பாக அமைந்துள்ளது எனலாம்.

**பத்ர யோகம் பெறும் அமைப்பு**

இதுவும் பஞ்ச மகா புருஷ யோகங்களில் ஒன்றாக திகழ்கிறது. புதன் ஆட்சி அல்லது உச்சம் பெற்று சந்திரனுக்கு அல்லது இலக்னத்திற்கு கேந்திரத்தில் அமையக்கூடிய அமைப்பைப் பத்ரயோகம் என அழைக்கிறோம்.

சபைகளில் பேசுகிற திறமை, நல்ல பண வருவாய், கணிதத்தில் தேர்ச்சி பெற்ற புலமை, கம்பீரமான மிடுக்கானத் தோற்றம் இவைகளைப் பெற்றிருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந்திரன் சனி ராகு |
| | இராசி | | குரு சுக்கிரன் |
| | | | |
| கேது | செவ்வாய் | | ல / சூரியன் புதன் |

**உதாரணம்**

**சரபோஜி மன்னர் ஜாதகம் பிறப்பு 8.8.1799**

**விளக்கம்**

கன்னி இலக்கனம், மிதுன இராசி, "இவருடைய ஜாதகத்தில் இலக்கன கேந்திரத் திலும், சந்திரனுக்கு கேந்திரத்திலும் புதன் ஆட்சி, உச்சம் பெற்று கன்னியில் வீற்றிருக்கிற பெருமை பத்ரயோகத்தைக் கொண்டு அமை யப் பெற்றுள்ளது. நீண்ட காலம் ஆட்சி செலுத்தி, இசையிலும் புகழ் பெற்றவராக விளங்கினார்.

**சக்கரவர்த்தி யோகம் பெறும் அமைப்பு**

குரு, புதன், சுக்கிரன் ஆகிய சுபர்கள் ஜாதகத்தில் ஆட்சி அல்லது உச்சம் பெற்று அமையப் பெற்றால் "சக்கரவர்த்தி யோகம்" எனப்படுகிறது.

இவ்வகை யோகம் அமையப் பெற்றவர்கள் உயர்வான அந்தஸ்து, அமைச்சர் பதவி போன்ற வைகளைப் பெற ஏதுவாகிறது. இந்த யோகம் அமையப் பெற்றவர்கள் மக்கள் மத்தியில் புகழ் பெற்ற அரசியல் தலைவராக திகழ்வர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | | சுக்கிரன் | சூரியன் புதன் |
| | இராசி | | ல / குரு |
| | | | செவ்வாய் |
| சனி | | சந்திரன் | கேது |

**உதாரணம்**

முன்னாள் பிரதம் V.P. சிங் அவர்களின் ஜாதகம் பிறப்பு 25.6.1931

**விளக்கம்**

கடக இலக்கனம், துலாம் இராசி, இவர் ஜாத கத்தில் அரச கிரகங்களான குரு, சுக்கிரன், புதன் மூவரும் பலம் பெற்றுள்ளனர். புதன் மிதுனத்தில் ஆட்சியாகவும், சுக்கிரன் ரிஷபத்தில் ஆட்சியா கவும், குரு கடகத்தில் உச்சமாகவும் விளங்கி பலம் பெறுகிறது. இவ்வாறாக சக்கரவர்த்தி யோகம் அமையப் பெறுகிறது. உபி மாநிலத்தில் அமைச்ச ராக வாழ்வு தொடங்கி. மத்திய அமைச்சர் பதவி, இந்தியாவின் பிரதமராகவும் திகழ முடிந்தது.

**பூமி பாக்ய யோகம் பெறும் அமைப்பு**

ஒருவருக்கு பூமி பாக்ய யோகம் உண்டாக ஜாதகத்தில் நான்கு, ஒன்பதாம் வீடுகளுக்குரிய கிரகங்கள் நீசம் அடையாமல், ஆறு, எட்டு, பன்னி ரண்டு ஆகிய மறைவு ஸ்தானங்களில் மறையாமல், பாபர்களின் சேர்க்கை அல்லது பார்வை பெறாமல், ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஏழு. ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய ஸ்தானங்களில் வலுப் பெறுதல் வேண்டும்.

**விபரீத இராஜயோகம் பெறும் அமைப்பு**

மனித வாழ்வில் ஜோதிட நுணுக்கங் கள் தெரியாதவர்கள் கூட விபரீத இராஜ யோகத்தைப் பற்றி அறிந்து. தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஜோதிட சாஸ் திரத்தில் இது முக்கியமான யோகமாக அமையப் பெறுகின்றது. பொதுவில் இந்த யோகத்தைப் பற்றிய அதிர்ச்சியும், ஆச்சரி யமும் உண்டாவதை நாம் காண முடியும். சாதாரண நிலையில், சாலை ஓரங்களில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு இருப்பான். உணவு உட்கொள்ள, ஆடை களை போட்டுக் கொள்ள சிரமப்பட்டு வருகிறவன் திடீரென இலட்சாதிபதியாக, கோடீஸ்வரனாக ஆகி விடுவான். அப்படிப்பட்ட ஜாதகருக்கு கண்டிப்பாக "விபரீத இராஜயோகம்" அமையப் பெற்ற இருக்கும். பத்து ரூபாய் லொத் தர் சீட்டு வாங்கி முதற்பரிசு கோடி ரூபாயைப் பெறுகிறவர்களையும் நாம் காண்கிறோம். புதையல் போன்றவைகள் கிடைக்கப் பெறுகிற மனிதர்களையும் நாம் காண்கிறோம். சீட்டாட்டம் ஆடுகிற வர்கள், ரேஸ் பிரியர்களுக்கு திடீரென பணம் குவிகிறது. இவ்வகை அமைப்புகள் எல்லாம் விபரீத இராஜயோகம் உள்ளவர் களுக்கே அமையும்.

ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்கள் மறைவு ஸ்தானமாகவும், அசுப ஸ்தானமாகவும் ஜோதிட சாஸ்திரத்தில் கருதப்படுகிறது. இந்த வீட்டிற்கு அதிபதி கள் கெட்டு பகைப் பெற்று மீண்டும் கெட்ட வீடுகளான அசுப ஸ்தானமெனும் பன்னிரண்டு, எட்டு, ஆறு போன்ற இடங் களில் அமையப் பெற்றால் "விபரீத இராஜ யோகம்" உண்டாகிறது.

— கச்சனம் நடராஜன்

## கண்ணனின் கருத்தில் கலியுகம்!

கலியுகத்தில் மனிதர்கள் பணம், பொருள், பதவி என்று எல்லாவற்றையும் அடைய வேண்டும் என்று வெறியுடன் அலைவார்கள். துறவிகள் கூடத் தவறுகள் செய்வார்கள். பெற்றோர்களை மதிக்க மாட்டார்கள். சொத்துக் கிடைக்க வேண்டும் என்பதற்காக உறவினர்களைக் கூட கொல்லத் தயங்க மாட்டார்கள். "ஒருவருக்கொருவர் கெடுதல் செய்து கொள்வார்கள்" என்று கூறுகிறார் கண்ணன்





# துலாம்

தனக்கு ஒரு சிரமமென்றாலும் அதை எளிமையாக செயல்படுத்தும் துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு ஜாதகமாக இருந்தாலும் மறைவு ஸ்தானாதிபதியாக இருப்பதால் சம பலன்களை தருவார். பொருளா தாரத்திலும் சில பாதிப்புகளை தரும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களில் பலர் நற்செயலை செய்து பலன் பெறுவீர்கள். காரிய தடைகள் நீங்கி நல்ல பலனையும் சாதனையும் பெறுவீர்கள். பணியின் புதிய கண்டுபிடிப்பு உங்களுக்கு மகிழ்ச்சியை தரும். பொருளாதாரம் சிறக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உரிய ஆலோசனைகளை சொல்லி சரி செய்வீர்கள். அமைதியை விரும்புவீர்கள். சமாதான பேச்சுக்கு நல்ல பலன் கிட்டும். இழந்ததை பெற உதவிகளை செய்வீர்கள். பணப்புழக்கம் இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் எதிர் பார்த்த அளவு பலன்கள் கிடைக்கா விட்டாலும் கொடுக்கல் வாங்கலில் நீங்கள் நாணயமிக்கவராக இருப்பீர்கள். கடல் சார்ந்த உணவு பண்டங்கள் வியாபாரம் நன்றாக இருக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் ஒற்றுமைக்காக பாடுபடுவீர்கள். மின்சாதன வசதிகளும், ஒலி தனி அமைப்புகளும் சிறப்பாக செய்து பாராட்டுகளை பெறுவீர்கள். வங்கி கடன் வசதிகள் கிடைக்கும். பொருளாதாரத்தில் நன்மை உண்டாகும்.

### பெண்களுக்கு

திறமையான பெண்கள் வேலை வாய்ப்பையும் திருமண வாயப்பையும் பெறுவார்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் உண்டாகும். பொருளாதார நன்மைகள் கிட்டும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். வாகன சம்மந்தப்பட்ட கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சிலருக்கு விமான கல்வி பயிலும் வாய்ப்பும் கிட்டும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

01.10.2015 வியாழன் அதிகாலை 05.16 முதல் 03.10.2015 சனி இரவு 01.41 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்**

சின்ன சின்ன ஆசைகளை வளர்த்துக் கொள்ளும் உங்களுக்கு எதிர்பார்த்த சுபநிகழ்ச்சி கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும்.

**சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

சிறந்த கலைஞர்களை உருவாக்குவீர்கள். உங்களின் எண்ணம் போல செயல்படும் புத்திரர்களை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பழைய நண்பனின் தொடர்பு மனமகிழ்ச்சியை தரும். உறுதியான செயல்களில் ஈடுபாடு கொள்வீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** ஆரஞ்சு, வெண்மை, இளம் மஞ்சள்


**அதிர்ஷ்ட திசைகள்** மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** வெள்ளி, வியாழன், திங்கள்

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

மாரியம்மன் மற்றும் பெண் தேவதைகளை வணங்கி குங்குமத்தால் அபிசேகம் செய்து பழம் நைவேத்தியம் செய்து வர தடைகள் நீங்கி நன்மை பெறுவீர்கள்.

### நிர்மால்ய சக்திகொண்டவை மாலைகள்



ஆலயங்களில் வீற்றிருந்து அருள் பாலித்து வரும் தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மலர்மாலைகள் சக்தி கொண்டவை . சில விசேஷ "மால்யம்" எனில் மலமுடையது. அழுக் குடையது. தூய்மையற்றது என்று அர்த்தம. "நிர்மால்யம்" எனில் மல மற்றது. தூய்மையானது, மாசு நீங்கியது எனப் பொருள்படுகிறது.



# பெற்றோர் கடவுளின் பிரதிநிதிகள்



தாய், தந்தையைப் பேணுவதுதான் ஒரு மனிதனின் முழு முதற்கடமை. "தந்தை தாய்ப் பேண்" "நன்றி மறவேல்" என்ற நன்னெறிகள் இதையே விளக்குகின்றன.

தாய், தந்தை இல்லையென்றால் நாம் இந்த உலகத்துக்கு வந்திருக்க முடியுமா?

எவனொருவன் தன்னுடைய தாய் தந்தையரைப் போற்றாமல் எவ்வளவு தான் ஆலயங்களில் தான, தர்மங்கள் செய்தாலும் அது பயன் தராது. கடவுளின் பிரதிநிதிகள் தானே தாய் தந்தையர்.

"முதியோர் இல்லம்" என்பது தற்காலத்தில் பெருகி வருவதைக் கண்டு மிகுந்த வேதனையடைய வேண்டியுள்ளது. தற்போது பரவிவரும் பன்றிக் காய்ச்சலைவிட மிகக் கொடுமையானது இது. மிருகங்கள் கூட, தங்கள் குடும்பம் என்ற பந்த பாசங்களினால் இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க வேண்டிய மனிதன் தான் தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சரி, உயிரோடு இருக்கும் போது, பார்த்துக் கொள்ளாதவர்கள், இறந்த பிறகு ஏன் கிரியைகளைச் செய்ய வேண்டும். அவர்கள் தான் இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டனரே. பிறகு என்ன செய்து என்ன பயன்" என்றும் கூட சிலர் கேள்வி எழுப்பலாம். சாஸ்திரம் நம் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இங்கு மட்டும் வரையறுக்கவில்லை. நமக்கும் நம் பெற்றோர்களுக்கும் உரிய சம்பந்தம் நமது உடல் உள்ளவரை செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகிறது.

எப்படி முதல் தேர்வில் சரியாக எழுதவில்லையென்றால் மறு தேர்வில் நன்றாக எழுத நமக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறதோ, பிள்ளைகள் தாங்கள் செய்த தவறை உணர்ந்து வருந்தி பெற்றோர்களிடம் மனமுருகி பிரார்த்தித்தார்களானால், கண்டிப்பாக அவர்களும் குழ்தையை மன்னித்து ஆசிர்வாதிப்பார்கள்.



# கேசரி வித்யா


## மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி

பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த பரந்த பூ உலகின் நிலப் பரப்பு அனைத்தும் ஒரு காலத்தில் மனிதர்கள் வாழவே தகுதியற்ற அடர்ந்த காடு களாகவும், மலைகளாகவும், கரடுமுரடான சம வெளி பிரதேசங்களாவும் இருந்தது. ஆனால் காலப்போக்கில் பல பிரமிக்கத்தக்க மாற்றங்கள் மக்களின் கடின உழைப்பால் உண்டாக்கப்பட்டது. பல நாடுகள், பல தேசங்கள், பல இன, நிற, மொழி, மதம் என பல்வேறு வேற்றுமைகள் நிறைந்த கோடிக் கணக்கான மக்கள் இப்பூமியில் வசித்து வருகின்றார்கள். இன்றைய விண்ணை முட்டும் கட்டி டங்கள், அடுக்கு மாடி வீடுகள், அழகான மாட மாளிகை வீடுகள், இயந்திரங்கள், தொழிற் சாலைகள், வர்த்தக வியாபார நிறுவனங்கள் என அதிநவீன கால நகரங்கள் மனிதனின் நவ நாகரீக வாழ்க்கையை வியக்கும் வண்ணம் மாற்றி அமைத்துள்ளது. அதன் வளர்ச்சி அசுர சுதியில் வளர்ந்து வருகிறது. எவ்வாறு இந்த அதிசய தக்க மாற்றங்கள் எல்லாம் நிகழ்ந்தது? எதன் மூலம் மக்கள் பரிணாம வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டு மேன்மையை பெற்றார்கள்? எப்படி இந்த மாயா ஜாலம் நடந்தது? இந்த கேள்விகளுக்கு எல்லாம் விடை காண ஆவலாக உள்ளதா? வாருங்கள் இதன் அடிப்படையாக இருக்கும் சில விடயங்களை சிந்திக்கலாம்.

### மாற்றங்களை உண்டாக்கியது எது?

மனிதனை மற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தி காட்டுவது எது என்கிற கேள்விக் கான விடையை முதல் அத்தியாயத்தில் விவரமாக பார்தோம். மனித இனத்திற்கே மணிமகுடம் போல் அவனை சுற்றி அலங்கரித்து கொண்டி ருப்பது எது? எதன் மூலம் எழுத்து, மொழி, நாகரிகம், கலை, பண்பாடு போன்றவைகள் தோன்றி அவனை நவ நாகரிகத்தின் உச்சியில் வைத்து அழகு பார்ப்பது எது? அதுமட்டுமல்லாமல் மனிதனுடைய ஆன்மிக வளர்ச்சிக்கும், தெய்வீக ஆற்றல் பெறவும், இயற்கையையே அடக்கி ஆளும் வலியை பெறவும், மீண்டும் தான் இழந்து போன சர்வ சுதந்திர நிலையை பெறுவதற்கும் அவனு டைய நல்வரவுக்காகவே திறந்து வைக்கப்பட்டுள்ள தேவலோக வாயில் கதவு எது தெரியுமா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

அது நம்முயைட சர்வ சக்தி ஆற்றல் படைத்த "பேச்சு" ஆகும். மிகவும் சர்வ சாதாரணமாக நம்மிடம் நிகழ்ந்து கொண்டிருக்கும் பேச்சுக்கு இவ்வளவு மகிமை உள்ளதா என ஆச்சரியப்படுகின்றீர்களா? ஆம் அது தான் உண்மை. அதுவே சத்தியமான வாக்கு ஆகும். யோகத்தைப்பற்றி இது வரை எத்தனையே இலட்சக் கணக்கான புத்தகங்கள் இதுவரை வெளிவந் துள்ளன. ஆனால் அதில் எல்லாம் வலியுறுத்தி சொல்லப்படாத விடயம் தேடினாலும் காணப் படாத விடயம் முதன் முறை யாக அமரகவி




சித்தேஸ்வரால் மிகவும் விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. பேச்சைபற்றி நிஜானந்த போத நூலில் விவரிக்கும் போது "சொல் ஒன்றே இயற்கையை வீழ்த்தும்" என குறிக்கின்றார். எனவே, இயற்கையை அடக்கி வைக்கும் வலிமை பேச்சுக்கு மட்டும் தான் உண்டு.



### பேச்சில் அடங்கியுள்ள நிலைகள்

மனிதனுடைய பேச்சில் பல நிலைகள் அடங்கி உள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் ஒன்றுமே தெரியாதது போல் இருக்கும். அதனை ஆழ்ந்து சிந்திக்கும் போதுதான் அதில் அடங்கி உள்ள நிலைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். பேச்சு, சொல், குரல், வார்த்தை, வாக்கு, எதிரொலி என பல நிலைகளை தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

மனிதனுடைய பேச்சிலிருந்த பிறந்தது "சொல்". அதிலிருந்து "வார்த்தை, எழுத்து, மொழி, மதம், ஜாதி, நாகரிகம்" என பலவாறு விரிந்தது மனிதனின் விந்தை உலகம். தன்னுள் உதயமாகும் எண்ணங்களை வார்த்தைகளாக்கி அதை அடுத்தவர்களிடம் தன் உணர்வுகளாக வெளிப்படுத்தியும், பகிர்ந்து கொண்டு வாழவும் கற்றுக் கொண்டவன் அவன். எனவே, மனித இனம் பேச்சில் ஆற்றலை படிப்படியாக வளர்த்துக் கொண்டு முன்னேற்றம் கண்டு வந்துள்ளது. இந்த நவநாகரிக உலகில் இவ்வளவு நவீன வசதிகள் படைத்திருந்தாலும் இன்னும்எழுதவோ,அடிக்கவோ தெரியாத சிலகோடி மக்களும் இந்த அகிலத்தில் வாழ்ந்து கொண்டுதான் உள்ளார்கள். அவர்கள் எந்த நம்பிக்கையை அடிப் படையாக வைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள்? அவர்கள் வெறும் "பேச்சை" மட்டுமே நம்பிக் கொண்டு வாழ்கின்றார்கள்.



மனிதனாக வாழ நன்கு பேச தெரிந்தால் போதுமானதே. அதை வைத்துக் கொண்டே சிலர் உலகத்தையும் வென்றிருக்கின்றார்கள், ஆண்டிருக்கின்றார்கள், ஆட்டியும் படைத்துள்ளார்கள். இந்த உலகில் வேகமாக வும் அதி விரை வாகவும் பரவு வது எது தெரியுமா? ஒரு சிலர் வைரஸ் என்னும் கிருமி என்பார்கள். இன்னும் சிலர் வேறு காரணங்களை கூறுவார்கள். அதெல்லாம் தவறு. தொன்றுதொட்டு காலம் முதல் இன்றைய நவீன விஞ்ஞான காலம் வரை மனிதனின் "சொல்" ஒன்று தான் இவ்வுலகில் அதிவிரைவாக பரவ உள்ளது. காற்றைவிட வேகமாக பரவுவது அதுதான். "பகலில் பக்கம் பார்த்து பேசு இரவில் அதுவும் பேசுதே," "இருட்டுக்கும் காற்றுக்கும் காதும் உண்டு" என்பார்களே அதெல்லாம் பேச்சை குறிக்கும் சொல் வழக்கமாகும்.

ஒரு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள் மனிதனிடம் பேசும் சக்தி மட்டும் இல்லாமல் போய் இருந்தால் அவனுடைய இந்த உலகம் எப்படி இருந்தி ருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். பேச்சின் ஆற்றல் இல்லாமல் தற்கால உலகத்தில் காணப்படும் மனிதனின் பரிணாம வளர்ச்சியைத்தான் நாம் கண்டிருக்க முடியுமா? அல்லது விஞ்ஞான புரட்சி, தகவல் புரட்சி, விண்ணுலக ஆதிக்க புரட்சி என எட்டித்தான் பிடித்திருக்க முடியுமா? நிச்சயம் முடியாது. பின் எப்படி இருந்திருக்கும் மனித இனம். அந்த நிலையை ஒரு வினாடி எண்ணிப் பார்க்கவே மிகவும் கடினமாக உள்ளது. அவன் காட்டில் வாழும் மிருகங்களைப் போல் ஊமைகளாக சுற்றி திரிய வேண்டி இருக்கும். பேசும் திறமை அவனிடம் இல்லாமல் பேய் இருந்தால், அவன் மனிதனாக உருவத்தில் இருந்தாலும், வன விலங்குகளைப் போல் இருண்ட வாழ்க்கையை வாழும் காட்டு மிராண்டிகளின் நிலையிலேயே வாழ்ந்து வந்திருப் பான் என்பதைமட்டும் உறுதியாகக் கூறலாம்.

ஸ்ரீ வித்தையின் "கேசரி வித்யா மார்க்கம்" மனிதனுடைய பேச்சை மொத்தம் நான்கு நிலைகளாக பிரித்துள்ளது. அதில் ஒரு நிலைதான் வெளியே சொல்லாக மலர்ந்துள்ளது. அதன் மற்ற மூன்று நிலைகளும் அதன் உள்ளேயே அடங்கி உள்ளது. பேச்சின் முதல் மூன்று நிலைகளும் எண்ணத்துள்ளேயே புதைந்துள்ளது. பேச்சின் நான்காம் நிலைவதான் அதி சூட்சுமம், எல்லாவற்றிற்கும் மணிமகுடம் சூட்டுவது அதுவே. ஆகும்.

– பிரபோதரன் சுகுமார்

# நோய் தீரவும் மனமே காரணம்

மனித மனம்தான் மனிதனை இயக்கி செல்கிறது என்பதை யாவரும் அறிவோம். இயக்கம் பெற்ற மனிதன் சிந்திக்கிறான். செயல்பட ஆரம்பிக்கிறான். செயல்படுகின்ற பொழுது, சிந்திக்கிறான் அனுபவத்தை அது காட்சிகளாகவும் இருக்கலாம், விளைவுகளாகவும் இருக்கலாம். இனி விளைவு் என்று கூறுகின்ற பொழுது, அவைகளில் சில நன்மைகளாகவும், பல தீமைகளாகவும் அனுபவத்தை தந்து விடுகிறது. அப்பொழுதுதான். அந்த மனித மனம் செயல்பட ஆரம்பித்து. மனம் இந்த இறுதி விளைவை ஏற்றுக் கொள்கின்ற போது இன்பத்தையும் அனுபவிக்கின்றது. துன்பத்திலும் துவண்டு விடுகிறது.

இப்படி காட்சிகள் ஏற்பட்டுக் கொண்டு செல்கின்ற நிலையில், மனிதன் தத்தம் மனதை எப்படி பாதுகாக்க வேண்டும், பரிபாலிக்க வேண்டும், பக்குவமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விடயங்களில் மாத்திரம் கவனம் செலுத்த தவறிவிடுகிறோம் அல்லது பலமிழந்த நிலையில் இருக்கிறோம். ஆகவே தான், நமது உடல் நலம் என்ற நிலையிலும் கூட, நமது உடல் உறுப்புகளை சரிவர இயக்கிச் செல்வதற்கு நமது மனமே ஒரு காரணமாயிருக்கிறது.



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல் வம்" என்று ஞானிகள் கூறினார்கள். இந்த செல்வத்தை இன்று எங்கு போய் தேடு வேன் என்ற நிலைதானே? சுழலுகின்ற சுற்றுப்புற சூழ்நிலையில், விஞ்ஞான நீரோட்டத்தில் இயக்கம் பெறும் இந்த கலியுகத்தில், அவரவர் முந்திக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டும், முறைத்துக் கொண்டும் சிதறிய சிந்தனைகளோடு செயல்பட எண்ணும் பொழுது ஏறுக்கு மாறான விளைவுகளை அது தந்து விடுவதால் அப்பொழுதே அவரவர் உடல் பாதிப்பை அடைந்து விடுகிறது.

உடல் இயக்கம் என்பது தசைகளினாலும் எலும்புகளினாலும் மாத்திரம் அல்ல. சீரான இயக்கத்திற்கு அத்தனை சுரப்பிகளும் சரிவர இயக்கம் பெற வேண்டும். திரவம் திரவ ரூபத்தில்தான் இருக்க வேண்டும். உடம்பில் உஷ்ணம் சமசீரான நிலையில்தான் இருக்க வேண்டும். இப்படி இயக்கம் பெறுவதற்கு ஆகாரம் மாத்திரம் இருந்தால் போதாது. இந்த ஆகாரம் ஆங்காங்கு பல மாறுதல்களை சந்தித்து உடம்பிற்கு ஊட்டசத்து தந்து விட சுரப்பிகள் இயங்க வேண்டும். இந்த சுரப்பிகளை இயக்குவதற்கு மென்மையான, மகிழ்ச்சிகரமான ஓர் மனம் வேண்டும். நோயை தீர்ப்பதற்கும் மனம் ஒரு காரணமாகிறது.

நோய்கள், பாரம்பரிய நோய்களாகவும் பழக்க வழக்க நோய்களாகவும் உடல் கூறு இயற்கை நிலை நோய்களாகவும் பகுத்துப் பார்க்கப்படுகின்ற நிலையில் தற்காலத்தில் தோன்றுகின்ற பெருவாரியான நோய்கள், பழக்கவழக்கம் காரணமாகத்தான் நம்மை பற்றிக் கொள்கின்றன. இந்த பழக்க வழக்கம் என்பதற்கே மனம் தான் ஆதிகாரணமாகிவிடுகிறது.

அவரவர் பெற்ற பிறப்பின் ஜாதக வாயிலாக கிரகாச்சாரங்கள் அவரவர் மனதை, அப்படியும் இப்படியும் அசையச் செய்யும் பொழுது அந்தந்த மனங்கள் சோர்வும் அடைந்து விடுகிறது. சோக நிலைக்கும் இட்டுச் செல்கிறது சுறுசுறுப்புக்கும் எடுத்துச் சென்று விடுகிறது. சகிப்பு தன்மையை இழந்த நிலைக்கும், ஆத்திரத்திற்கும் ஆவேசத்திற்கும் கொண்டு சென்று விடுகிறது. வெறுப்புணர்ச்சிக்கும், விரக்தி நிலைக்கும் கொண்டு




சென்று விடுகிறது. இப்படியெல்லாம், மனம் பாடுகின்ற பாடு, அந்த மனிதனை படுத்துகின்ற பாடாக ஆகிவிடும் பொழுதுதான். அவரவர் உடம்பில் ஆங்காங்கு இயக்கம் சரிவர இல்லை. ஆகவேதான். அவன் நோயாளி ஆகிவிடுகிறான். இப்படிப்பட்ட இந்த நோயாளியின் நோய்தான் என்ன? மருத்துவத்துறைக்கு இதுதான் சிக்கலான பிரச்சினை நோய்களின் பட்டியல் எத்தனையோ இருப்பினும் இவனுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த நோயை அந்த பட்டியலில் எப்படி கண்டறிவது? இதுவும் ஒரு சிக்கலான பிரச்சினைதான்.

ஆகவேதான் நவீன மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் இந்த நோய்களின் நிலையை ஆந்திரிக காரணத்தை நோயின் தோற்றத்திலிருந்து மாத்திரம் கண்டு கொள்வது சாத்தியம் இல்லை என்றும், மாறாக நோயாளியின் மனநிலை மன இயக்கம் அவனுடைய கிரகாச்சாரத்தால் இவ்வாறெல்லாம் இயக்கப்படக் காரணமாயிருக்கிறது என்றும் கண்டு கொள்ள ஆர்வம் கொண்டு விட்டார்கள். இந்த நிலையில் பலப்பல ஆய்வுகள் வெளிப் படுத்துகின்ற உண்மைகளின்படி நோய்களை தோற்றுவிப்பதும் மனித மனம் தான் தீர்த்து வைக்கவும் அந்தமனதால்தான் கூடும் என்றும் ஏற்றுக்கொள்கின்ற நிலைக்கு இன்று வந்து விட்டார்கள், ஆகவே தான்...

**"தீராத நோயைக்கூட**
**தீர்த்து விட்டாயே மனமே!"**

**என்று உண்மைப் பொருளை அறிந்து நலமடைவோமாக.**

**— மிராண்டா**



# ஆஞ்சநேயர் தியானம்

இராமாயணத்தில் அனுமன் செய்த சாதனைகளை நாம் அறிவோம். அவன் சொல்லின் செல்வன், சுந்தரன், பலமிக்கவன். எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவன். ஆகையால் எந்தக் காரியத்தைச் செய்ய புகுமுன் அனுமனைத் துதித்து அதன் பிறகு செய்தால் வெற்றி நிச்சயம். ஆஞ்சநேயர் த்யானம் கீழேத் தரப்பட்டுள்ளது.

*அஞ்சனா நந்தனம் வீரம்*
*ஜானகீ சோக நாஸனம்!*
*கபீஸ் மக்ஷஹன் தாரம்*
*வந்தே லங்கா பயங்கரம்!*
*மனோஜவப் மாருத துல்ய வேகம்*
*ஜிதேந்திரியம் புத்திமதாம் வரிஷ்டம்!*
*வாதாத்மஜம் வானரயூத முக்யம்*
*ஶ்ரீராம தூதம் ஸிரஸா நமாமி!*
*உள்ளங்கய ஸிந்த்தோ ஸலிலம் ஸலிலம்*
*யஸ்ஸோக வஹ்னிம் ஜனகாத்ம ஜாயா*
*ஆதாயதே நைவ ததாஹ லங்காம்*
*நாமாமிதம் ப்ராஞ்ஜலி ராஞ்ஜ நேயம்!*
*ஆஞ்சநேய மதிபாடவானனம்*
*காஞ்சனாத்ரி கமநீய விக்ரஹம்!*
*பாரிஜாத தருமூல வாஸினம்*
*பாவயாமி பவமான ந்நதனம்!*
*யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்*
*தத்ர தத்ர த்ருஹ மஹ்தா காஞ்சலிம்!*
*பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்*
*மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்!*

# பிரமிடு தியானம்




பிரமிடுகள் தியானத்துக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கும், அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தும், மேலும் பலவிதமான சக்திகளையும் பிரமிடு தியானம் கொடுக்கும். பிரமிடில் தியானம் செய்யும் போது தெரிநிலை (Awareness) அதிகரித்து, மனம் அமைதி பெறுகிறது. மனித மனத்துக்கு அமைதி உண்டாகவும் மேலான இறைநிலை வாழ்க்கை வாழவும், ரிஷிகளும், முனிவர்களும் ஞானதிருஷ்டியில் உருவாக்கியது தான் தியானம், யோகா போன்றவை. இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. தியானம், யோகா போன்ற கலைகள் வேதகால நடைமுறைகள் என்றும், துறவிகளுக்கான வாழ்க்கை முறை என்ற நிலை மாறி விட்டது. இந்த உன்னதமான கலைகள் நவீன மக்களுக்குரிய வாழ்க்கைக் கலையாக மாறியிருக்கிறது. உலகெங்கும் இந்தக் கலைகள் கல்வி முறையாக வளர்ச்சி அடைந்துள்ளது. மன அமைதி, ஆரோக்கியம் ஆகியவற்றை உருவாக்கும் பயிற்சியாக விளங்குகிறது.

தியானம் உடல், மனம், ஆன்மா மூன்றையும் மேம்படுத்தும் நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள முடியும். ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்துகொள்ள, வாழ்க்கையின் நோக்கத்தை அறிய, உயர்ந்த பண்புகளைப் பெற தியானம் அவசியமானதாகும். மனிதன் என்பவன் மனம் சார்ந்த சக்தியை மேம்படுத்துவதோடு, அதற்கும் மேலாக இதயசுத்தியோடு வாழவேண்டும். அப்போதுதான் முழு மனிதனாக மாற முடியும். இத்தகைய தியான முறையை முழுமையாக அடையச் சிறந்த வழி தான் "பிரமிடு தியானம்". காலை, மாலை நேரம் கிடைக்கும் போதெல்லாம் தியானத்தில் அமரலாம். தியானத்தில் உட்காரும் போது வடக்கு நோக்கி அமர்ந்து தலையில் "6" உயர தாமிர பிரமிடை வைத்துக் கொண்டால் தியானநிலை கிட்டும். விரைவில் மனம் ஆழ்ந்த நிலைக்குச் செல்லும். இட வசதி இருப்போர் "6" அடி உயரத்திற்கு பிரமிடுகள் செய்து உள்ளேயே உட்கார்ந்து தியானம் செய்யலாம். பிரமிடுகள் இகலோகத்தையும், ஞான உலகத்தையும் இணைக்கின்ற பாலமாகத் திகழ்கின்றன. எதிர்காலம் பற்றிய தெளிவான கணிப்புகளை இதன் உள்ளே தியானிக்கிறவர் பெற முடியும். பிரமிடின் கோணங்கள் அமைதியையும், ஆற்றலையும் குறிக்கின்றன.எனவே பிரமிடு தியானம் ஒவ்வொருவருக்கும் புது அனுபவத்தைக் கொடுக்கும். முற்காலத்தில் மனிதன் உடல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டான். உணவு, உடை, இருப்பிடம் மற்றும் பொருள் தேவைகளை வாழ்க்கைக்கு வேண்டிய மட்டும் பயன்படுத்திக் கொண்டான். ஆனாலும் மனம் அமைதியடையவில்லை. வேறு ஏதோ என்று உடலுக்கு அப்பாற்பட்டு மனத்திற்கு தேவைப்பட்டது. மனம்சார்ந்த தேவைகள் இருப்பதை உணர்ந்து கொண்டான். எனவே மனத்தை செம்மைப்படுத்த தேடுதலில் இறங்கினான். மனத்தை ஒருநிலைப்படுத்தினால் உடல், மனம் இரண்டும் அமைதி பெறுவதோடு, ஆழ்மனம் ஒன்றும் வேலை செய்வதைக் கண்டு கொண்டான். ஆகவே தன்னைப் பற்றி



அறியும் புதுமையான முயற்சி தொடங்கியது. மனோசக்தி மிகுந்த ஆற்றல் வாய்ந்தது என்பதையும் காலப்போக்கில் உணர்ந்து கொண்டான். இதன்பிறகு தான் தியானம் என்கிற படிநிலைகள் உருவாக ஆரம்பித்தன.



தியானம் ஒரு கிளர்ச்சியூட்டும் அனுபவம். நீங்கள் முழுமையான தியான நிலையில் இருக்கும் போது எதையும் செய்யாமல் அப்படியே இருக்கிறீர்கள். சிந்தனைகள், உணர்ச்சிகள் ஏதும் அற்ற நிலை அது இந்த நிலையில்தான் முழுமையான உவகை நிலை தோன்றும் தூங்கிய நிலையிலும் விழிப்புணர்வோடு இருத்தலே தியானம். நீங்கள் எதையும் செய்யாமல் முழுவதும் தணிவற்ற நிலையில் ஒரு விநாடி உங்கள் மையத்தில் (அகம்நோக்கி) இருக்க முடிந்தால் அதுவே தியானம்தான். தொடர்ந்து மையத்திலேயே இருந்து கொண்டு எந்தச் செயலையும் செய்து வரலாம். உங்கள் எல்லாச் செயல்களையும் செய்யவும் முடியும். அந்த நிலையில் சிக்கலான காரியங்கள் எதையும் உங்களால் எளிதில் செய்ய இயலும். தியானம் செயலுக்கு மாறானதல்ல. அது வாழ்க்கையோடு இணைந்தது தான். விலகிச் செல்வது அல்ல. விழிப்புணர்வோடு நீங்கள் செய்கிற எல்லாச் செயல்களும் தியானமாகிவிடும். தியானத்தின் மூலம் புற உலகையே பார்த்துக் கொண்டிருந்தவர் முதன் முறையாக தன்னுள் பார்வையைத் திருப்பும் நிலை உண்டாகிறது. அப்போது காண்பரே காணப் படுகிறவராகவும் இருக்கிறார்.

தியானம் என்பது ஒரு பயிற்சி அல்ல. அது ஒரு தீவிர முயற்சி. ஆழ்ந்த உறக்கத்துக்கும் அப்பால் ஒரு விழிப்புணர்வோடு இருப்பீர்கள். அதுவே தியானம். ஒவ்வொரு செயலும் ஒரு விளைவை உண்டாக்கும் என்று பௌதிகம் கூறுகிறது. தியானம் செய்யும் போதும் நுண்ணிய அதிர்வுகள் உண்டாகின்றன. எனவே தியானம் செய்வதற்கென்று ஒரு தனி அறையை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அந்த இடத்தில் தியானித் தால் அது முழுமையான தியானத்தன்மை கொண்ட தாகிவிடும்.

தினமும் தியானிக்கிற போது அது உங்களுடைய அதிர்வுகளை (Vibration) உறிஞ்சும். மறுநாள் நீங்கள் வந்து தியானிக்கும் போது அந்த அதிர்வுகள் உங்கள் மீதே திரும்பவும் வரும். அந்த அதிர்வுகள் உங்கள் மீது தொடர்ந்து வந்து விழும். அவை உடலுக்கு மிகவும் அனுகூலம் அளிக்கும். தியானத்தின் ஆழ்நிலைக்குச் செல்லவும் துணைபுரியும். இதன் மூலம் நீங்கள் செய்யும் செயல் உங்களுக்கு எதிர்வினையாக, நல்ல விளைவுகளை திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்கள்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கை முறையை தனக்கென அமைத்துக் கொள்ள முடியும். செக்கு மாடுகளைப் போல கட்டுப்பாடுகளையும், சமுதாயத்தை அப்படியே போலியாகப் பின் பற்றி வாழும் போலிவாழ்க்கையை ஒருவர் தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம் அல்லது பிரபஞ்சமே எல்லையாக பரந்து திரியும் பறவையைப் போல, விடுதலை பெற்ற வாழ்க்கையும் வாழலாம். ஏராளமான தடைக்கற்கள் கண்ணுக்கு புலனாகாமல் நம்மை சுற்றியிருக்கின்றன. நாம் அறியாமலேயே அவற்றில் தடுக்கி விழுந்து கொண்டேயிருக்கிறோம். ஆனாலும் விழிப்புநிலை பற்றி நாம் சிந்திப்பதே யில்லை. எத்தகைய வாழ்கை தேவை என்பது அவரவர் மனம், மற்றும் விருப்பத்தைப் பொறுத் தது. ஆனால் துரதிஷ்டவசமாக முதலாம் வழி யையே, உடல்சார்ந்த, அகம் நோக்கிய தேடல் இல்லாத வாழ்க்கையையே பெரும்பாலோர் விரும் புகின்றனர்.

— வேல்முருகன்

## மந்திர ஜெபத்தை தொடருங்கள்!

மனம் ஒருமைப்படாவிட்டாலும் மந்திர ஜபத்தை விடவேண்டிய அவசியமில்லை! உங்கள் கடமையை நீங்கள் செய்து கொண்டேயிருங்கள். தொடர்ந்து இறைவனது நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தால் காற்றில் இல்லாத இடத்தில் உள்ள விளக்கின் சுடரைப்போல் மனம் தானாகவே ஒருமைப்பட்டு விடும். காற்றே சுடரை ஆடச் செய்கிறது. அதுபோல் நம்மிடம் ஆசைகளும் சங்கல்பங்களுமே மனதை அமைதியற்றதாக ஆக்குகின்றன.

–அன்னைசாரதாதேவி.



உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பரிகார விருட்சமாக குறும்பலா மரம் விளங்குகிறது. நாம் ஏற்கனவே பார்த்த பலாமரத்தின் அனைத்து மருத்துவ குணங்களும், பலன்களும் இந்த குறும் பலாமரத்திற்கு உண்டு. பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பலா மரம் எப்படி பரிகார விருட்சமாக இருந்ததோ அதே போல் தான் குறும்பலாவும் சில கோவில்களில் தலவிருட்சமாக உள்ளது.

### திருத்தலங்கள்

பலாமரம், குறும்பலா மரம் என்று அழைக்கப்படும் பலாமரம் சென்னை கோயம்பேடு அருகே உள்ள குற்றாலீஸ்வரர் திருக்கோவிலின் தலவிருட்சமாக உள்ளது.

சுயம்பு மூர்த்தியாக அருள்பாலித்து வருகிறார். மன்னார்குடிக்கு வடக்கே உள்ள திருப்பூவனூரில் இறைவன் வில்லபநாதராக காட்சி தருகிறார். இங்கே அன்னை பார்வதி கற்பக வல்லி, ராஜராஜேஸ்வரியாகவும் தனித்தனி சன்னதிகளில் அருள்பாலித்து வருகிறார்.

திருத்துறைப்பூண்டிக்கு தெற்கே உள்ள திருக்கடிக் குளம் திருத்தலத்தில் இருக்கும் கற்பகநாதரை ராமபிரான் வழி பட்டார். மதுரைக்கு கிழக்கே 19 கி.மீ தொலைவில் இருக்கும் திருப்பூவனம் திருத்தலம், சிவகங்கை அருகே உள்ள திருக்கோஷ்டியூர் திருத்தலம். ஆகிய திருத்தலங்களில் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலா

## வலம் தரும் வரலட்சுமி விரதம்!




திருமணமான சுமங்கலி பெண்களும், திருமணம் ஆகாத கன்னிப்பெண்களும் வரலட்சுமி விரதத்தை மேற்கொள்வார்கள். ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்னதாக வரும் வெள்ளிக்கிழமையில் இதை அனுஷ்டிக்க வேண்டும். திருப்பாற்கடலை, தேவர்களும், அசுரர்களும் அமிர்தத்துக்காக கடைந்தபோது, பல பொருட்கள் கடலுக்குள் இருந்து வெளிப்பட்டன. அவற்றோடு சேர்ந்து ஒரு சாயங்கால நேரத்தில் மகாலட்சுமியும் தோன்றினாள். அவள் தோன்றிய தினம் இது என்று புராண தகவல்கள் தெரிவிக்கின்றன.

காட்பாடிக்கு தென்கிழக்கே காங்கேயநல்லூரில் காங்கேஸ்வரர் பால குஜாம்பிகை அருள் பாலிக்கும் திருத்தலம். சேலம் மாவட்டம் போளூரில் சுயம்பு லிங்கமாக தான்தோன்றீஸ்வரர் ஆக காட்சி அளிக்கிறார். கும்பகோணத்துக்கு வட மேற்கே உள்ள திரு இன்னம்பூர் திருத்தலத்தில் எழுந்தருளி நாதேஸ்வரர்

மரத்தை வளர்த்து வரலாம். பலா மரத்திற்கு தண்ணீர் ஊற்றி வந்தாலும் நல்ல பலன் கிடைக்கும்.

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள குற்றாலநாதர் திருக்கோவிலிலும் குறும்பலா தல விருட்சமாக உள்ளது. இந்தத் திருத்தலம் அகத்திய மகா






## தலவிருட்சங்களில் வாழ்க்கை ரகசியம்

# உத்திராட நட்சத்திரத்திற்கான தலவிருட்சம்

# (குறும்பலா)



முனிவர் வழிபட்ட தல மாகும்.

### குறுகிய திருமால்

கைலாயத்தில் இறைவன் சிவ பெருமானுக்கும், அன்னை பார்வதிக்கும் திருமணம், அனைத்துலகம் முழுவதும் இருந்து இறைவனின்திருமணக்கோலத்தைக் காண விரும்பினார்கள். இதனால் கைலாய மலையில் பக்தர்கள் கூட்டம். அதேபோல் முப்பத்து முக்கோடி தேவர்களும் கைலாய மலையில் குவிந்தனர்.

இதனால் கைலாய மலை தாழத் துவங்கி தென்பகுதி மேலே உயர ஆரம்பித்தது. உலகத்தின் தென்பகுதி எடையை உடனே சமன் செய்ய வேண்டும். திருமணத்தை பார்க்க வந்தவர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படக்கூடாது. உடனடியாக அகத்திய மகா முனிவரை தென்பகுதிக்கு செல்லுமாறு இறைவன் உத்தரவிட்டார்.

இறைவனின் கட்டளையை ஏற்ற அகத்தியர் தென்திசை நோக்கி புறப்பட்டார். அகத்தியரின் ஏக்கத்தை புரிந்து கொண்ட இறைவன் தென்பகுதியில் பயணம் செய்யும் போது அகத்தியர் பல்வேறு திருத்தலங்களில் தனது திருமண கோலத்தை தரிசிப்பார் என்றும் இறைவன் வாக்களித்தார். இறைவனின் உத்தரவை ஏற்று அகத்தியர் ஆறுகள் துள்ளியோடும் அழகிய மலையை வந்தடைந்தார். அங்கே இருந்த கோவிலுக்குள் அகத்தியர் செல்ல முயன்றார். திருநீறு அணிந்து இருந்த அகத்தியருக்கு கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. காரணம் அந்த திருக்கோவில் விஷ்ணு திருத்தலம்.

இங்கே வைணவர்களுக்கு மட்டும் தான் அனுமதி. ஆனால் அகத்தியரோ அந்த கோவிலுக்குள் சிவனைக் கண்டார். அதனால் அந்த கோயிலுக்குள் சென்று எப்படியும் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார்.

இதனால் அகத்தியர் இலஞ்சி மலையில் கோவில் கொண்டு பக்தர்களை காக்க குமரனை வேண்டி நின்றார். குமரனும் அகத்தியருக்கு ஒரு ஆலோசனையை வழங்கினார். குமரனின் ஆலோசனையின் பேரில் அகத்தியர் வைணவர்கள் அணியக்கூடிய பன்னிரண்டு ஆவாதசக நாமங்களை தரித்துக் கொண்டு அதே கோவிலுக்குள் சென்றார்.

இப்போது கோவிலுக்குள் உள்ள கருவறையில் அமர்ந்து பூஜை செய்ய வேண்டும் என்பதற்காக கருவறையின் கதவை அகத்தியர் பூட்டிக் கொண்டார். நின்ற கோலத்தில் இருந்த பெருமாளின் தலையில் கையை வைத்து சிவபெருமானை மனதில் தியானித்த படி "நீடு மெய் குறுகு நீ குறுகு" என மனமுருகி பிரார்த்தனை செய்தார். அகத்தியரின் அருள் உள்ளத்தால் பெருமாள் மேனியும் குறுகி லிங்க ரூபமாக மாறிவிட்டது. லிங்க மேனி குறுகிய பெருமாளைத்தான் இப்போது குற்றால நாதராக வழிபடுகிறோம்.

தொடக்கத்தில் திருமாலாகவும், அகத்தியரின் வழிபட்டால் சிவபெருமானாகவும் மாறிய இறைவனை அகத்தியர் துதிப்பாடல்கள் மூலம் பூஜித்தார். இந்த அற்புதத்தை காண நான்கு வேதங்களும் அங்கே வந்தன. நான் வேதங்களும் ஒன்று சேர்ந்து பலா மரமாக மாறின.

இறைவனை விட உயரமாக இருக்கக் கூடாது என்று நினைத்த பலா மரமும் குறுகி குறும்பலா மரமாக மாறியது. அதே இடத்தில் நான்கு வேதங்களும் இறைவனை நோக்கி தவம் இருக்கத்தொடங்கின.

குறும்பலா மரத்தடியிலேயே சிவபெருமானும் முளைத்தெழுந்தார். அதனால்தான் குற்றாலத்தில் இறைவனை குறும்பலா நாதர் என்ற திருப்பெயரிலும் அழைக்கிறார்கள்.

அப்போது வானில் பளிச்சென்று முளைத்த எட்டு நட்சத்திரங்களும் இறைவனே நோக்கி வழிபட்டன. இந்த நட்சத்திரங்களே உத்திராட நட்சத்திரம் உத்திராட நட்சத்திரதில் பிறந்தவர்களின் ஆதிதேவதையாக அருள்பாலிப்பவர் விநாயகப் பெருமான்.

– தி.பெருமாள் மலர்மதி

## எல்லா வளமும் தரும் அனந்தமங்கலம்

# திருநேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர்!

இராவண வதத்தை முடித்துவிட்டு, இராமர் சீதா தேவியுடன் அயோத்தி செல்லும் வழியில் பரத்வாஜ மகிரிஷி வேண்டுகோளுக்கு இணங்கி, அவரது ஆசிரமத்தில் தங்கினார்.

அப்போது அங்கு வந்த நாரதர் இராவண வதம் முடிந்தாலும், மேலும் ரக்த பிந்து, ரக்தாட்சன் என்ற இரு அரக்கர்கள் கடலுக்கடியில் ஒளிந்து கொண்டு தவத்தினால் வரம் பெற்று, உலகை வதைக்கத் தொடங்க உள்ளதால் அவர்களையும் அழித்து உலகத்தைக் காத்தருள வேண்டினார். குறிப்பிட்ட காலத்திற்குள் இராமர் அயோத்தி செல்ல வேண்டியுள்ளதால், அனுமனை அனுப்பி அரக்கர்களை அழிக்குமாறு பணித்தார். திருமால் சங்கு சக்கரத்தையும், சிவன் நெற்றிக் கண் மழு ஆகியவற்றையும், பிரம்மா கபாலத்தையும், இந்திரன் வஜ்ராயுத்தையும் கருடாழ்வார் தனது சிறகுகளையும் அளித்து, ஆஞ்சநேயரை அரக்கர் களை அழிக்க அனுப்பினார்.



அசுரர்களை அழித்து விட்டு, அயோத்தி நோக்கி வரும் வழியில் கடற்கரை ஓரத்தில் சற்று ஆனந்தமாக இளைப் பாற அமர்ந்த இடம் அனந் தமங்கலம். இவ்வாலயத்தில் கருவறையில் மூலவர் ஸ்ரீதேவி, பூதேவி உடனாக வாசுதேவ பெருமாளும், உற்சவராக ஸ்ரீ இராஜ கோபால பெருமாள் ருக் மணி, சத்யபாமாவுடன் சேவை சாதிக் கிறார்.

ஆலயத்தின் கீழைத் திருச்சுற் றுக்கு நேரே பெரு மாள் சன்னதியைக் கடந்து செல்லும் போது உள்ள மண்டபத்தில் தெற்கு நோக்கிய விமானத் துடன் கூடிய சன்னதியில் திரி நேத்ர தசபுஜ வீர ஆஞ்சநேயர் எழுந்த ருளியுள்ளார்.


ஆஞ்சநேயர் நான்கு கரங்களுடன், சதுர்பனாக, சங்கு சக்கரம், சாட்டை, நவநீதம் தாங்கி காட்சியளிக்கிறார். அமாவாசை திதி, மூல நட்சத்திரம், வியாழன் சனி வழிபடுவதன் மூலம் உடல் நலம். மனநலம் பெறலாம். இவரை வழிபட்டு காரியத்தில் இறங்கி வெற்றி பெறலாம்.

தொழில் நஷ்ட நிவர்த்தி பெறலாம். அனைத்து சனி, பாதிப்பிலிருந்த பாதுகாத்துக் கொள்ளலாம்.

– K.துரைராஜ்



# மகாளய அமாவாசை



புரட்டாதி மாதம் பிதுர் வழிபாட்டிற்கு உரிய மாதமாக இந்து சமய சாஸ்திரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. மறைந்த முன்னோர்கள் பிதுர் லோகத்தில் வசித்து வருவதாக ஐதீகம். கிரகங்களின் தலைவரான சூரியன் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ராசிக்குள் பிரவேசம் செய்கின்றார். இதன்படியாக கன்னி ராசிக்குள் சூரியனின் பிரவேசம் நிகழுகின்ற போது புரட்டாதி மாதம் பிறக்கின்றது. புரட்டாதி மாதத்தில் மகாளய பட்சத்தில் வருகின்ற அமாவாசை "மகாளய அமாவாசை" என அழைக்கப்படுகின்றது. புரட்டாதி மாதம் முழுவதும் விரதங்கள் அனுசரித்து, தூய காய்கறி, தானிய உணவு வகைகளை மட்டும் உண்டும், தூய துளசி தீர்த்தம் பருகியும், பரந்தமானின் புகழ்பாடும் நூல்களை படித்தும் பாராயணம் செய்தும் போற்றுகின்றார்கள். சிலர் புரட்டாதி மாதத்தில் வரும் எல்லா சனிக்கிழமைகளிலும் விரதமேற்கொண்டு பெருமாளை வழிபடுவார்கள். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரத வழிபாடுகள் மேற்கொள்ள இயலாதவர்கள் குறைந்தபட்சம் புரட்டாதி மாதத்தில் வருகின்ற ஏதேனும் ஒரு சனிக் கிழமையாவது பெருமாளுக்கு படையல் படைத்து விரதம் அனுஷ்டிப்பார்கள்.

முன்னோர்களின் இறந்த திகதி தெரியாதவர்கள் கூட புரட்டாதி மாதத்தில் வரும் மகாளய அமாவாசை தினத்தன்று பிதுர்களுக்கான பிண்ட தர்ப்பனம் செய் கின்றார்கள். அன்றைய தினம் நாள் முழுவதும் விரதமிருந்து ஒரு வேளை உணவு உண்டு உபாவசம் இருப்பது சாலச் சிறந்ததாகும். பொதுவாகவே புரட்டாதி மாதம் பிதுர்களுக்குரிய விடுதலை மாதமாக கருதப்படுகின்றது. சூரியன் கன்னி ராசிக்குள் பிரவேசம் ஆனாதும், எமதர்மன் பிதுர்களை நோக்கி பூமியிலே செய்யப்படுகின்ற வழிபாட்டு பலன்களை அடைவதற்காக அனைத்து பிதுர்களையும் பூமிக்கு செல்லும்படி உத்தரவிடுகின்றார். புரட்டாதி, வளர்பிறை பிரத மையிலிருந்து அமாவாசை வரையான 15 நாட் களுக்கு அவர்கள் பூமியில் தங்கியிருப்பார்கள். இந்த காலத்தையே "மகாளய பட்சம்" என்று அழைக்கின்றார்கள். பட்சம் என்றால் 15 நாட்களை குறிப்பதாகும். இந்த நாட்களில் நம் முன்னோர் களுக்கு நாம் தினமும் தர்ப்பணம் செய்து அவர்களின் தாகத்தை தீர்த்து வைக்க வேண்டும் என்பது நியதி. தகுதியான நிகழ்வுகளில் பலர் அன்னதானமும் செய்கின்றார்கள். இந்த மகாளய பட்சத்தில் வரும் பரணியை "மகாபரணி" என்றும் அஷ்டமியை "மதியாஷ்டமி" என்றும் திரியோதசியை "கஜச்சாயை" என்றும் சொல்லுகின்றார்கள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று நாட்களுமே பிதுர் வழிபாட்டிற்கு உகந்தவையாக கருதப்படுகின்றன.

புரட்டாதி மாதத்தில் வரும் மகாளய அமா வாசையில் செய்யப்படும் பிதுர் பூஜை மற்ற அமா வாசைகளை காட்டிலும் அதிக பலன் அளிக்கக் கூடியதென சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. மகாளய விதிப்படி அந்த 16 நாட்களும் பித்துருக்களுக்காக அன்ன சிரார்த்தம் செய்ய வேண்டும் எனவும், இயன்றவர்கள் பொன் முதலிய பொருட்களை தகுந்தவர்களுக்கு தானமாக வழங்க வேண்டும் என சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன.

– A.A. ராமன்





# பூர்வ ஜென்ம புண்ணியம்

புண்ணியம், பாவம் இவை இரண்டையும் ஒன்றாகக் குறிக்கும் சொல்லே அதிருஷ்டம் என்பது த்ருஷ்டம் எனில் பார்க்கக்கூடிய பொருள்கள் அத்ருஷ்டம் எனில் பார்க்க முடியாதவை எப்படி ஒரு வங்கியில் பணம் செலுத்தினால் அவர்கள் அதற்குரிய வட்டியை நமக்குக் கொடுக்கிறார்களோ, நாம் வங்கியில் கடன் பெற்றிருந்தால் நாம் வங்கிக்கு வட்டி கொடுக்கிறோமோ, அது போன்று நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு வினைக்கும் ஒரு பலன் உண்டு நாம் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இவற்றிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. இவ்வளவு கர்மாக்கள் இவ்வளவு நாட்கள் தான் செயல்படும் என்று நமக்கு எந்தக் கணக்கும் தெரியாது.

எல்லாம் தெரிந்தவன் இறைவன் ஒருவனே அவனைச் சரணடைந்து நம்பிக்கையுடன் நாம் வழிபட்டால், கர்மபலன்களின் தீய தாக்குதல்களைக் குறைத்துக் கொள் ளலாம். "ததாதி பாதி க்ருஹ்ணாதி" என்ற வாக்கியத்தின்படி நாம் அதைக் கொடுக்கிறோமோ, அதையே நாம் திரும்பிப் பெறுவோம்.

பூர்வ ஜன்ம புண்ணியம் என்பது, நாம் இந்தப் பிறப்புக்கு முன்னர் பிறந்த ஜன்மங்களில் செய்த நல்வினைப் பயன்களின் கூட்டாகும். இவையே நமக்கு இந்தப் பிறப்பில் உள்ள வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. ஆதலால், நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மிகவும் ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டும். புண்ணியம். பாவம் இவற்றை நாம் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் ஏன் ஒரு நல்லவன் கஷ்டப்படவேண்டும் என்பதையோ நம்மால் விளக்க முடியாது. நாம் செய்யும் வினைகள் அனைத்தும் பலன்தரக் கூடியவையே. நம்வினைகள் எனில் நற்பயன்களையும், தீய வினைகள் எனில் தீய பலன்களையும் அவை கொடுத்தே தீரும். நமது ஜாதகத்தை எழுதும் ஜோதிடர் ஜாதகத்தைக் கணிக்கும் முன்னர், பதவி பூர்வ புண்யானாம் லிக்யதே ஜன்ம பத்ரிகா என்று எழுதுவது வழக்கம். இதில் பதவிபூர்வ புண்யானாம என்பது நாம் முற்பிறவியில் செய்த நல்வினைகளின்படியே இந்தப் பிறவியில் வாழ்க்கை அமையும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.



### கருணையே வடிவான கண்ணன்!

தான் இருக்கும் சுற்றுப் புறத்தையெல்லாம் நச்சுப் படுத்திய காளிங்கனை வதம் செய்ய எண்ணினார் கண்ணன். எனவே நீரில் இறங்கி அவன் தலை மீது நின்று நர்த்தனம் ஆடத் தொடங்கினார். நர்த்தனம் ஆடும் போது ஏற்பட்ட வலியினை தாங்க முடியாது காளிங்கன் கதறினான். பின்னர் காளிங்கனின் பத்தினிகள் கண்ணனிடம் வந்து காளிங்கனுக்கு கருணை காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

அதற்கிணங்க கண்ணனும் காளிங்கனுக்கு மன்னிப்பு அளித்து கடலுக்கடியில் குழந்தைகளுடனும் மனைவியிருடனும் செல்வதற்கு அனுமதியளித்தார்.



# விருச்சிகம்

மனதில் பட்டதை உடனே செய்துவிடவேண்டுமென்றுநினைக்கும் விருச்சிக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழிலில் நன்றாக இருந்தாலும் பொருளாதாரத்தில் பல சிரமங்களை சந்தித்து வரு வீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிட்டும்.

**பணியாளர்களுக்கு**

தொழிற்சாலைகளில் பணி செய்பவர்களுக்கு புதிய தொழில் நுட்ப பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டி வரும். வெளிநாட்டு உபகரணங்கள் பயன்படுத்த வேண்டி வரும். தொழிற்சங்க பிரச்சினைகளை பற்றி பேச வாய்ப்பு ஏற்படும். பொருளாதார நிலை சமமாக இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது கருத்துகளை அனைவருக்கும் எடுத்து சொல்வீர்கள். போராட்ட குணங்கள் வெளிப்படும் நியாயமான விடயங்களுக்கு துணை போவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். திறமையாக பேசி விற்பனையை அதிகரிப்பீர்கள். மருந்து பொருட்கள் பெயிண்ட் வியாபாரம் நன்றாக இருக்கும். வெளியூர் விற்பனை அதிகரிக்கும் பொருளாதாரம் முன்னேற்றம் தரும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் போட்டிகளை சந்தித்தாலும் ரசிகர்களின் ஆதரவு உங்களுக்கு இருக்கும். விளையாட்டு மிமிகிரி போன்றவற்றில் சிறந்து விளங்குவீர்கள். பொருளாதார நிலை மேன்மை அமையும்.

**பெண்களுக்கு**

பெண்களின் அன்றாட பிரச்சினைகள் சீராக அமையும். சுயதொழிலில் போட்டி இருந்தாலும் நல்ல தொழில் வளர்ச்சி இருக்கும். உடல் நலனில் குறைகள் உண்டாகும்.

**மாணவர்களுக்கு**

மாணவர்களின் கல்வித்தடை நீங்கும். உயர் கல்வி சுயமுயற்சியால் நல்ல பலனை தரும். அதிக கவனம் செலுத்த வேண்டி வரும்.

இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

03.10.2015 சனி இரவு 01.42 முதல் 06.10.2015 செவ்வாய் காலை 08.13 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**விசாகம் 4ஆம் பாதம்**

மருத்துவ சிகிச்சைக்கு செலவு செய்ய வேண்டி வரும். வீண் பழியும் கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் தராதீர்கள். பண புழக்கம் இருந்து வரும்

**அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

எல்லோரையும் அனுசரித்து செல்வீர்கள். பதவி ஆசையால் சிலரின் எதிர்ப்பு உண்டாகும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.



**பிரார்த்தனை மனதை லேசாக்கும்!**

கடவுளிடம் வேண்டுவதினால் நமக்குள் இருக்கும் மனக் குறைகள் கிணற்றுக்குள் அமிழ்த்திய வாளியைப் போல் கனம் விலகி ஒரு உத்வேகம் பிறக்கும். அந்த உத்வேகமும், கடவுளின் அருளும் நமக்கு நமது காரியத்தில் வெற்றியை அளிக்கும்.

**கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கல்வியில் முன்னேற்றம் மாணவர்களுக்கு இருக்கும். கடல் சார்ந்த பகுதியில் சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** ஆரஞ்சு, வெண்மை, கரும்பச்சை

**அதிர்ஷ்ட திசைகள்** வடமேற்கு, வடக்கு, தெற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** வெள்ளி, சனி, புதன்

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியையும் வெள்ளிக்கிழமை அம்மனையும் வழிபாடு செய்யவும். ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு விளக்கு போட்டு வர சகல காரியமும் கை கூடும்.

# அவதார மகிமை...



பகவானாகிய கிருஷ்ணர், பகவானாகிய அவரின் பிரபஞ்சப் படைப்பாற்றலாகிய மூலப் பிரகிருதி என்னும் பிரபஞ்சத்தைப் படைக்கும் ஆற்றலாலும், அவருடைய பெருமை வாய்ந்த ஐசுவரிய சக்தியாகிய போகமாயை என்றும் ஆத்ம மாயா என்றும் அழைக்கப்படும். இன்னொரு ஆற்றலாலும் பலவித ஸ்வரூபங்கள் எடுத்து உலகின் முன்னிலையில், அவதாரமாக, மாமக்னியராக வெளிப்படுகிறார். தற்காலத்தில் பகவான் சத்திய சாயியின் வெளிப்பாட்டை இவ்வகை அவதாரமாகக் கூறலாம். இறைவனின் அவதாரம் என்பது அவருடைய விருப்பப்படி அவரது சங்கற்பப்படி மிக உயர்ந்த காரணத்துக்காக அமைவதாகும். இறைவன் மூலப்பிரகிருதியின் செயலாக்கக் கருத்துவாகவுள்ளதால், இவ்வுலகத்தில் பிரகிருதி என்னும் இப்பிரபஞ்ச, இவ்வுலக மூலப்பொருட்களாய் பஞ்சபூதங்கள், பிரபஞ்ச மூலமாயை முதலியவற்றிற்குக் கட்டுபட்டவாறு எல்லாச் சமயங்களிலும் அவ்வச்சமய அவதார புருஷர்களிடம் இம்மகோன்னத பரமாத்மத் தன்மையினைப் பார்க்க முடியும்.

### விஞ்ஞான ஆய்வும், மெய்ஞான வெளிப்பாடும்

கடவுளைக் காண முடியுமா? அவருடன் பேச முடியுமா? என்ற கேள்விக்கு, முடியும் என்றும், அரிது என்றும் இரு வகையாகத் தான் பதில் கூற முடியும். கடவுளைப் பார்ப்பவர்கள், அவருடன் பேசுபவர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள், எதிர்காலத்திலும் இருப்பார்கள். பக்குவிக்கு இது இயலும். அது போன்றே மேனாட்டு விஞ்ஞானிகள் ஆத்மாவைப் பற்றி பலவகை வெற்றிகரமான ஆய்வுகள் செய்து ஆத்மாவின் இயல்புகளை இறந்த பின் அதன் நிலைகளை நியர் டெத் எக்ஸ்பிரியன்ஸ் எனப்படும், மருத்துவ மனைகளில் அறிந்த மரணத் தருண அனுபவப் பதிவுகள், அவுட் ஆஃப் பாடி எக்ஸ்பீரியன்ஸ் எனப்படும். ஆத்மா கனவு, துரியம் துரியாதீத நிலைகளில், உடலை விட்டுப் பிரிந்து பயணம் செய்த அனுபவங்கள், சூட்சும தேக நிலைகள், உடலை விட்டு, மரண செய்தி, பிரபஞ்சத்தில் உலவும் பல அரிய ஆத்மாக்களின் குரல்களைக் கருவிகளின் மூலம் பதிவு செய்தல், மரணத்துக்குப் பின் மண்ணுலகில் பல விடங்களிலும் பல்வேறு காரணங்களாலும் உலவி, மனிதர்களின் கண்ணுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் இருக்கும் எண்ணிற்கு ஆத்மாக்களின் சூட்சும தேக உருவங்களைப் புகைப்படம் எடுத்து வெளியிட்டிருத்தல், காலம் கடந்து இவ்வுலகில் பழி வாங்கும் எண்ணத்தோடு அலையும் இறந்தோரின் ஆத்மாக்களை மீடியாக்களின் வழி சார்ந்தப்படுத்தியிருத்தல் மீடியங்களின் வழி மிகப் பிரபலமான மறைந்தவர்களின் ஆத்மாக்களோடு உரையாடி பல அபூர்வச் செய்திகளை அறிந்திருத்தல் போன்ற விஞ்ஞான ஆய்வுப் பதிவுகள் பல்லாயிரக்கணக்கான பக்கங்களில் நூற்றுக்கணக்கான நூல்களில் வெளி வந்துள்ளன. இந்தியச் சாத்திரங்களான பகவத் கீதை, உபநிடதங்களில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பே இவ்விஞ்ஞான ஆய்வுகள் நல்கும் செய்திகட்கு மேலான நுண் செய்திகள்

கூறப்பட்டுள்ளன என்பது பெருமைப்படத்தக்க செய்தியாகும். பௌதிகக் கருவிகள் வழி ஆய்ந்து தெளிந்த செய்திகட்கு மேல், யோக, ஞான தியான தெய்வீக வெளிப்பாடுகளாக அவை மிக்குயர்ந்த உண்மைகளாக அமைந்துள்ளன.

### ஒழுக்கமும் பிறவியும்

இறைவனை அடைதல், தத்வம்சி, அகம் பிரம்மாஸ்மி, மாம், ஏகம் போன்ற சில சீவ ஒருமைகட்கான வழிகளை பகவத் கீதை கூறு கின்றது. தெய்வத்தை தெய்வீகத்தை அறிந்து கொண்டவர்கட்கு மறுபிறவி கிடையாது. மறுபிறவி இல்லை என்பதற்கு அவ்வாத்மா கடவுளை அடையும் என்பதே பதில். கடவுளை அடையும் ஆத்மா அவனோடு ஒன்றிவிடுகின்றது. இறைவன் விரும்பினால் ஒன்றுக்கு ஒன்றாக ஒடுங்கிய அது இறைவன் விரும்பும் பிரபஞ்ச இயல் காரணத்துக்காக எப்பொழுதாவது பிறவி எடுக்குமாறு இறைவன் செய்யலாம் என்பதற்கான சான்றுகளும் புராணங்களில் கிடைக்கின்றன.



தெய்வத்தை தெய்வீகத்தை அறிந்தவர்களின் பக்குவப்பட்ட ஆத்மா இந்தப் பிறவிலேயே இறைவனைப் பிரத்தியட்சமாகக் காண்கின்றது. காண முடியும். அந்தப் பக்குவம் பெற்ற ஞானியர் பலரின் வரலாறுகள் கிடைக்கின்றன.

### ஜீவன் முக்தர்கள்

இறைவனை அறிந்துகொண்டவர்களின் ஆத்மா வும், அவ்வாத்மாவின் தற்காலிகத் தங்குமிடமான மனிதனும், அகங்காரம் பற்று, ஆசை, முதலிய மாசுகள் அற்றவனாகவும், நீதி, தர்மம் தூய அன்பு, பக்தி முதலியன உடையவர்களாக இருப்பார்கள். அவர்களே ஜீவன் முக்தர்கள். இவர்கள் ராகம் என்னும் விருப்பம் (ஆசைகள்) அச்சம், கோபம் இவை அற்றவர்களாக நல்லன அன்றி வேறெதிலும் நாட்டமில்ல நாட்ட மில்லாதவர்களாக, தெய்வ பக்தியில் திளைத்து அதன் செயல் வடிவமாக இருப்பார்கள். இதனை பகவத்கீதை 'வீத, ராக, பய, குரோதம் அற்ற நிலை' எனக் கூறும். இறைவனிடம் உலகியல் ஆசை பற்று காரணமின்றி பக்தி கொள்பவன், பேரன்பு உடையவன் மந்மயா எனப்படுகிறான். அவன் இறைவனைச் சரணடைந்து அவனருளாலே எல்லாம் ஆகும் என்று பற்று அற்ற நிலையில் கடமை ஆற்றுபவன் மாம் உபாஸ்ரிதா என்ற தத்துவ பெயருடையவன் ஆகிறான். எவ்விதத்திலும் இறைவனையே சரணமாக அடைந்து உபாசித்து வெல்பவன் என்பது இதன் உட்பொருள்.

### தவ வெற்றி

ஆத்மா ஞானம் தவத்தின் வெற்றியாய் பயன். அவ்வாத்ம ஞானமே பகவானிடம் பகவான் வழி, பகவானுடைய ஸ்வரூபத்தைஅடைய முடியும். இத்தவம் திரைப்படங்களிலும் புராணங்களிலும் பேசப்படும் விசுவாமித்ர முனிவர், இராவணன் போன்றவர்கள் செய்தது போன்றது என்று மட்டுமிதைக் கருதத் தேவை இல்லை. இன்றைய நாட்டில் குரு விவானந்தர், குரு சித்பவானந்தர், குரு சேஷாத்ரி மகிரிஷி, குரு இரமணர், இராமலிங்கர், திருவலம் சுவாமிகள் இவர்கள் போன்ற ஆயிரமாயிரவர் மேற்சொன்ன தவம் இயற்றியவர்கள். ஜீவன் முக்த இலக்கணம் கூறும் போது, அவன், வணிகனாகவும், அரசனாகவும், முனிவனாகவும், தொழிலாளியாகவும் இருக்கலாம் என்பர். ஆம் நேரிய அறநெறியில் தொழில் செய்பவனே கருமம் செய்வதே தவம். தவம் செய்யத் தண்டகாரண்யத்துக்கும் கைலாயத்துக்கும் செல்ல வேண்டியதில்லை.

### ஆத்மாவின் கன பரிமாணம்

ஆத்மா என்பது பரமாத்வாவின் கல்யாண குணங்கள் என்னும் உயர் அற்புத் ஆற்றல்களைப் பெற்ற ஒன்று. அதற்கு எடை நீளம், அகலம், கனம், திரடத்துவம், நிறம் முதலாயின இல்லை. எதுவும் இல்லை என்றால் ஆத்மா இருப்பது என்பது எவ்வாறு என்ற வினாவை எழுப்பினால் அது உள்ளது.

ஆனால் மனிதனின் கண், காது, மூக்கு உடல், வாய் முதலிய உறுப்புகளால் அறிய முடியாத ஆத்மாவினை போகிகள் தன் போக பலத்தால் அநாகதக் தானமாகிய இருதயத்தில் நெல்லின் முனையாகிய மிக நுண்ணிய ஊகு (நெல் முனை) ஒன்றுள்ளதே அதனைப் போன்ற மிக நுண்ணிய அளவில் விட்டு விட்டு ஒளிரும் ஜோதியாகத் தரிசிப்பர். ஞான பலம், தியான பலம் உள்ளவர்கட்கும் இது கூடுவது உண்டு.

டொக்டர் வை. தட்சிணாமூர்த்தி



# தனுசு

திட்டமிட்டு செயல்படுவதில் கவனமாக இருந்து வரும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குடும்ப பார்வையாலும் தொழிலில் ஸ்தானத்தில் சூரியன் ராகு இணைவு பெறுவதும் வெளிநாட்டு தொடர்புகள் உண்டாகும்.

### பணியாளர்களுக்கு

பணியில் உடன் இருப்பவர் கஷ்டத்திற்காக அவருடைய வேலையைச் சேர்த்து பார்த்து வருவீர்கள். பணியாளர்களிடம் நன்மதிப்பை பெறுவீர்கள். சில நேரம் கோபம் அதிகரிக்கும். பொருளாதார நிலையில் நன்மை பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலன் கருதி நீங்கள் செயல்படும் விடயங்களுக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும். நிலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு உடன் இருந்து நல்ல பலனை பெற்று தருவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி பரிவர்த்தனை பெற்று திகழ்வதால் தர்மகர்மாதிபதி யோகம் கிட்டும். தொழில் பரிமாற்றங்களை கொண்டு வந்து நன்மை அடைவீர்கள். வெளிநாட்டு பொருட்களுக்கு கூடுதல் ஆதாயம் கிட்டும். வங்கி கடன் வசதிகள் கிடைக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் பேச்சால் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். ஆடம்பரமான வாழ்க்கையை விரும்புவீர்கள். புதிய செலவுகளும், கடன்படுவதும் இருக்கும். பொருளாதார நிலையில் ஓரளவு நன்மை கிட்டும்.

### பெண்களுக்கு

பெண்களின் அன்றாட வாழ்க்கை சூழ்நிலை நன்றாக அமையும் சுயதொழிலில் நன்மையை பெறுவீர்கள். முயற்சிகளால் வாழ்க்கையில் ஏற்றம் பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் தடைப்பட்ட கல்வி தொடரும். உயர்கல்வியில் வளர்ச்சியை பெறுவீர்கள். கப்பல் ஆகாயம் சார்ந்த கல்வி சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

06.10.2015 செவ்வாய் காலை 08.14 முதல் 08.10.2015 வியாழன் மாலை 05.14 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வெளிநாட்டு சந்திப்பு, தொடர்புகள் நல்ல பலனை தரும். மனைவியை விட்டு வெளியில் தங்கி இருக்க வேண்டி வரும். பொருளாதாரம் சிறக்கும்.

### பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

ஆடம்பர அழகு சாதனங்கள் செய்யும் தொழிற்கூடம் நல்ல வருவாயை தரும். வங்கி கடன் வசதி கிடைக்கும்.

### உத்திராடம் 1ஆம் பாதம்

நல்ல செய்தி வந்து சேரும். வரவு செலவு கணக்கு பார்த்து சரி செய்து கொள்வீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** இளம் மஞ்சள், பச்சை, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்** கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** வியாழன், திங்கள், புதன்

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமை நல்லெண்ணெய் விளக்கு பைரவருக்கு போட்டு வணங்கி ஊனமுற்றவருக்கு அன்னம் வழங்கிட அனைத்து காரியங்களும் நன்றாக நடக்கும்.



## வேதமே இந்து மதத்தின் வரம்!

வேதமே நமது மதத்தின் அடிப் படை நூல், புனித நூல். வேதங்களிலும் அதன் அங்கங்களிலும், ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அதன் பிறகும் செய்யக்கூடிய கிரியைகளை மிகத்தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு சடங்கும் மிகவும் அர்த்த முள்ளவை.




# இறையருள் முன் தீய சக்திகள் பொசுங்கிவிடும்

எப்படிக் காற்றிலேயே பல மண்டலங்கள் உள்ளனவோ, பல வேறுபாடுகள் உள்ளனவோ, அது போன்று இயற்கையின் சக்திகளில் பல வேறுபாடுகள் உள்ளன. அந்த நிலையில் பார்த்தோமானால் பில்லி, சூனியம் போன்றவற்றை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். நம்மில் பல பேர் இவற்றால் பாதிப்பு அடைந்ததைப் பார்த்திருக்கிறோம். இது ஒருவிதமான தொற்று. அதற்கு ஒரு உருவமும் பெயரும் கொடுக்கப்படுகிறது.

தேவி மஹாத்ம்யம் எனும் அம்பாளின் துதிகளில் கலசம் எனும் பகுதியில் “அபிசாராணி, எமர்வாணி. மந்த்ர, யந்த்ராணி பூதலே...” என்று ஆபிசாரத்தின் வகைகளை விளக்கி அவற்றைப் போக்குவதற்கு உரிய வழிகளும் விளக்கப்பட்டிருக்கிறது. பல தந்த்ர சாஸ்திரங்களில் ஆபிசார பிரயோகத்தைப் போக்கக் கூடிய வழி முறைகள் மிக விரிவாக விளக்கபட்டிருக்கிறது.

இவற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காகத்தான் மஞ்சள் தடவிக்கொள்வதையோ. மஞ்சளாலான குங்குமத்தையோ, கடவுளின் உருவத்தையோ, யந்திரத்தையோ நமது உடலில் தரித்துக் கொள்கிறோம். வீட்டு வாசற் படிகளில் மஞ்சள் தடவுவதும் இதன் பொருட்டே! வெறும் காரில் செல்வதற்கும் குண்டு துளைக்கப்படாத காரில் செல்வதற்கும் எப்படி வேறுபாடு உள்ளதோ, அதுபோன்று தெய்வச் சின்னங்களுடன் நாம் இருக்கும் போது நமக்குப் பாதுகாப்பு அதிகம் என்பது நமது நம்பிக்கை.



எனினும், இதுபோன்று ஆபிசார பிரயோகங்கள் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம். இப்போது நமக்கு வெறும் தலைவலி, உடல்வலி அல்லது கால்வலி என்று வந்தால் கூட, நாம் நமது அதீதக் கற்பனையினாலும் பயத்தினாலும் நம்மைச் சுற்றி யிருக்கக் கூடியவர்களின் மீது பழியைச் சுமத்தி விடுகிறோம். வெறும் ஓய்வினாலோ, நல்ல மருத்துவ ஆலோசனையினாலோ சரியாகக் கூடிய மருத்துவக் குறைபாடுகளை பில்லி, சூனியம் எனப் பயந்து சுற்றத்தாரை வெறுத்து, தம்முடைய வாழ்க்கையைத் தாங்களே அழித்துக் கொள்பவர்களே அதிகம். இதைப் பார்க்க மிகவும் வேதனையாக உள்ளது. ஆதலால், வீண் பயம் வேண்டாம்.

கடவுளிடம் அடைக்கலமும் தீவிர அன்பும் நம்பிக் கையும் வாழ்வில் ஒழுக்கமுடையவர்களும் உண்மையான வாழ்க்கை நடத்துபவர்களும் எந்தக் காலத்திலும் இந்த தீய, பொறாமையினால் விளைந்த செயல்களினால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

தீய சக்திகளை அழிக்க முக்கியமாக வேண்டியது தன்னம்பிக்கை. “அஞ்சேல்” என கடவுளின் அருள் நம்மிடம் இருக்கும் எந்த தீய சக்திகளும் நம்மை அண்டாது.



## சிற்பக்கலையழகின் சான்றாய் விளங்கிடும்

# சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயம்!



உலக புகழ் பெற்ற தில்லை என்னும் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜருக்கான திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது. உலகெங்கிலும் வசிக்கின்ற சைவ பெருமக்கள் ஓங்கு புகழ் ஐயன் சிதம்பரத்தாடிய செல்வத்தை வணங்கி வழிபட இத்தலம் வருகின்றார்கள். இந்த சிவாலயம் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் இருக்கின்றது. இது சைவ குரவர்கள் நால்வராலும் பாடப்பட்ட திருத்தலமாகும். இந்த தில்லைத் திருக்கோயில் 51 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து வியாபித்திருக்கின்றது.

இந்த ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் சிற்பக்கலையழகு நிறையப் பெற்ற நான்கு ராஜகோபுரங்கள் கம்பீரமாய் அமைந்திருக்கின்றன. இந்த கோபுரங்களின் சிகரங்கள் வளைந்த கூரைகள் போன்ற அமைப்பை கொண்டவையாகும்.

ஆலயத்தின் கிழக்கு கோபுர வழியாக உள்ளே நுழைந்ததும் கோபுரத்தில் இருமருங்கிலும் தென்புறத்தில் விநாயக பெருமானும் வடக்கு புறம் முருகப் பெருமானும் கோயில் கொண்டு எழுந்திருப்பதை காணலாம். ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் முக்குருணி விநாயகரின் திருச்சன்னதியும் அமையப் பெற்றுள்ளது. இவரது திருவுருவம் சுமார் 8 அடி உயரம் கொண்டதாகும். மிகுந்த அழகும் அருளும் நிறையப் பெற்ற திருவுருவமாகும் இது. இந்த முக்குருணி விநாயக பெருமானை வேண்டி தமது விருப்பங்களெல்லாம் நிறைவேறப் பெற்ற பக்தர்கள் 108, 1008 தேங்காய்களை விநாயகரின் முன்னே உடைத்து தம்முடைய நேர்த்தி கடன்களை செலுத்துகின்றார்கள்.

இச்சைவ திருத்தலத்தின் பிரகாரங்களில் கற்பக விநாயகர் கோயில், சுப்பிரமணியத் திருக்கோயில், சோமசுந்தர பெருமான் திருக்கோயில், சிவகாம சுந்தரி அம்பாள் திருக்கோயில், பாண்டிய நாயகர் என்று அழைக்கப்படும் சண்முக பெருமான் திருக்கோயில், துர்க்கையம்பாள் திருக்கோயில், நவலிங்க திருக்கோயில் முதலிய அழகு திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. மேலும் ஆலயத்தில் உட்பிரகாரத்திலும் 63 நாயன்மார்களுக்கான சன்னதிகளும், சிவபெருமானின் 26 மூர்த்தங்களும், ஸ்ரீசக்கரமும் அமைந்திருக்கின்றன. ஆலயத்தின் கிழக்கே சண்டேஸ்வரர் சன்னதியும், அருணாச்சலேஸ்வரர் சன்னதியும் உள்ளன. அருணாச்சலேஸ்வரரி சன்னதியிலிருந்து திரும்பி வந்தால்



ஆதி மூலமாகவும் சுயம்பு மூர்த்தியாகவும் விளங்கு கின்ற திருமூலாட்டானேஸ்வரர் திருச்சன்னதியும் உள் ளன. இதுவே தில்லை சிதம்பரம் திருக்கோயிலின் ஆரம்ப காலத்தில் முனிவர்களாலும் தேவர்களாலும் வழிபடப் பட்ட மூர்த்தியாகும்.


இத்தில்லை திருத்தலத்தில், மூலட்டானேஸ்வரர், உமையம்மை சன்னதிகளை அடுத்து வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர் ஆகியோரின் சன்னதிகள் அமைந் துள்ளன. இவர்களை வழிபட்ட பின் அடுத்ததாக சாஸ்தா எனப்படும் சுவாமி ஐயப்பனின் சன்னதி யும் யாகசா லையும் திருவிழா மண்டபமும் காணப் படுகின்றன. இவற்றை அடுத்து, முதலாம் பிரகாரத்தில் நுழையும் போது தங்க ஓடுகள் வேய்ந்த விமானத்தை கொண்ட சிற்றம்பலம் காணப்படுகிறது.


இங்கு தான் நடராஜர் பெருமான் என்றும் நிற்காத ஆனந்த நடனத்தை நிகழ்த்தியபடி திருகாட்சி தரு கின்றார். இவரது திருநடனத்தை கண்ணிமைக்காமல் சிவகாமசுந்தரி அம்மை அருகே காட்சியளிக்கின்றார். இந்த சிவாலய அமைப்பானது மனித உடலின் பாகங் களையும், அவர்களால் மேற்கொள்ளப்படும் சுவாசங்க ளையும் குறிப்பதாக அமைந்திருக்கின்றன.

இந்த ஆலய வளாகத்தினுள்ளேயே கோவிந் தராஜ பெருமாள் திருச்சன்னதியும் இருக்கின்றது. இவ் வாலயத்தில் ஒரே இடத்தில் நின்று கொண்டு சிவ பெருமான், மகாவிஷ்ணு ஆகிய இருவர் வழி படும் வண்ணம் அமைந்துள்ள இச்சிவத்தலம் உலகில் வேறெங்கும் காணப்பெறாத அதிசயமாகும். இதுவே தில்லையின் தனிச்சிறப்பாகவும் உள்ளது. இங் குள்ள ஆலயத்தின் கோபுரங்களும், தூண்களும், திருத்தேரும் சிறந்த சிற்பக்கலையழகிற்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன. இறைவனின் 108 திருத் தாண்டவங்களும் இங்கே சிற்பங்களாக செதுக்கப் பட்டுள்ளது கண்கொள்ளாக் காட்சியாகும். நடராஜ பெரு மானாகிய ஆடிய பாதத்தின் திருநடனத்தை குறிக் கின்ற அற்புத சிற்பங்களும் இங்கு காணப்படுகின்றன.

இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட் டுள்ள விநாயகர், முருகன், ஐயப்பன் ஆகியோரின் சிற்பங்களும் கூட அற்புத அமைப்புகளை கொண்டு விளங்குகின்றன. கனகசபையில் உள்ள 18 தூண்களிலும் 18 புராணங்களும் குறிக்கப்பட்டுள்ளன. சிற்சபையிலுள்ள ஐந்து தூண்களும் உடலின் ஐம்பொறிகளான கண், காது, மூக்கு நாக்கு, தோல் ஆகியவற்றை குறிக்கும் வண்ணம் அமைந்திருக்கின்றன. இந்த ஆலயத்தில் காணப்படும் அற்புதமான சிற்ப வேலை பாடுகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

– அபிதா மணாளன்













# பிரகலாதனாய் மாறுவோம்!

தீயவை மிகப் பெரிய அளவில் முன்னெடுத்துச் செல்வதை இறைவன் எப்போதும் அனுமதிப்பதில்லை. எல்லா யுகங்களிலும் அவை கட்டுப்படுத்தப்படுகின்றன.

தீயவர்கள் அதிக அளவில் பெருகி நல்லவர்கள் கஷ்டப்படும் போது, எல்லாம் வல்ல இறைவன் அவதார புருஷராக உருவெடுத்து, தீயவற்றை அழித்து நன்மையை நிலைநாட்டுவதை ராமர், கிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்களால் நாம் அறியலாம்.

இந்த வாழ்க்கை, நமது கர்மபலன்களைப் போக்கிக்கொள்ள நமக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு. உயிர்கள் பல ஜென்மங்களில் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப பிறவி எடுக்கின்றன. எப்படி ஒரு நிறுவனத்தில் ஒருவர் நன்றாக வேலை செய்தால் அவருக்கு ஊக்கத்தொகை மற்றும் பதவி உயர்வு கிடைக்கிறதோ, அதே நேரத்தில் ஒருவர் தவறாக வேலை செய்தால் வேலையிலிருந்து வெளியேற்றப்படுகிறாரோ, அது போல் இந்த வாழ்க்கையும் நமக்குக் கடவுளால் நமது வினைகளைப் போக்கிக்கொள்ளக் கொடுக்கப்பட்ட வாய்ப்பாகக் கருதி அதை நம்மால் முடிந்த அளவு நல்ல முறையில் வாழ்ந்தோமானால், இறைவன் நமக்கு பிறவியற்ற மோட்சத்தை அளித்து, இந்தக் காலச் சக்கரத்திலிருந்து விடுவித்து நமக்கு பரமானந்தத்தை அளிப்பார்.

நமக்கெல்லாம் தாய் தந்தையரான இறைவன், நாம் துன்பப்பட வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். எப்படி பக்தப் பிரகலாதன் கூப்பிட்டவுடன், எல்லாம் வல்ல ஸ்ரீமத் நாராயணன் நரசிம்ம அவதாரம் எடுத்து ஹிரண்யகசிபுவை சம்ஹரித்தாரோ, அது போன்று இறைவன் நமது குரலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான். நாம் தான் இன்னும் பிரகலாதனாக மாறவில்லை!



# மகரம்

கவனமாக செயல்பட்டு எதையும் திறமையாக செயல்படுத்தும் மகர ராசி வாசகர்களே! இந்த மாதம் உங்களின் ராசிக்கு யோகாதிபதி சுக்கிரன் பார்வை பெறுவது நல்ல பலனை தரும். தொழிலில் பல போட்டிகளை சந்திக்க வேண்டி வரும்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் பணியில் சிரமங்கள் இருந்துவரும். அடிக்கடி வேலையின் தன்மை மாறுபடும். தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளை பேசி தீர்ப்பீர்கள். பொருளாதாரத்தில் சிரமங்கள் இருந்து வரும்.

**பொதுவாழ்வில் இருப் பவர்களுக்கு**

பொது விடயங்களில் தலையிட்டு சில சிக்கல்களில் அவதிப்பட வேண்டி வரும். பலரின் பகையையும் செய லையும் ஏற்க வேண்டி வரும். எனினும் மனம் தளராது செயல்படுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானத்தில் சந்திரன் அமர்ந்து தொழில் முன்னேற்றத்தை தருவார். வாகன சம்பந்தமான உதிரிப்பாகங்கள் டிராவல்ஸ் நிறுவனம் நல்ல வரவேற்பை பெறும். சுய முயற்சிகளுக்கு நல்ல பலன் தரும். பொருளாதாரத்தில நன்மையை பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையின் வளர்ச்சி பாதையை நோக்கி சென்று புதிய கலைஞர்களின் தொடர்புகளால் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ரசிகர்களின் அன்பை பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் மனநிலை சீராக இருந்தாலும் எதையோ இழந்தது போல ஒரு நினைவு மனதில் கவலை தரும். பெண்களின் வாழ்வில் சோதனை உண்டாகும். மன கருத்து வேறுபாடுகள் இருந்து வரும்.

**மாணவர்களுக்கு**

கல்வி பயிலும் மாணவர்களின் மனநிலை மாறி மாறி இருக்கும். தெய்வ வழிபாடு களை செய்து சரி செய்வது நல்லது.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

08.10.2015 வியாழன் மாலை 05.15 முதல் 11.10.2015 ஞாயிறு அதிகாலை 04.15 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

அரசாங்க காரியங்களில் அதிக ஈடுபாடுகளை கொண்டு விளங்குவீர்கள். மருத்துவ படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

சொந்த தொழில் செய்பவர்களுக்கு உங்களின் முயற்சிக்கு நல்ல பலன் கிட்டும். எதிர்பார்த்த தன வரவு வந்து சேரும்.

## ஸனாதன தர்மம்



ஒரு விதையானது நல்ல வளமான பூமியில் விதைக்கப்பட்டுத் தண்ணீர் விட்டு வளர்க்கப்பட்டு மிகப் பெரிய மரமாக வளர்த்த பிறகு சிலர் அதன் பழங்களை ருசிக்கிறார்கள். சிலர் அதன் இலைகளைப் பயன்படுத்துகிறார்கள். சிலர் அதன் கிளைகளை உபயோகப் படுத்துகிறார்கள். இது போன்றுதான், நமது ஸனாதன தர்மம். இந்து மதத்தின் அடிப்படையான நூல், புனித நூல் வேதம்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

குல தெய்வ வழிபாடுகளும் ஆன்மீக சுற்றுலாவும் சென்று வருவீர்கள். குடும்பத்தில் பல குழப்பம் நீங்கி சுமுகமான உறவுகள் உண்டாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** நீலம், வெண்மை, ஆரஞ்சு

**அதிர்ஷ்ட திசைகள்** மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்** வெள்ளி, திங்கள், ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்**

சிவன் கோவிலில் பிரதோசத்தன்று மாலை நந்திக்கு விளக்கு போட்டு தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் பொடி அர்ச்சனை செய்து வழிபட்டு வர தடைப்பட்ட காரியம் கைகூடும்.

# ஆறு உயிர்கள் ஓர் உடலில் வாழ்ந்த அதிசயம்

தமிழ்நாட்டில் நாம் முருகனென வழிபடும் சுப்பிரமணியனது கதை சற்றே சுவாரஸ்யமானது. சிவனை யகக்ஷ ஸ்வரூபன் என்று அழைக்கிறோம். அவன் இவ்வுலகத்தைச் சேர்ந்தவன் அல்ல.அவன் குறிப்பிட்ட விதமான சில சடங்குகளைச் செய்து வந்ததால், அவனுக்கு சில குணங்களுள்ள மனைவி தேவைப்பட்டாள். அவனுக்கு மனித மனைவி கிடைத்தாலும் அவனது விந்தை ஏந்திக் கொண்டு குழந்தையை ஈன்று தரும் ஒரு துணைவி அவனுக்கு அமையவில்லை. பார்வதியால், சிவனின் விந்தை தனக்குள் ஏந்திக் கொள்ள முடியாததால், 6 யக்ஷ குலப் பெண்களை அழைத்து வந்தனர். அவனுடைய விந்து அவர்களுடன் பகிரப்பட்டது. அவர்களாலும் சிவனின் விந்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அது புனிதமான வேள்வியில் விடப்பட்டது.

சிவனின் வாரிசைக் காணத் துடித்துக் கொண்டிருந்த பார்வதி, இதைப் பார்த்ததும் பேரார்வம் கொண்டாள். யக்ஷ குலப் பெண்களும் அந்தக் கருவை வெகு நாட்களுக்கு சுமக்கவில்லை. வெறும் 38, 40 நாள் கரு என்றே இதனைச் சொல்கிறார்கள்.

இந்தக் கருக்களை ஒன்று சேர்த்து அவற்றை தாமரை இலையில் வைத்து ஊட்டமளித்து வளர்த்தாள் பார்வதி. ஆறு குழந்தைகளும் தாமரை இலையில் வளர்ந்தன. ஒவ்வொன்றும் பிரம்மிப்பான குணங்களை கொண்டவையாய் இருந்தன. ஆனால் 6 உயிர்களுக்குமே தனியுடல் எடுப்பதற்கு தேவையான உடலமைப்பு இல்லை. ஒரு உயிர், இந்த ஆறு குணங்களையும் ஒருங்கே பெற்றால் அது அற்புதமான ஒரு உயிராக இருக்கும் என்பதைப் பார்த்தாள் பார்வதி. உடல் குறைபட்டோடு உள்ள இந்த உயிர்களை தன்னுடைய தாந்திரீக சக்தியால் ஒன்று சேர்ப்பதில் வெற்றி கண்டு, அவற்றை ஒரே குழந்தையாய் மாற்றினாள்.

இதனால் கார்த்திகேயன் ஆறுமுகன் ஆனான். அவனுடைய குணமும் ஆறுமுகமானது. ஆறு உயிர்களை ஓர் உடலிற்குள் அடைக்கும் ஒரு முயற்சி இது. பல தருணங்களில் இது போன்ற முயற்சிகள் நடைபெற்றிருந்தாலும் அவை யாவும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இங்கு ஈஷாவிலும் நாம் 2 உயிர்களை ஒரு உடலிற்குள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திருத்திருக்கிறோம். ஆனால் 6 உயிர் ஒருடலினுள் இருந்தது அரிதினும் அரிதான ஒரு நிகழ்வு இது போன்ற ஒரு நிகழ்வைப் பற்றி நாம் கேள்விப்பட்டதே இல்லை. பார்வதியின் அரும்முயற்சியால் 6 உயிர்கள் ஒருடலாய் வளர்ந்தன. அவன் தான் கார்த்திகேயன்.



தன் 8 வயதில், அவன் அசாத்தியமான சக்தியுடன், கற்பனைக்கு எட்டாத தனித் திறமைகளுடன் விளங்கினான். வீழ்த்த முடியாத போர் வீரனாகவும் திகழ்ந்தான். அவன் இருந்த விதம் ஒரு போராளியைப் போன்று இருந்தது. எங்கெல்லாம் அக்கிரமங்கள் நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் கார்த்திகேயன் இருந்தான். அதனை ஒரு முடிவிற்கு கொண்டு வந்தான்.

நேரம் முழுவதும் அக்கிரமங்களைத் தேடித் திரிந்தான் கார்த்திகேயன். அக்கிரமத்தைப் பார்த்த



இடங்களில் எல்லாம் வெட்டிச் சாய்த்தான். தற்போது கர்நாடக மாநிலத்திலுள்ள காட்டி சுப்பிரமண்யா என்னும் இடத்திற்கு வந்தபோது அங்கிருந்த நதியில் தன் வாளை கடைசி முறையாக கழுவினான். அங்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருந்து தியானம் செய்த பின், மலைமேல் ஏறி, அதன் உச்சியில் "நின்ற" நிலையில் தன் உடலை விட்டான். இன்றும் இம்மலை குமாரபர்வதம் என்று அவன் பெயரால் அழைக்கப்படுகிறது. பொதுவாக, யோகிகள் உடலை விடும் போது, ஒன்று அமர்ந்து கொண்டோ அல்லது படுத்துக் கொண்டோ உடல் விடுவது வழக்கம். ஆனால், இந்தத் தீவிர யோகி நின்று கொண்டே தன் உடலை நீத்தான்.



அவன் உடல்விட்ட அந்த இடம் சக்திப் பிரவா கமாய் திகழ்கிறது. சக்தி அதிர்வுகளுடன் விளங்கு கிறது. இதில் நம்ப முடியாத ஒரு விஷயம் என்னவென்றால், அந்த மலை உச்சிக்கு போய், அங்கிருக்கும் சில கற்களைப் புரட்டிப் பார்த்தால், அவை யாவும் ஆறு முகங்களை செலுத்தி வைத்ததைப் போல் இருக்கின்றன. குமார பர்வத மலை உச்சிக்கு செல்வதே கடினம். அது போன்ற ஓரிடத்தில் எங்கேயோ லேசாகத் தோண்டினால் ஒரு ஆறுமுக கல் கிடைக்கிறது. இதனை சண்முக லிங்கம் என்கிறார்கள். இந்த கற்கள் மிக மிக சக்தி வாய்ந்தவைகளாக உள்ளன. இந்த கற்கள், இந்த வடிவம் பெற்றமைக்கு காரணம், அவன் விட்டுச் சென்ற அந்த சக்தி சூழ்நிலை அவனது ஆறுமுக சக்தி, அங்கிருக்கும் கற்களையும் விட்டு வைக்கவில்லை. அந்த இடத்தில் எதுவுமே அவனது சக்தி நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள இயலாத வகையில் இருக்கிறது. சுப்பரமணியன் ஒரு பேரற்புதம்.

ஆனால் அவன் குறிப்பிட்ட ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து, அதன்படி வாழ்ந்தான். தனக்கு 21 வயது இருக்கும்போதே அவன் தன் உடலை நீத்தான். பெரும்பாலான பால யோகிகளின் நிலை இப்படித்தான் மிகச் சிறிய வயதிலேயே அவர்கள் தங்கள் உடலை விட்டுச் சென்று விடுவர்.

தமிழில் சுப்ரமணிய னுக்கு முருகன் என்ற பெயருள்ளது எத்தனை பொருத்தமான ஒரு விஷயம்! முருகன் என்றால் அழகு என்று கேள்விப்பட்டேன். அவன் அத்தனை அற்புதமான ஒரு உயிராக வாழ்ந்தான். அந்த அழகு அவனிருந்த அத்தனை இடத்திலும் பிரதிபலித்தது.

**– சத்குரு ஜக்கி வாசுதேவ்**

## மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்
## 18.09.2015 முதல் 17.10.2015 வரை

# கும்பம்

வசதிகளைப்பற்றி கவலைப்படாமல் எதையும் சிறப்பாக செய்யும் கும்பராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை பெற்று திகழ்வதும் தொழில் ஸ்தானத்தில் ராசிநாதன் அமர்வதும் மேன்மையான பலன்களை தரும்.

### பணியாளர்களுக்கு

தோட்ட தொழிலாளர்களின் நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தம் ஏற்படும். தொழிற்சங்க கூட்டமைப்பு கலந்து பேசும் வாய்ப்பு அமையும், பொருளாதாரம் சிறக்கும்

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

நல்ல மனிதர்களின் சேர்க்கையும், கடந்த கால கசப்பான அனுபவங்களின் எதிர்பார்ப்பும் நல்ல பலன்களை தரும். பொருளாதாரத்தின் தரம் உயரும்.

### சோதிடம் பொய்ப்பதில்லை



சோதிடம் கடல் போன்றது தான். அந்த சாஸ்திரம், மனிதனின் வாழ்க்கை மேன்மை அடைய கடவுளால் கொடுக்கப்பட்டது. அவை எந்தக் காலத்திலும் பொய்க் காது. நாம் அளித்த விவரங்களில் ஏதேனும் மாறுதல் இருந்தாலோ, ஜோதிடரின் கணிப்புகளில் ஏதேனும் தவறுகள் இருந்தாலோ, அது ஜோதிடக் கலையின் மீது தவறு இல்லை. மனிதனின் மீதுதான்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் ஏற்றமான காலமாக அமையும். ராசி அதிபதி தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து உங்களுக்கு ஊக்கம் தருவார். ஏமாற்றமான சூழ்நிலை மாறி நன்மை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையில் சேவைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். அலங்கார செட்டுகள், மேடை அலங்காரம் கலைநயத்துடன் செய்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெறுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் வளர்ச்சி நன்றாக அமையும் திடீர் வரன் ஒருசிலருக்கு அமையும். கருத்து வேறுபாடுகளை களைந்து வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

### மாணவர்களுக்கு

உயர்கல்வி நன்றாக இருக்கும் அரசாங்க உத்தியோகம் சம்பந்தமான தேர்வுகளில் நல்ல மதிப்பை பெறுவீர்கள். வளர்ச்சி பாதையை எட்டுவீர்கள்.

### நட்சத்திர பலன்கள்:

#### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்

சகோதரர்களின் எண்ணங்களை செயல் படுத்தி நன்மையை பெறுவீர்கள். முக்கிய முடிவு களை எடுத்து கருத்து வேறு பாடுகளுக்கு நல்ல முடிவுகளை எடுப்பீர்கள்.

#### சதயம் 1,2,3,4 ஆம் பாதங்கள்

தொழிலில் பல அனுபவங் களை பெறுவீர்கள். வெளிநாட்டு தொடர்புகளால் முன்னேற்றம் காண்பீர்கள் பொருளாதாரம் சிறக்கும்.

#### பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

திருமண காரியம் கை கூடும், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வரவுகளுக்கு தகுந்த செலவுகளை செய்வீர்கள், பொருளாதார நன்மைகளை அடைவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், மெருண், இளம்மஞ்சள்.

**அதிர்ஷ்ட திசைகள்:** மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** சனி, வியாழன், வெள்ளி


**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்:**

வியாழக்கிழமை காலை 7 மணிக்குள் விநாயகரை வணங்கி விடலை காய் உடைத்து வணங்கி வர சகல காரியமும் அனுகூலமாகும்.

நமஸ்காரம் ஒரு மிகப் பெரிய வழிபாடு. மனதில் இருக்கக்கூடிய மாசுகளை உடனடியாகப் போக்ககூடிய கிரியை பெரியவர்களைப் பார்த்தவுடனேயே அவர்களை நமஸ்கரிக்க வேண்டும் என்பது நமது வழக்கமாக இருந்தது. நான் என்ற அகங்காரத்தை, கர்வத்தை உடனே போக்கக்கூடியது நமஸ்காரம்.



பொதுவாக பெரியவர்கள் கிழக்கு நோக்கியும் நமஸ்கரிப்பவர்கள் மேற்கு அல்லது வடக்கு நோக்கியும் இருத்தல் நல்லது. நாம் பழையபடி, வீட்டில் பெரியவர்களை நமஸ்கரித்து அந்த நாளைத் தொடங்குவது என்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நம் குழந்தைகள் நம்மை வணங்கும்போது, அவர்களைத் தடுக்காமல் உற்சாகப்படுத்தி வழிநடத்தினோமானால், இந்த நடைமுறை இக்கால கட்டத்தில் நமக்குப் பெரிதும் உதவும் அவர்கள் நம்மை நமஸ்கரிக்கும் முன், நாம் நம் பெற்றோர்களை நமஸ்கரித்து



# நமஸ்காரம் ஒரு மிகச்சிறந்த வழிபாடு!


ஒரு சிறந்த முன்னுதாரணமாக விளங்கவேண்டும். இதேபோன்று தாம்பூலம் கொடுப் பவர்கள் கிழக்கு நோக்கியும், அதைப் பெற்றுக் கொள்பவர்கள் அவர்களுக்கு நேரெதிராகவும் இருந்து கொண்டு வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லாமையினால் கொடுப்பது அல்ல தாம்பூலம். அன்பின் வெளிப்பாடே தாம்பூலம். உலகில் உள்ள அனைத்து மகளிரும் பராசக்தியின் உருவங்களே!

அதனால்தான், எப்படி பராசக்தியை, பகவதியை நாம் அலங்கரித்து உபசாரம் செய்து திருப்திப்படுத்தி மகிழ்கிறோமோ, அதுபோன்று, அவனின் அம்சமான பெண்களைத் திருப்திப்படுத்துவதினால், அந்தப் பராசக்தி திருப்தி அடைகிறாள். பெண்மை திருப்தி அடைந்தால், இயற்கை நல்ல நிலையில் இருக்கும் நம் முன்னோர்கள், இப்படிப்பல காரணங்களினால் தான் பல நடைமுறைகளை நாம் பின்பற்றுமாறு பணித்திருக்கிறார்கள்.

தாம்பூலம் தருவது என்பது மிக ஆடம்பரமாக பொருள்களை, நமது செல்வச் சிறப்புகளை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் என்று தவறாகப் புரிந்து கொள்ளாமல், இது அந்தப் பராசக்தியையே திருப்திப்படுத்தக்கூடியது என்று புரிந்து கொண்டு ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், அனைவருக்கும் ஒரே மாதிரி, எது முடிகிறதோ அதை மிகுந்த அன்புடன் அளிப்பது மிகவும் சிறப்புடையது. பொருள் என்று ஒன்றுமே கொடுக்க முடியவில்லை என்றால் கூட, குறைந்தபட்சம் குங்குமாவது கொடுத்து திருப்திப்படுத்த வேண்டும்.

வீட்டுக்கு வரும் பெண்களை எக்காரணத்தைக் கொண்டும் வெறுங்கையுடன் அனுப்பக் கூடாது. பெண்கள் திருப்தியடைந்தால் அந்தக் குடும்பமும், நாடும், அரசனும் நலமாக வாழும் என்பது நம் முன்னோர்கள் கண்ட அனுபவ உண்மை.

இப்போது நாம் அனுபவிக்கும் பல பிரச்சினைகளுக்கு முதற்காரணம். பெண்கள் சரியாக நடத்தப்படாததினால்தான் என்று புரிந்து கொண்டு, நாம் நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.



# இனிமையின் உறைவிடமாய் விளங்கிய குட்ச மகரிஷி

புராண காலத்தில் வாழ்ந்திருந்த மகரிஷிகள் மன்னர்களுக்கும், மக்களுக்கும், தம்முடைய சீடர்களுக்கும் அறநெறியோடு கூடிய நல்ல வழிகளை எடுத்துக் காட்டி சீரிய வாழ்விற்கு முன்னோடிகளாய் திகழ்ந்தார்கள்.

இவர்களில் பலர் தர்ம சாஸ்திரங்களை தழுவிய மிக உயர்ந்த நூல்களையும் மருத்துவ அடிப்படையிலான மக்களுக்கு பயன்படுகின்ற மருத்துவ நூல்களையும் எழுதி வருங்கால மக்களுக்கு வழிகாட்டினார்கள்.

குட்ச மகரிஷி அவருடைய இனிமையான அணுகுமுறையின் காரணமாக எல்லோராலும் விரும்பப்பட்ட ஒரு மகரிஷியாய் விளங்கினார். இவர் ராஜரிஷி ரூரு என்பவரின் மகனாவார். சப்த மகரிஷிகளில் ஒருவராய் போற்றப்படும் குட்ச மகரிஷி 85 ருத்ர சூத்திரங்களில் 65ஐ தமதாக அருளியிருக்கின்றார்.

புரோக்ஷண மந்திரம் என்பது ஓம் பூ ஓம் புவ ஓம் சுவஹ என்பவற்றை உள்ளடக்கிய தாக உள்ளது. சாதாரணமாக நீருக்கு மற்ற பொருட்களை சுத்தம் செய்யும் தன்மை இருக் கின்றது. நீர், எதை தொட்டாலும் அதிலிருக்கும் மாசுகளையும் தூசுகளையும் அகற்றும் தன்மை உடையது.

இந்த சுத்தப்படுத்தும் தன்மை தண்ணீருக்கு தருவதே புரோக்ஷண மந்திரமாகும். தண்ணீருக்கு சுத்தப் படுத்தும் தன்மையை மந்திரமாய் சக்தியாய் கொடுத்தவர்கள் அத்திரி முனிவர், பிருகு முனிவர் மற்றும் குட்ச மகரிஷி என தைத்திரிய சமிதை கூறுகின்றது. குட்ச மகரிஷிரிக் வேதத்தின் சில பகுதிகளை பகுத்து பாடல்களாக வழங்கியிருக்கின்றார்.

வேதங்களில் நாற்பது முதல் ஐம்பது தடவைகள் வெவ்வேறு இடங்களில் குட்ச மகரிஷி பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

குட்ச மகரிஷி தமது ரூருவின் எதிரிகளை தகர்த்து எறியுமாறு இந்திரனிடம் வேண்டிக் கொண்டார். இவ்விதமாக ரூருவின் எதிரிகள் இந்திரனால் தகர்க்கப்பட்டார்கள்.

இந்த வெற்றியை கொண்டாடு வதற்காக இந்திரபகவான குட்ச மகரிஷியை இந்திரலோகத்திற்கு அழைத்ததாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

ரிக் வேதத்தில் வாம தேவருக்கும் இந்திரனுக்கும் இடையில் ஏற்பட்டதாக சொல்லப்படும் சம்பாஷணை ஒன்றில், குட்ச மகரிஷியும் இந்திரதேவனும் உருவத்தில் ஒரே மாதிரியாக காணப்பட்டார்கள் என்பது அறியப்படுகின்றது.

மேலும் ஒரே உருவத்தை கொண்ட இந்த இருவரில் தன்னுடைய கணவன் இந்திரன் யார் என்பதை அடையாளம் கண்டறிவதற்கு ஒரு காலகட்டத்தில் இந்திராணியே தடுமாறினாள் என்றும் சொல்லப்படுகின்றது. ரிக் வேதத்தில் காணப்படுகின்ற ஒரு சூத்திரம் ஏழு மந்திரங்களை கொண்டு விளங்குகின்றது.

இதை தான் இயற்றியது என்று சொல்லிக் கொள்வதை காட்டிலும் இது ஆங்கரீச மகரிஷியின் அனுகிரகத்தால் விளைந்தது தான் என்று பெருமையுடன் கூறுகின்றார் குட்ச மகரிஷி.

அனுதினமும் காயத்திரி மந்திரத்தை உச்சரிப்பவர்களுக்காக, புரோக்ஷண மந்திரத்தில் நான்கா

வதாக வியாகிரித்தி ஆகிய சுவாகா என்பதனை கண்டுபிடித்தார்

குட்ச மகரிஷி. தன்னுடைய குருவான ஆங் கீரசரின் மீது மிகச் சிறந்த அன்பையும் பக்தி யையும் கொண்டிருந்தார். சப்தரிஷிகளில் கடை சியாக குறிப்பிடப்படும்

ஒரு ரிக் வேதப்பாடலில் குட்ச மகரிஷியை அர்ஜுனேயா எனவும் அர்ஜுனுடைய மகன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திரனுடன் மிகுந்த தொடர்புகளை கொண் டிருந்ததால் குட்ச மகரிஷி இந்திரகுட்சா என அழைக்கப்பட்டார்.

இவர் தம்முடைய சீடர்களிடமும் மக்களிட மும் மன்னர் பெருமக்களிடமும் மிகுந்த அன்பு பாராட்டி இனிமையாக பழகும் பழக்கம் கொண் டிருந்ததை முன்னிட்டு இனிய ரிஷி என்னும் அடைமொழியையும் பெற்றிருந்தார்.

ஒரு சமயத்தில் குட்ச மகரிஷி ஆழமான கிணறு ஒன்றில் விழுந்து விடும்படியான சந் தர்ப்பம் உண்டானது. அச்சமயத்தில் இந்திரன் துரிதமாக வந்து அவரை காப்பாற்றியதாக புராண குறிப்புகள் கூறுகின்றன. இந்த சம்பவம் ரிக் வேதத்தில் 10ஆவது பகுதியிலும் குறிப் பிடப் பட்டுள்ளது.


குட்ச மகரிஷி ஏனைய முனி புங்கவர்கள் மற்றும் மகரிஷிகளைப் போலவே, நவகிரகங் களின் தலைவராகிய சூரிய பகவானின் மீது அளப்பரிய பக்தியையும் பாசத்தையும் கொண்டி ருந்தார்.

சூரிய பகவானை குலதெய்வமாக கொண்டிருந்த ரகு குலத்தை குட்ச மகரிஷி ஆசீர்வதித்ததாக காளிதாசரின் ரகு வம்சத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குட்ச மகரிஷி அக்னி பகவானை பல வடிவங்களில் வழிபடுவதையும் வழக்கமாக கொண்டிருந்தார். குட்ச மகரிஷியின் பெருமைகள் ரிக் வேதத்தில் மட்டுமல்லாது யஜுர் மற்றும் சாம வேதங்களிலும் கூட குறிப்பி டப்பட்டுள்ளன.


– ஜெயா நாகேந்திரன்


# சுதாமாவின் உண்மை பக்தி!



தன் அருமை நண்பனாகிய சுதாமாவுக்கு அவருடைய வறுமைகள் நீங்கும் வகையில் பொன்னையும் பொருளையும் அளவில்லாமல் கொடுத்தார் கிருஷ்ணர். ஆனால் இதையெல்லாம் பார்த்த பின்பும் சுதாமாவிற்கு மனதில் ஒரு ஏக்கம் இருந்து கொண்டிருந்தது. "கிருஷ்ணா! என் அருமை நண்பனே! மாயவனே! என்னை ஏமாற்றி விட்டாயடா! நான் உன் மீது வைத்திருக்கும் பக்திக்கு இவ்வளவு தான் மரியாதையா. இந்த அழிகின்ற செல்வத்தை தேடியா நான் உன்னிடம் ஓடி வந்தேன். நான் உன்னிடம் தினமும் கேட்பதெல்லாம் வைகுண்டத்தில் ஓர் இடம்... உன் பாத தரிசனத்தை தினமும் பாக்கியம்... இந்த நிரந்தர செல்வத்தை நாடியல்லவா உன் பாதங்களை தேடி வந்தேன்" என்று கூறி அழத் தொடங்கினார் சுதாமா.


நண்பனின் அழு குரலால் உருகி போன கிருஷ்ணர் சங்கு சக்கரதாரியாக விஸ்வரூபம் எடுத்து சுதாமாவின் முன் நின்றார். அவரை அப்படியே தன்னுள் இழுத்துக் கொண்டார், வைகுண்டமும் அழைத்துச் சென்றார். இவ்விதமாக சுதாமாவின் உண்மையான பக்தி இறைவனின் பாதங்களை அடையச் செய்தது.






வெங்கடேசப் பெருமாளை வருடம் முழுவதும் மிகுந்த பக்தியோடு வழிபடுவது புரட்டாதி மாதம் முழுவதும் சைவ உணவுண்டு பெருமாளை வணங்குவது, புரட்டாதிச் சனிக்கிழமைகளில் ஒரு பொழுதுண்டு விரதமிருந்து எம்பெருமாளைப் பூஜிப்பது என்பதையெல்லாம் வழக்கமாகக் கொண்டிருக்கும் பெருமாள் இவ்வைணவத் தலத்தில் விழாக்களும் மிகச் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீராம நவமி, ஜென்மாஸ்டமி, ரதசப்தமி, வசந்தோற்வசம் மற்றும் வருடாந்திர மகோற்சவமும் ஒவ்வொரு ஆண்டும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றில் வருடாந்திர மகோற்சவ விழா மிக முக்கியமானதும் புனிதமானது

# திருப்பதி பிரம்மோற்சவ விழாக்கள்!



பக்தர்களுக்கு திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் சந்நிதியில் புரட்டாதி மாதத்தில் நடைபெறும் மகோற்சவம்தான் உலகின் மிகப் பெரிய தெய்வீகத் திருவிழாவாகும். இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்திலுள்ளது திருமலை வெங்கடேசப் பெருமாளின் ஆலயம். கடல் மட்டத்திலிருந்து மூவாயிரத்து இருநூறு அடி உயரத்தில் இருக்கின்ற "வெங்கடாத்ரி" மலையில் அமைந்துள்ளது. ஆலயம் சுமார் பத்தரை சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மிக அழகாகவும், கம்பீரமாகவும் அமைந்துள்ளது. பெருமாளின் நூற்று எட்டு திவ்ய தேசங்களில் மிக முக்கியமானதாக விளங்கும் இப்புண்ணியச் சேத்திரத்தில் ஆதிசேசவனின் ஏழு தலைகளை நினைவூட்டுகின்ற வகையிலே ஏழு மலைகள் உள்ளன. இதனால் இத்திருத்தலத்தினை "ஷேஷாச்சலம்" என்றும் அழைக்கின்றார்கள்.

உலகின் மிக அதிகமான செல்வச் செழிப்புள்ள ஆகும். மனித இனத்திற்கு பாதுகாப்பளிப்பதற்காக நன்றி செலுத்தும் பொருட்டு இங்குள்ள புனிதத் தீர்த்தமான புஷ்கரணியின் கரையில் முதல் முதலில் பிரம்ம தேவரே இந்த விழாவினை சிறப்பாக நடத்தினார் எனப் புராணங்கள் கூறுகின்றன. ஆகவேதான் இந்த வருடாந்திர மகோற்சவத்தை பிரம்மோற்சவம் என்றும் அழைக்கின்றனர். இதன் உண்மையான பொருள் பிரம்மனின் உற்சவம் என்பதாகும். இவ்விழா புரட்டாதி மாதத்தில் ஒன்பது நாட்களுக்கு நடைபெறுகின்றது. திருவிழாவின் முதல் நாளுக்கு முந்திய நாள் மாலை அன்குரார்பனா என்னும் செல்வச் செழிப்பிற்கான விதை நடுவிழா நடைபெறுகின்றது. முதல் நாள் விழாவில் துவஜரோஹண என்கின்ற கருடக் கொடியேற்று விழா பிரதான துவஜஸ்தம்பத்தில் செய்யப்படுகின்றது. கருடன் தேவலோகம் சென்று தேவர்களை இவ்விழாவிற்கு அழைப்பதாகவும்



நம்பப்படுகின்றது. ஒன்பது நாள் மகோற்சவ விழாவிலும் மதக் கைங்கரியங்களும், தினசரி ஹோமம் வளர்த்தலும் வெவ்வேறு வாகனங்களில் சுவாமியின் ரத ஊர்வலமும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் உற்சவ விக்கிரகம் ஊர்வலத்திற்கு முன்பாக வெவ்வேறு விதங்களில் மிகவும் அழகாக அலங்காரம் செய்யப்படுகின்றது. நிறைவு பெறும் ஒன்பதாம் நாள் ஸ்ரீபாலாஜியின் ஜன்ம நட்சத்திரத்தில் உற்சவ மூர்த்திக்கு விஷேட அபிஷேகங்களுடன் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இத்தலத்தில் சுதர்சன சக்கரம் புஷ்கரணி தீர்த்தத்தில் நிராடிய பின்பே பக்தர்கள் அனைவரும் இப்புனிதத் தீர்த்தத்தில் நீராடுகின்றனர். நீராட்டலுக்குப் பின் சுதர்சன சக்கரம் ஒரு பெரிய பீடத்தில் வைக்கப்பட்டு, அதன்கீழ் பக்தர்கள் பிரவேசித்து பரந்தாமனின் ஆசீர்வாதத்தைப் பெறுகின்றனர். மகோற்சவ வைபவங்கள் யாவும், துவஜவரோகணத்துடன், அதாவது கருடக் கொடி இறக்கத்துடன் முறைப்படி நிறைவு பெறுகின்றன. விழாவிற்கு வருகை தந்த கடவுட்களுக்கும் ரிஷிபுங்கவர்களுக்கும் வேத மந்திரங்கள் ஓதி வழியனுப்பி வைக்கிறார்கள் ஆலயத்தின் அர்ச்சகர்கள்.

பாலையும் தண்ணீரையும் பிரிக்கின்ற தூய்மையின் அடையாளமான அன்னப்பறவையைப் போல திருப்பதித் தலத்தில் ஏழுமலை ஆளுகின்ற ஏழுமலையான் மனிதர்களின் பாவங்களைத் துடைத்தெடுத்து அவர்களின் புண்ணியங்களுக்கேற்ப ஆசீர்வதிக்கின்றார். சக்தி மிக்க ஏழு மற்றும் ஐந்து தலைகளைக் கொண்ட பெரிய சிறிய ஆதிசேஷப் பாம்பானது பரந்தாமனின் வாகனமாய் மகோற்சவத்தில் பங்கேற்பது சரணாகதித் தத்துவத்தின் மேன்மையை விளக்குவதாய் அமைந்துள்ளது. மகோற்சவப் பெருவிழா தொடங்குவதற்கு முதல் நாள் துவஜரோஹண உற்சவத்தின் மூலமாகவும் கருட உற்சவத்தின் மூலமாகவும் திருப்பதி வெங்கடேசப் பெருமாளை இறைஞ்சிச் செய்யப்படுகின்ற பிரார்த்தனைகள் மனிதர்கள் நல்ல பண்புகளோடு கூடிய மாசற்ற வாழ்க்கையைப் பெறுவதற்காகவே ஏற்பட்டவையாகும்.

**கருட பகவானின் வேண்டுதலுக்கிணங்க ஏழுமலைவாசன் அங்கேயே எப்பொழுதும் தங்கி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.**

**கருடாழ்வார் திருப்பதித் தலத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாவண்ணம் வானிலிருந்து பாது காக்கின்றார்.**

மகோற்சவ விழாவானது லட்சக்கணக்கான பக்தர்களுக்கு பக்தியில் மூழ்கி பகவானைக் காணும் அரியதொரு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. இவ்விழாவில் பங்கேற்பதன் மூலமாக பக்தர்கள் "வைகுந்த அனுபவத்தைப்" பெறுகின்றார்கள். ஒவ்வொரு ஆண்டும் லட்சோபலட்சம் பக்தர்கள் மகோற்சவ விழா வைபவங்களில் கலந்து கொண்டு பெரும்பேறு அடைகின்றார்கள்.


✦ நவநீதம்



# சந்திரன் வழிபட்ட சோமநாதர்


1

தட்சன் தன் மனைவி அசக்கினி என்பவளுடன், இமயமலைச் சாரலைச் சேர்ந்த ஒரு பகுதியை அரசாட்சி செய்து வந்தான். அவனுக்கு 50 பெண்கள் பிறந்தார்கள். அவர்களில் 27 பெண்களைத் தட்சன் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.





2

சந்திரன் சில நாட்கள் தன் 27 மனைவிகளின் மீதும் சமமாக அன்பு செலுத்தினான். பிறகு அழகும் இளமையும் கொண்ட ரோகிணியிடம் மட்டும் அதிக அன்பு செலுத்த ஆரம்பித்தான். அதனால் மனம் வருந்திய மற்ற 26 பெண்களும்...











5 தட்சன் அறிவுரைக் கூறி சென்ற பிறகும் சந்திரன் தன் நடத்தையை மாற்றிக் கொளள்வில்லை. எனவே ரோகிணியைத் தவிர மற்ற 26 பெண்களும் மீண்டும் தட்சனிடம் சென்று தங்கள் மனக்குறையைக் கூறி அழுதார்கள்.

6 தட்சன் கோபத்துடன் சந்திரனிடம் சென்று...



7 தட்சனின் சாபத்தால் சந்திரனின் ஒளி குன்ற தொடங்கியது. அதனால் பயந்து போன சந்திரன் தேவர்களிடம் ஓடிச் சென்றான்.





8 எல்லோரும் பிரம்மதேவரிடம் சென்று சந்திரனின் நிலையை விளக்கினார்கள்.




9 தேவர்கள் அனைவரும் சந்திரனுக்காக பிரம்மதேவரிடம் மீண்டும் மீண்டும் பலவாறு பரிந்து பேசினார்கள்.



**10** சாபம் நீங்குவதற்குரிய வழியை அறிந்த சந்திரன் பிரவேசப்பட்டினம் சென்றான். அங்கு "சந்திர தீர்த்தம்" என்ற ஒரு நீர்நிலையை உண்டாக்கினான். அதன் அருகில் அவன் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, தினமும் பூஜை முதலியன செய்து வழிபட்டான். பத்து கோடி முறை சிவநாம ஜபம் செய்தான்.




**11** கருணைக்கடலாகிய சிவபெருமான் சந்திரன் முன்பு தோன்றினார்.




**12**




"சோமன்" என்றால் சந்திரன் என்பது பொருள். அதனால் பிரவேசப் பட்டினத்தில் சந்திரன் நிறுவிய சிவலிங்கம் "சோமநாதர்" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இன்றும் இங்குள்ள சந்திர தீர்த்தத்தில் நீராடி சோமநாதரை வழிபடுபவர்களின் பிணிகள் நீங்குகின்றன. பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் இந்த சோமநாதனும் ஒன்றாகும். இன்றும் இலட்சக்கணக்கான பக்தர்கள் சென்று வழிபடும் சிறந்த சிவ தலமாக சோமநாதம் விளங்கி வருகிறது.

முற்றும்





# ஐ.டி. துறையில் இளைஞர்கள்?


நீங்கள் கூடுதல் புத்திசாலிகள் கெட்டிக் காரர்கள் பளிச்சென்று ஒரு செய்தியை பிடித்துக் கொள்ளும் கூர்ந்த மதி உங்களுடையது வெற்றி உங்களுக்கு ஒரு விளையாட்டுப் பொருள் வாழ்க!

**பணம் மட்டும் வாழ்க்கை அல்ல**

பெற்றோர்கள் ஓய்வு பெறும் கடைசி முறை வாங்கிய சம்பளத்தை நீங்கள் முதல் முறையே வாங்குவதால் பெற்றோரை விடவும் உங்களை அதிக அறிவாளியாகவோ, திறமை உடையவரா கவோ, பெரிய மனிதராகவோ நினைத்து விட வேண்டாம்.

**வெளிநாட்டுப் பணம் வரலாம்... வெளி நாட்டுப் பண்பாடு வரலாமா?**

**பிற மனிதர்கள் எல்லோருமே நாம் பயன்படுத்திக் கொள்ள மட்டும் அல்ல.** பத்து ரூபாயை கூடுதல் சம்பளம் என்றதும் கம்பனியைக் கைகழுவுவது கொஞ்ச காலம் பெருமையாகத் தெரியலாம். ஆனால் இந்தத் துறையின் செயல்பாடே இதனால் ஸ்தம்பிக்க ஒரு நாளில் வாய்ப்பிருக்கிறது. உணவு. உறக்கம், ஓய்வு காலா காலத்தில் இல்லாதப்படி உடம்பை மனதைச் சீர் குலைத் தால் நாற்பது வயதுக்குப் பிறகு உயிர் வாழ்வதே பிரச்சனையாகி விடும். யோசியுங்கள்.



எப்போதும் ஏஸியில் இருப்பதால் உங்களுக்கு வியர்வையே வருவதில்லை. அது உடலுக்குக் கெடுதல் உடலை வியர்க்க விடுங்கள். தண்ணீர்த் தாகம் எடுக்காத போதும் நீர் அருந்துங்கள். பாத்ரூம் கழுவுதற்குப் பயன்படுத்த வேண்டிய குளிர்பானக் குவியலைக் கொஞ்சிக் கொஞ்சி குடிப்பதை விட்டு எலுமிச்சை, ஆரஞ்சு, ஆப்பிள் திராட்சை சாறு அருந்துங்கள் பார்லியும் சேர்த்துக் கொள்ளுங்கள். தினந்தோறும் நிகழ வேண்டிய காலைக் கடனை முடிக்க மாத்திரைகள் சாப்பிடுவது நல்லதல்ல அறிந்து கொள்ளுங்கள்.

உறவினர்களை அற்ப ஜந்து போல நினைக்க வேண்டாம். தம்பி, தங்கைகளைப் படிக்க வைக்க நிறைய செலவு செய்யுங்கள் குடும்பத்தின் பந்தம் பாசம் இவை Net.இல் download செய்ய முடியாதது. கண்களில் கவனம் வையுங்கள். உட்கார்ந்தே இருப்பதால் எடை கூடும். சர்க்கரை அதிகரிக்கும் கொலஸ்ட்ரால் பழுத்துக் கிடக்கும். மூளைக்கு வேலை என்பதால் B.P. சக்கைப் போடு போடும். எல்லாவற்றையும் எதிர்பார்த்து வெற்றி கொள்ளுங்கள்.

காதலிக்கும் போது அல்லது திருமணம் தேடும் போது சம்பளம், வேலை வாய்ப்பு, செல வழிக்கும் இயல்பு இவற்றை இரண்டாம் பட்சமாக வைத்துக் கொண்டு ஒழுக்கம், குணம், பண்பாடான குடும்பம் போன்ற விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். இன்று போலவே என்றும் சம்பளம் வரும் என்று கனவு காணாதீர்கள். சேமிக்க, சிக்கனமாய் செலவழிக்க பழகுங்கள். உங்களால் அதிகம் செலவழிக்க முடியும் என்கிற ஒரே காரணத்திற்காகச் சிரமப்பட்டு சம்பாதிக்கிறவர்கள் மனம் புண்படும் படும் படி ஜம்பம் அடிக்காதீர்கள். அந்நிய நாட்டின் தயவில் அதிகம் சம்பாதிப்பவர்களாகிய பலரும் இந்த நாட்டு வெற்றிக்கு உழைப்பவரை இளக்காரமாக நினைக்காதீர்கள். வெளிநாடுகளில் வேலை பார்த்து விட்டு ஊருக்குத் திரும்பும்போது ஹொட் டேல்களில் தங்கிக் கொண்டு உறவினர்களை ஏன் அப்பா, அம்மாவைக் கூட வந்து பார். ஆட்டோவுக்கு வேண்டுமானால் நான் காசு தருகிறேன் என்று அசிங்கப் படுத்தாதீர்கள். பணத்தை விட ரத்தம் கனமானது. வெளிநாடுகளில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கு எதிர்ப்புச் சக்தி குறைவு என்பது உண்மை என்றாலும் தாத்தா பாட்டியைப் பிள்ளையைக் கொஞ்சம் கொஞ்ச் விடுங்கள் உண ஊட்ட அனுமதி கொடுங்கள்.

உங்களை மிகவும் காயப்படுத்துவதாக இந்தப் பதில் அமைந்தால் என்னை மன்னியுங்கள். உங்களை நோகடிப்பது என் நோக்கமல்ல. இவை யாவும் உங்களிடம் சொல்ல முடியாமல் உங்கள் பெற்றோர்கள் என்னிடம் புலம்பிய புலம்பல்கள் நான் வெறும் தபால்காரன். அவ்வளவே நமக்கு வரும் எந்த நோட்டிஸுக்கும் தபால்காரனை நோக முடியாது.

– சுகிசிவம்

## மன்மத ஆண்டு புரட்டாதி மாதம்

## 18.09.2015 முதல் 17.10.2015 வரை



# மீனம்

தெய்வ நம்பிக்கையும், பொறுமை குணம் கொண்ட மீனராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராகு கேது சாதகமாக இல்லாவிட்டாலும் உங்களுக்கு பெரியபாதிப்பை தராது. யோகாதிபதி செவ்வாய் பெறுவது நல்ல பலன்களை தரும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பணியாளர்களுக்கு

பணியில் பல கஷ்டங்களை அடைந்தாலும் இறுதியில் உங்களுக்கு நல்ல பலனே கிடைக்கும். எந்த பொறுப்புகளிலும் இல்லாமலே எல்லோரின் அன்பையும் பெறுவீர்கள் பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும்.

### பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் எல்லோரையும் அனுசரிக்கும் குணம் இயற்கையாக இருக்கும் சிலருக்கு புதிய பதவிகள் கிடைக்கும். கௌரவ பதவிகளும் கிடைக்கும். பொருளாதாரம் சிறக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் போட்டிகளையும், பல சிரமங்களையும் கடந்து வருவீர்கள். பொருளாதார சிக்கல்கள் உங்களின் மனதிற்கு வேதனையை தரும். கடல்சார்ந்த தொழில்களில் ஓரளவு ஆதாயம் கிட்டும் பொருளாதார நிலை சீராக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் பாடுபட்டால்தான் பலன் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சிலருக்கு நாணயம் தவறும் நிலை உண்டாகும். கலைஞர்களின் ஆதரவுகளால் ஓரளவு சரி செய்து கொள்வீர்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

### பெண்களுக்கு

பெண்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையிலும் குடும்ப நிலையிலும் பல சோதனைகளை அமைத்து கொள்வீர்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

மருத்துவ கல்வியில் மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். உயர் கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சுய முயற்சி நல்ல பலனை தரும்.

### மனம் ஒன்றிட

மனம் ஒன்றுவதற்காகத் தானே பூஜைகள். மனம் ஒரு முகப்படுவதற்கு நாம் செய்யும் மந்திர வழிபாடுகள் ஊதுவத்தி காட்டுதல், தீபம் காட்டுதல், நைவேத்தியம் அளித்தில், கற்பூர ஆரத்தி சமர்ப்பித்தல், ஜபம் செய்தல் போன்றவை கண்டிப்பாக வழிவகுக்கும்

### நட்சத்திர பலன்கள்:

**பூரட்டாதி 4 ஆம் பாதம்**

எதையும் அவசரமின்றி செயல்படும் நீங்கள் கருத்துகளை சரியாக சொல்லி எல்லோரிடமும் நற்பெயர் பெறுவீர்கள். பொருளாதார நன்மை கிட்டும்

**உத்திரட்டாதி 1,2,3,4 ஆம் பாதங்கள்**

சரியான இடத்தில் தேர்வு செய்து தொழிலில் துவங்கி இலக்குகளை ஆராய்ச்சி செயல்படுவீர்கள், பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**ரேவதி 1,2,3,4 ஆம் பாதங்கள்**

பதவியில் இருந்தாலும் பக்குவமாக பேசி நல்ல செயல்களை மட்டும் செய்யும் பண்பு கங்களிடம் வெளிப்படும். பொருளாதாரம் சிறக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** மஞ்சள், சிவப்பு, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** வடகிழக்கு, கிழக்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி, திங்கள்


**இம்மாதம் நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள்:**

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் அம்மன் வழிபாடு செய்து நெய்விளக்கு போடவும். செவ்வாய்க்கிழமை சுப்ரமணியரை வணங்கி பருப்பு சாதம் தானம் செய்ய தீய காரியம் நீங்கி நன்மை உண்டாகும்.

இம்மாத ராசிபலனை
உங்களுக்கு தருபவர்:
சோதிடர் வாடிப்பட்டி
R.ஆனந்தன், M.A., D.V.D.A.
0091 97893 41554



மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் ஆடிப்பூர விழா ஆகஸ்ட் 14, 15 மற்றும் 16 ந் திகதிகளில் மூன்று நாட்களுக்கு வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலச விளக்கு வேள்வி பூஜை, கஞ்சி வார்த்தல் மற்றும் பால் அபிசேக




# மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில் ஆடிப்பூர விழா!

நிகழ்ச்சிகளில் லட்சக்கணக்கான பக்தர்களும் பொது மக்களும் பக்தி பெருக்கோடு கலந்து கொண்டார்கள். விழாவை முன்னிட்டு சித்தர் பீட முகப்பிலும் உள் பிரகாரங்களிலும் அலங்காரங்கள் அழகுற செய்யப்பட்டிருந்தன. விழாவன்று அதிகாலை 3.00 மணிக்கு மங்கள இசையுடன் விழா தொடங்கப்பட்டது. கருவறையில் ஆதிபராசக்தி அன்னைக்கும் சுயம்புவிற்கும் அபிசேக அலங்கார சிறப்பு ஆராதனைகள் செய்யப்பட்டன. காலை 9.00 மணிக்கு ஆன்மீக குரு அருள்திரு பங்காரு அடிகளார் சித்தர் பீடத்திற்கு வருகை தந்த போது மேளதாளங்கள் முழங்க அவருக்கு விழா பொருப்பாளர்கள் பாத பூஜை செய்து வரவேற்றார்கள்.

விழாவிற்கு பக்தர்கள் பெருமளவில் வருகை தந்திருந்தார்கள். வழக்கமாக நடைபெறும் அமாவாசை வேள்வியை ஆடிப்பூர அமாவாசை வேள்வியாக, மாலை 4.45 மணியளவில் பங்காரு அடிகளார் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த வேள்வியானது இரவு 1.00 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது. விழாவின் போது அம்மனுக்கு வேண்டுதல் செய்தவர்கள் திரளான அளவில் தீச்சட்டி எடுத்து வந்து வேண்டுதல் நிறைவேற்றினார்கள். முன்னதாக காலை 7.45 மணியளவில் ஆன்மீக குரு அடிகளார் வீட்டிலிருந்து லட்சுமி பங்காரு அடிகளாரால் எடுத்து வரப்பட்ட தாய் வீட்டு கஞ்சிக்கு சித்தர் பீடத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. அருள் திரு அடிகளார் முன்னிலையில் தாய் வீட்டு கஞ்சி கருவறை அம்மனுக்கு படைக்கப்பட்டது. விழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு உணவு, தண்ணீர், பழரச பானங்கள், பிஸ்கட்டுக்கள், தேனீர், காப்பி, ஐஸ்கிரீம், மோர், குழந்தைகளுக்கு பால் முதலியவைகளை செவ்வாடை பக்தர்கள் வழங்கினார்கள். விழா ஏற்பாடுகளை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்க தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் தலைமையில் இயக்கத்தின் கோவை திருப்பூர் மாவட்ட ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றங்கள் வெகுசிறப்பாக செய்திருந்தன.

– A.A. ராமன்





# மிகவும் பிரபலமான பரம்பரை மலையாள மாந்திரீகம்

உங்கள் காதலனோ அல்லது காதலியோ விலகிப்போகாமல் என்றைக்கும் உங்களை பிரியாமல் இருக்கவேண்டுமா ? வசியத்தின் மூலம் அதை நிரந்தரமாக இருக்கும்படி செய்து கொடுப்போம் உங்களுடைய எல்லா பிரச்சினைகளையும் தீர்த்து தருவோம்



*ஆண் பெண் வசிய மாந்திரீகத்தில் பாரம்பரிய நிபுணத்துவம் கொண்ட மஹா குரு*

**61 வருட அனுபவம் கொண்ட நம்பக சேவை**

**24 மணிநேரத்துள் பலன் கிடைக்கும் என்ற உத்தரவாதம்**

**இரகசியம் பேணப்படும்**

• உங்கள் காதலன் அல்லது காதலி உங்களை ஏமாற்றி உங்களை விட்டு விலகிச் சென்றுவிட்டாரா ?
• நீங்கள் ஏமாந்து விட்டீர்களா ? • பிள்ளைகள் உங்களை விட்டு விலகிப்போய் விட்டார்களா ?
• யாரை வேண்டுமானாலும் உங்கள் மேல் பிரியம் உள்ளவராக மாற்றிக்கொடுப்போம். • திருமணம் தள்ளிப் போகிறதா ? • குழந்தை பாக்கியம் இல்லையா ? முடித்துத் தருவோம். • வியாபாரம் விருத்தி பெறும். • வீட்டுக்கு காவல் செய்து தருவோம். • குடும்பம் விருத்தி பெறச் செய்வோம்.
• வெளிநாட்டு வேலை வாய்ப்பு, பரீட்சையில் வெற்றி, விற்க முடியாத காணி விற்பனையாக, சூனியம் வெட்டுதல், நோய் குணமாக என அனைத்து பிரச்சினைகளின் தீர்வுக்காக என்னிடம் நம்பி வாருங்கள்.

தபால் மூலம் பாதுகாப்பாக வீடுகளிற்கு வசியம் செய்து கொண்டுவருவதற்கு **Commercial Bank - A/C No : 8100095974** என்ற இலக்கத்திற்கு மாத்திரம் பணத்தை அனுப்பி SMS பண்ணவும் – **0765529844**

வெளிநாடுகளில் வசிப்போருக்கு விசேட காப்பு மந்திரம் அருளப்படும்

# ஜீவகாந்தி

தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்
**10.00 am - 6.00 pm Only**

**No.07-2/1** (2nd Floor), **W.A.** சில்வா மாவத்தை, வெள்ளவத்தை.
கொழும்பு -06. **TEL : 0770416205 / 0765529844**
**website : www.jeewakanthi.com**
**Email : jeewakanthi28@gmail.com**

சந்திப்பு : திங்கள், புதன், சனி, ஞாயிறு
நேரம் : 9.30 - 5.00 வரை
சந்திப்புக்கட்டணம் : 300.00

max adz



# குறைந்த விலையில் உங்கள் சேவைகள் சிறந்திட வேண்டுமா?



## உங்கள் விளம்பரங்களை இன்றே சோதிட கேசரியில் பிரசுரிக்க அழையுங்கள்


**DHAYANANDH 077 6066787**

ஸ்ரீ ராம ஜெயம்









# நிருபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீக ஸ்தாபனம்

## என் மந்திர சக்தியின் பலன் என்ன?



நல்ல பாம்பு ஆடுவது போல், நாக்களம் பூச்சிக்கு ஆடமுடியாது. இது போன்றே, மாந்திரீகத் துறையில் இனிக்க இனிக்க வசனங்கள் போட்டு விளம்பரம் செய்பவர்கள் சில காலங்களில் மூடு பனியைப்போல், அவர்களை அறியாமலேயே மறைந்து விடுகிறார்கள். என்னைப் பொறுத்த வரை, பாவம் செய்தவனா? கர்மம் செய்தவனா? அல்லது புண்ணியம் செய்தவனா? இவை அனைத்தும் கண்டறிந்து அவரவரின் கிரகப் பலன்களுக்கு அமைய திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பரிகாரம் செய்வதினாலே நினைத்தது நினைத்த படி நிறைவேறுகிறது. இது ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக (P.K.Samy Associate (Pvt) Ltd.) 46 வருட காலமாக இயங்கக் காரணம் எமது உண்மை யானதும் தனித்துவமானதுமான சேவையே. இத்துறையில் செலுத்தும் பணத்திற்கு வாடிக்கையாளர் பற்றுச் சீட்டு வழங்கும் ஒரே நிறுவனம் நாம் மட்டுமே.

மலையாள மாந்த்ரீக சித்தர்
பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

### வாடிக்கையாளர்கள் நல்வாழ்வே எமது குறிக்கோள் ஆகும்

01. ஓடிப் போன காதலன் காதலி தேடி வர வேண்டுமா?
02. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
03. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
04. கல்யாணம் கை கூட வேண்டுமா?
05. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
06. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
07. கைத்தொழிலில் முன்னேற்றம் வேண்டுமா?
08. குடி போதையில் நிவர்த்தி வேண்டுமா?
09. தீராத நோய்க்கு பரிகாரம் வேண்டுமா?
10. கடற்றொழில், இரும்பு வியாபாரம் மற்றும் புடவை வியாபாரங்கள் விருத்தி பெற வேண்டுமா?
11. ஆண்மை குறைபாடுகளா?
12. இழந்ததை மீட்க வேண்டுமா?
13. அச்சுட்டான் பலனுடனான காண்ட அடிப்படையில் தெட்டத் தெளிவான ஜாதகம் எழுதிக் கொள்ள.





**நம்பிக்கையுடன் செய்தால் உங்கள் காரியங்கள் கைகூடுவது நிச்சயம்.**

விரைவில் திருமணம் நடைபெற திட்டமிட்ட பரிகாரங்கள், முறையான செவ்வாய் ராகு தோஷ பரிகாரங்கள், பரிகாரத்தின் பின் திட்டமிட்ட திருமணத்திகதி குறித்துக்கொடுக்கப்படும்.

ஒருவர் மனதை வென்றெடுக்க எனக்கு மூன்று நாள் கால அவகாசமே போதுமானது. ஆண் பெண் வசியம் மூன்று நாளில் பலன் கிட்ட என்னை சந்திக்கலாம். வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை உண்டு.

அதிஷ்டத்துடன் வாழ அதிஷ்ட வலம்புரி சங்கு என்னிடம் உண்டு.





மாதக்கடைசியில் நடைபெறும் அக்கினி குண்டல பூஜையில் கலந்து
ஸ்ரீ துர்க்கா தேவியின் அருட்கடாட்சத்தை பெறுக....

அன்றைய தினம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்

அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம்

இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்

இரகசியம் பாதுகாக்கப்படும்

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

## மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

தலைமை காரியாலயம்
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 011 2342463, 011 2342464, 0777 378677
011 2470615 Fax: 011 2344831.
Email : drpksamy23@gmail.com

தொலைபேசியில் ஆலோசனை பெற
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 052 2222508, 052 2223093
052 2235097

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.